ஆண்டு 4] [இதழ் 1

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

பூலோக சிகரம் - திபேத்

★

திபேத்மீது சீனா பாய்ந்து சுமார் ஒரு மாதமாகிறது. அதைச் சீனா விழுங்கியாயிற்று என்றே தோன்றுகிறது. ஆனால், ஐ. நா. வில் இனி அதுபற்றி வாதப் பிரதிவாதங்கள் மும்முரமாயிருக்கும். திபேத்தைப்பற்றிய இந்தக் கட்டுரைக்கு ஆதாரம்: (1) 'இந்தியா க்வாட்டர்லி'யில் துவாரகாநாத் கச்ரு கட்டுரை; (2) 'காலிய'ரில் லோவேல் தாமஸ் கட்டுரை; (3) இந்தியா-பாகிஸ்தான் ஈயர்புக்; (4) 'அமிர்த பஜார் பத்திரிகை'யில் கே. பி. விச்வாஸ் கட்டுரை.

சரித்திரம்: இன்று "திபேத் எங்களையே சேர்ந்தது; எங்கள் ஆதிக்கத்துக்கு உட்பட்டது" என்று சொல்லி, அதன்மீது சீனா பாய்ந்து விட்டது. ஆனால், ஒரு காலத்தில் திபேத் பிரமாதமான ராணுவபலம் வாய்ந்திருந்தது. அதைக் கண்டு இந்தியாவும் சீனாவும் தங்கள்மீது என்று பாயுமோ என்று பயப்படும்படி இருந்தது. கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றிலிருந்து, அந்தக் காலத்திலே

திபேத்துக்குச் சீனு திறைசெலுத்திக்கொண்டிருந்தது என்ற விஷயம் புலனுகிறது. கி. பி. ஏழாம் நூற்ருண்டில் பௌத்தமதத்தைத் திபேத் கடைப்பிடித்தது. அது முதல் ராணுவபலத்தை விட்டுச் சாதுவாகிவிட்டது.

குப்ளே கான் என்ற முதல் மங்கோலியச் சக்கரவர்த்தி, ஆதியில் இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவர். பின்னுல் பௌத்த லாமா மதத்தை அவர் பின்பற்றினுர். அதிலிருந்து சீன மங்கோலியாவுக்கும் திபேத்துக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. கி. பி. பதினுரும் நூற்ருண்டில் மங்கோலியச் சிற்றரசர் ஒருவர்தான், இப்போதைய தலாய் லாமா பரம்பரையை ஸ்தாபித்தார்.

கி. பி. பதினெட்டாம் நூற்ருண்டில் திபேத்தியருக்கும் மங்கோலியருக்கும் சச்சரவு ஏற்பட்டது. அதுதான் சமயம் என்று சீன மஞ்சு வம்சத்து அரசர்கள் திபேத்தில் தலையை நுழைத்து ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினுர்கள். அன்று தொடங்கி, 1911-ஆம் ஞூ சீனப் புரட்சி ஏற்பட்டதுவரைக்கும் திபேத் தலைநகரான லாஸாவில் மஞ்சு வம்ச அரசர்களின் அதிகாரிகள் இருந்து வந்தார்கள். 1911-இல் திபேத்திலிருந்து சீனப்படைகளை லாமாக்கள் வெளியேற்றிவிட்டார்கள். அவை இந்தியா வழியாகப் பத்திரமாய் ஊர்போய்ச் சேர்ந்தன.

இடையில் இப்போதுபோலவே 1909-ஆம் ஞூ திபேத்தைப் படை வலுவால் சீனு பிடித்துக்கொண்டது. தவிர, 1912-இல் மங்கோலியாவுடன் ருஷிய சக்கரவர்த்தி ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு, அதன்மீது தமது செல்வாக்கைப் பலமாக ஸ்தாபித்துக்கொண்டார். சீனப்புரட்சிக்குப் பின் திபேத் விடுதலை பெற்றதும், 1913-இல் மங்கோலியாவுடன் திபேத் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. ஒருபுறம் சீனுவும் மறுபுறம் ருஷியாவும் தங்கள் சாம்ராஜ்யங்களை விஸ்தரிக்க முயல்வதைக் கண்டு, பிரிட்டிஷ் சர்க்கார் பீதியடைந்தார்கள். அந்த இரண்டு நாடுகளும் இந்தியாவை நேரே வந்து தாக்க முடியாதபடி, திபேத்தை இடையிலே உள்ள சுய ஆட்சி ராஜ்யமாக ஸ்தாபித்துவிட அவர்கள் விரும்பினுர்கள். அவர்களுடைய முயற்சியால், 1914-இல் சீனு, பிரிட்டன், திபேத் மூன்று நாட்டுப் பிரதிநிதிகளும் சிம்லாவில் ஸர் ஹென்ரி மக்மோகன் என்பவர் தலைமையில் சந்தித்துப் பேசினுர்கள். அதில் ஓர் உடம்பாடு ஏற்பட்டது: 'திபேத்தை உள்மண்டலம், வெளிமண்டலம் என்று இரண்டு பிரிவாகப் பிரிக்கவேண்டும். லாஸா, ஷிகாட்ஸே, கியாண்ட்ஸே முதலிய மேற்குப் பிரதேசங்கள் வெளி மண்டலத்தைச் சேர்ந்தவை. படால், லிடெங், டாச்சியென்லு முதலிய கிழக்குப் பிரதேசங்கள் உள்மண்டலத்தைச் சேர்ந்தவை. வெளிமண்டலத்தில் சீனருக்கு எவ்வித உரிமையும் கிடையாது; அவர்கள் அங்கே தங்கள் அதிகாரிகளையோ துருப்புகளையோ அனுப்பக் கூடாது. உள்மண்டலம் சீனுவின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கும்; ஆனுல், அங்கேயும் மத சம்பந்தமான அதிகாரங்கள் தலாய் லாமாவிடமே இருக்கும்'—இதுதான் அந்த உடன்படிக்கையின் சாரம். தங்கள் பிரதிநிதிகள் கையெழுத்திட்ட இந்த உடன்படிக்கையைச் சீன சர்க்கார் பெரும்பாலும் ஒப்புக்கொண்டார்கள். ஆனுல், உள்மண்டலம், வெளிமண்டலம் என்று

எல்லை பிரித்ததை மட்டும் ஒப்புக் கொள்ளவில்லை. (இந்த உடன் படிக்கையின்போது, திபேத்துக்கும் இந்தியாவுக்குமிடையே வகுத்த எல்லைக்குத்தான் 'மக்மோகன் லைன்' என்று பெயர். இந்த எல்லையைமட்டும் சீனு தாண்ட விடமாட்டோம் என்றே சமீபத்தில் ஜவாஹர்லால் நேரு சொன்னுர்.)

மீண்டும் சீனுவுக்கும் திபேத்துக்கும் தகராறு ஏற்பட்டுக்கொண்டே தான் இருந்தது. சமய சம்பந்தமான அதிகாரத்தில் தலாய் லாமாவுக்குச் சம அந்தஸ்துள்ளவரான தாஷி லாமாவுக்கும் தலாய் லாமாவுக்கும் வேறே தகராறு ஏற்பட்டது. தாஷி தப்பியோடிச் சீனர்களுடன் சேர்ந்துகொண்டார். சீனுவுக்குத் திபேத்மீது மறுபடியும் ஆதிக்கம் செலுத்த விருப்பம் உண்டாயிற்று. 'சீனக் குடியரசில் திபேத் சேர்ந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், தாஷி லாமாவின் தலைமையில் ஒரு படை திபேத்தை வந்து தாக்கும்' என்று 1933-இல் சீனர்கள் மிரட்டினுர்கள். தலாய் லாமா பணிந்து சீனுவுடன் ஓர் உடம்பாட்டுக்கு வந்தார். 'சட்டப்படி சீனுவுக்கு உட்பட்டதாகத் திபேத் பாவிக்கப்படும். ஆனுல், சீனுவைக் கலக்காமலே அயல் நாடுகளுடன் நேரே பேச்சுவார்த்தைகள் நடத்தத் திபேத்துக்கு உரிமை இருக்கும். உயர்தர அதிகாரிகளை நியமித்தால், அதைச் சீனுவுக்குத் தலாய் லாமா அறிவிப்பார்' - இது தான் அதன் சாரம். இதன்படி சீனுவின் பிரதிநிதி ஒருவர் லாஸாவில் இருந்து வந்தார். பிரிட்டிஷ் இந்தியாவின் ஏஜெண்ட் ஒருவரும் அங்கே இருந்துகொண்டு, நேரே தலாய் லாமாவிடம் தொடர்பு கொண்டு, இந்திய - திபேத் விவ்காரங்களைக் கவனித்து வந்தார்.

சமீபத்தில் சீனுவில் கம்யூனிஸ்டுகள் ஆதிக்கத்துக்கு வந்ததும், முந்திய சீன சர்க்கார்களைப் போலவே திபேத் தங்களுக்கே சொந்தம் என்று அறிவித்தார்கள். இதுபற்றிப் பேரம் பேசத் திபேத்தும் சம்மதித்தது. ஆனுல் தலாய் லாமாவின் தூதுக்கோஷ்டி சீனுவுக்குப் போய்ச் சேர்வதற்குள்ளேயே, திபேத் மீது சீனு படையெடுத்துவிட்டது.

ஆட்சி முறை: சமயத் துறையிலும் அரசியல் துறையிலும் திபேத்தின் தனிப் பெருந் தலைவர் தலாய் லாமா. அவருக்குப் பதினெட்டு வயதாகும் வரைக்கும் ஒரு ரீஜெண்ட் இருந்துகொண்டு ஆட்சியைக் கவனிப்பார். (இப்போதைய தலாய் லாமாவுக்கு வயது சுமார் 17.) தலாய் லாமா மணம் செய்துகொள்ள மாட்டார். அவரைப் பூலோகத்தில் மீண்டும் அவதரித்த புத்த பகவான் என்றே திபேத்தியர் மதிக்கிருர்கள். அவர் நேரே அதிகாரம் செலுத்துவதில்லை. அதை மந்திரிகளுக்கு வழங்கிவிடுவார். மது அருந்த மாட்டார். மாமிசம் உண்பார். ஆனுல், ஒரு பிராணியை அவருடைய உணவுக்காகக் கொல்வதற்கு முன், அந்தப் பிராணியின் ஆத்மா மேல் பிறப்பு எய்துவதற்கான சடங்குகளை நடத்திவிட்டுத்தான் கொல்வார்கள். ஒரு தலாய் லாமா இறப்பதற்கு முன் தாம் மறுபடியும் பிறக்கப் போகிற இடத்தைப் பற்றி அடையாளம் சொல்லுவார்; அல்லது ராஜாங்க ஜோதிடர் அதைத் தெரிவிப்பார். அவர் புனர் ஜன்மம் எடுத்த குழந்தைக்கு நீண்ட கண்களும் மேல் வளைந்த புருவங்களும் இருக்குமாம். காலிலே

புலித்தோல் குறிகளும், தோளிலே அதிகப்படியான இரண்டு கைக ளின் சின்னமாகச் சிறிது சதையும் தென்படுமாம். உள்ளங்கை ஒன் றில் சங்குக் குறி தெரியுமாம். அவருடைய புனர்ஜன்மமாகத் தோன்றும் குழந்தையின் முன்பு, இறந்த தலாய் லாமா புழங்கிய சில பொருள்களேயும் வேறு பொருள் களேயும் கலந்து வைப்பார்கள். இறந்தவரின் பொருள்களே அது பிரித்து எடுத்துவிட்டால், தலாய் லாமாவின் அவதாரந்தான் என்று அதை அங்கீகரிப்பார்கள்.

தலாய் லாமாவுக்கு அடுத்தபடி அந்தஸ்து உள்ளவர் தாஷி லாமா. இவரும் ஓர் அவதார புருஷர்தான். சமயச் சடங்குகளில் மிக அதிக மாய் ஈடுபடுவார். இதனுல் இவரே தலாய் லாமாவையும் விட உயர்ந்த வர் என்று பல திபேத்தியர் மதிக் கிருர்கள். இவருடைய மடம் ஷிகாட்ஸேயில் உள்ள தாஷி லம்போ. இப்போதைய தாஷி லாமா வுக்கு வயது சுமார் 13. இவருக்குப் பாஞ்சன் லாமா என்று பெயர். இவரையே திபேத்தின் சமயத்தலே வராகக் கம்யூனிஸ அரசாங்கம் முடி சூட்டி வைத்திருக்கிறது.

இந்த இரண்டு லாமாக்களேயும் தவிர வேறு பல லாமாக்களும் உண்டு. அத்தனே பேரும் அவதார புருஷர்கள்தான். அவரவருடைய மடங்களில் அவரவரே அதிகாரி. தலாய் லாமாவைப் போலவே அத்தனே பேருடைய புனர்ஜன் மங்களுக்கும் குறிகள் உண்டு.

விளேவும் வியாபாரமும்: திபேத்தை 'பூலோகத்தின் சிகரம்' என்று சொல்லுகிருர்கள். கடல் மட்டத்திலிருந்து 16,000 அடி உயரத்தில் உள்ள பீடபூமி அது. அங்கே அசாத்தியமான பனியும் மழையும் பெய்கின்றன. தெற்குப் பகுதியில்தான் பயிர்களேப் பார்க்க லாம். பார்லி, கோதுமை, முள் ளங்கி, பீச், ஆப்பிள், ப்ளம், திராட்சை, பூசணி முதலியவை முக்கிய விளேச்சல். அநேக வித மரங்கள் இருக்கின்றன. கவரி மான், கஸ்தூரிமான், ஆடு, குரங்கு, அணில், நாய், பூனே, கழுதை முதலிய விலங்கினங்கள் உண்டு. வடபுறத்தில் உள்ள சமவெளிப் பிரதேசங்களில் தங்கம் அகப்படு கிறது. வெள்ளி, செம்பு, நிலக்கரி, இரும்பு, ஈயம், கந்தகம், வெடியுப்பு முதலிய உலோகங்களும் கிடைக் கின்றன. ஆனுல், இவைகளின் அளவை மதிப்பிட முடியவில்லே. போன வருஷம் செப்டம்பரில் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி யின் இலாகா பின்வரும் தகவலே வெளியிட்டது. பிரிட்டிஷ் ஆராய்ச் சிக்காரர் சிலர் திபேத்துக்குப் போய்ச் சோதித்தார்களாம். விலே மதிக்க முடியாத புதிய உலோகம் ஒன்று அங்கே ஏராளமாக இருப்ப தாகவும், அது 'ரேடியோ ஆக்டிவ் உலோக'மாகத்தான் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் சொன்னுர்களாம்.

திபேத்தியர் வியாபாரத்தில் தலே சிறந்தவர்கள். ஏதோ ஒரு மதச் சடங்கைப் போல் சாவகாச மாக வியாபாரம் நடத்துவார்கள். விரல் காட்டியே பேரம் நடக்கும். சாமானே விற்பவன் அதைக் கொடுக்கும்போது வாங்குகிறவனே வாழ்த்துவான். வாங்குகிறவன் தன் பணத்தோடு அதிருஷ்டம் போய்விடாதிருப்பதற்காக ஒவ் வொரு காசையும் துடைத்து விட்டே கொடுப்பான்.

கவரிமான் தோல், அதன் வால் குஞ்சம், ஆட்டு ரோமம், உப்பு,

வெண்காரம், கஸ்தூரி, மூலிகை, மட்டக் குதிரை, கோவேறு கழுதை இவையெல்லாம் திபேத்திலிருந்து ஏற்றுமதியாகின்றன. அங்கே இறக்குமதியாகும் சாமான்கள் இவை: இந்தியாவிலிருந்து ஜவுளி, இரும்புச் சாமான், நவரத்தினம், புகையிலை, பழவற்றல், சர்க்கரை, தீப்பெட்டி, ஊசி, சோப்; நேபாளம், பூடான் இரண்டிலிருந்தும் அரிசி; சீனவிலிருந்து தேயிலை, பட்டு, வில்வட்டு, தீப் பெட்டி, பித்தான், அபினி; மங்கோலியாவிலிருந்து வெள்ளி, தங்கம், மட்டக் குதிரை. திபேத்தின் மத்தியப் பிரதேசத்தில் லாஸா, ஷிகாட்ஸே இந்த இரண்டும், கிழக்குப் பிரதேசத்தில் சாம்டோ, டெர்கே, தாச்சியென்லு இந்த மூன்றும் முக்கிய வியாபார ஸ்தலங்கள்.

சில நாகரிகப் பொருள்கள்: திபேத்தில் நவீன யந்திர சாதனங்கள் இல்லை. வெளி உலகத்திலிருந்து அதற்கு வண்டிப்போக்குவரத்துச் சாலை எதுவும் கிடையாது. கோவேறு கழுதை, கவரிமான், ஆடு இவைகளின் முதுகில்தான் சாமான் மூட்டைகளை ஏற்றிச் செல்லவேண்டும். ஆனல், இப்போது இரண்டே இரண்டு பழைய பிரிட்டிஷ் மோட்டார்களைத் தலாய் லாமாவின் சொந்த உபயோகத்துக்கு என்று வைத்திருக்கிருர்கள். இதன் பகுதிகளைத் துண்டு துண்டாகக் கோவேறு கழுதைகளின் மீது ஏற்றிச் சென்று லாஸாவில் ஒன்றுசேர்த்துக் கோத்தார்கள். முந்திய லாமாவே இவைகளை வரவழைத்தவர். லாஸாவில் மூன்று நான்கு மைல் தூரந்தான் மோட்டார் போகக்கூடிய ரஸ்தா இருக்கிறது. அதில் இவைகளை விட்டு அவர் களிப்படைவராம்.

நகரத்துக்குச் சிறிது தூரத்தில் ஹைட்ரோ- எலக்ட்ரிக் பவர் ஸ்டேஷன் ஒன்று இருக்கிறது. இது இப்போது 'செத்து'ப்போய்க் கிடக்கிறது. 1938-இல் கொஞ்சம் மின்சார உற்பத்தி செய்தது. நாலே நாலு மந்திரிகளின் வீடுகளுக்கு விளக்கேற்றத்தான் இது போதியதாயிருந்ததாம். இதற்குப் புத்துயிர் கொடுக்கச் சமீபத்தில் முயற்சி நடந்தபோது, மின்சார பல்புகளில் தோன்றிய ஒளி, கொளுத்திய சிகரெட் மாதிரிதான் மினுமினுத்ததாம்.

அடுத்தபடியாக, பாட்டரி ரேடியோ ஸெட்டுகள் திபேத்தில் சுமார் நூறு இருக்கின்றன. அவைகளைச் சில திபேத்தியப் பிரபுக்களும், நேபாளி வியாபாரிகளும் வைத்திருக்கிருர்கள். அவைகளுக்கு வேண்டிய மின்சாரத்தைச் சர்க்கார் ரேடியோ நிலையம், தந்தி ஆபீஸ், சில கம்பெனிகள் ஆகியவை 'சார்ஜ்' செய்து தருகின்றன.

ரேடியோ செய்தி அனுப்பக் கூடிய அரை டஜன் 'டிரான்ஸ்மிட்டர்'களும் இருக்கின்றன. இவைகளை அமெரிக்க ராணுவ அதிகாரிகள், யுத்தம் முடிந்து போகும் போது விற்ருர்கள். இவைகளில் மிகப் பெரியதுதான் திபேத் சர்க்காரின் ரேடியோ நிலையத்தில் இருக்கிறது.

இந்திய சர்க்கார் போட்ட தந்தியும் தபாலாபீஸும் லாஸாவில் இருக்கின்றன.

இந்திய விமானப் போக்குவரத்துக்கு வசதி செய்யப் பெற்றிருக்கிறது.

நேபாளி வியாபாரி ஒருவர் சினிமா தியேட்டர் ஒன்றை லாஸாவில் ஏற்படுத்தியிருக்கிருர்.

பல திபேத்தியரின் வீடுகளில் போட்டோ காமிராக்கள் இருக்கின்றன. பிலிம்களை ‘டெவலப்’ செய்து தரும் கடைகளும் சில இருக்கின்றன.

பலரிடம் துப்பாக்கிகளும் தோட்டாக்களும் இருக்கின்றன. இரண்டாவது உலகயுத்தம் முடிந்ததும், அமெரிக்க ஸோல்ஜர்கள் பகிரங்கமாக இவைகளைத் திபேத்தியரிடம் விற்றிருக்கிறார்கள். சில துப்பாக்கி, தோட்டாக்கள் இந்தியாவிலிருந்து திருட்டுத்தனமாய்ப் போய்ச் சேர்ந்தவை.

லாஸாவில் வித்தோ அச்சு யந்திரங்கள் மூன்று இருக்கின்றன. இரண்டு வருஷங்களுக்கு முன் சீன தேசிய சர்க்காரின் பிரதிநிதிகள் லாஸாவை விட்டுச் சென்றபோது போட்டுப் போனவை இவை.

‘திபேத்தியக் கண்ணாடி’ என்ற ஒரு பத்திரிகை காலிம்பாங்கிலிருந்து வெளியாகிறது. இது திபேத்தியரைப் போற்றியும் சீனரைத் திட்டியும் எழுதுகிறது.

இந்த வஸ்துக்களெல்லாம் சீனக் கம்யூனிஸ்டுகளின் கையிலே அகப்படும்போது, ‘திபேத்தை அயலார் ஆட்டிவைப்பதற்குச் சான்று’களாகச் சொல்லுவார்களோ, என்னவோ! யார் கண்டார்?

மக்களும் பழக்க வழக்கமும்: திபேத்தில் ஜன சங்கியைக் கணக்கு ஒன்றும் கிடையாது. சுமாராக நாற்பது லட்சம் மக்கள் இருப்பதாக மதிப்பிடுகிறார்கள். அவர்களில் நாலில் ஒரு பகுதியினர் பௌத்தத் துறவிகளாம். எங்கே பார்த்தாலும் சந்நியாசிகளும் கன்னியா மடப் பெண்களும் நிறைந்திருக்கிறார்கள். சந்நியாசி மடங்களும் கன்னியா மடங்களும் ஏராளம். பெரும்பாலான குடும்பத்தினர் தங்கள் பிள்ளையையும் பெண்ணையும் பௌத்த மடங்களுக்கு அனுப்பி விடுகிறார்கள்.

சந்நியாசிகளைத் தவிரப் பிற திபேத்தியரில் ஐந்து வகையினர் இருக்கிறார்கள்: பிரபுக்கள், வியாபாரிகள், குடியானவர், ஆயர், பிச்சைக்காரர். பிரபுக்களுக்கு ஏராளமான நிலபுலங்கள் இருக்கின்றன. அவர்களுக்கும் பிறருக்கும் பெரிய ஏற்றத் தாழ்வு இருக்கிறது. அவர்களிடம் - என், அவர்களுடைய குதிரை, நாய்களிடங்கூட-மற்றவர் வெகு மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும். வியாபாரிகள்தான் நடுத்தர வகுப்பார். ஆனால் அவர்களுக்கு எவ்விதச் செல்வாக்கும் கிடையாது. குடியானவரின் நிலங்கள் அவர்களுக்குச் சொந்தமில்லை. வாரத்துக்குப் பயிர் செய்யும் குடிகளே அவர்கள். ஆனால், நிலத்தைத் தங்கள் இஷ்டப்படி விட்டுச் செல்ல முடியாது. ஆயர்கள் ஆட்டு மந்தைகளை ஓட்டிப் பல இடங்களுக்கும் செல்வார்கள். ஆனால், அந்த மந்தைகள் அவர்களுக்குச் சொந்தமில்லை. பிரபுக்களுக்குச் சொந்தம். பிச்சைக்காரர்கள் வம்ச பரம்பரையாய்ப் பிச்சையெடுக்கிறார்கள். பிச்சை கேட்பவருக்கு இல்லை என்று சொன்னால் மகா பாவம். எவரும் பிச்சை போட்டாக வேண்டும்.

திபேத்தியர் எப்போதும் சந்தோஷமாயிருப்பார்கள். வாழ்க்கை இன்பங்களை நன்றாக அநுபவிப்பார்கள். விருந்தினருக்கு மலர், உணவு, பானம் இவைகளை நிறைய அளித்து உபசரிப்பார்கள். வெண்ணெய் போட்ட தேநீர்ப் பானத்தை நாள் ஒன்றுக்கு நாற்பது ஐம்பது கோப்பை குடிப்பார்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தால்.

நாக்கை நீட்டவேண்டும்; 'உஸ்' என்று சத்தம் கொடுக்க வேண்டும்- இதுதான் மரியாதைக்கு அடையாளம்.

திபேத்தில் நவீன யந்திர சாதனங்கள் நுழையவில்லையே என்பதால், அதை நாகரிகமற்ற நாடு என்று சொல்ல முடியாது. மிகவும் புராதனமான நாகரிகத்தை உடைய நாடு அது. அங்கிருக்கும் மடங்களின் வானளாவிய கட்டிடங்களே இதற்குச் சான்ருகும். தலாய் லாமாவின் பொடாலா என்ற மடந்தான் திபேத்திலேயே மிகப் பெரிய கட்டிடம். அது 900 அடி உயரம் உள்ள மாளிகை. 300 வருஷங்களுக்குமுன் கட்டியது. அற்புதமான கல் கட்டிடம். அதில் 1000 அறைகள் இருக்கின்றன. மேல் மாடியில் விசாலமான அறைகளில் தலாய் லாமாவும் அவருடைய முக்கியத் துணைவரான வேறு உயர்தர லாமாக்களும் தங்குகிருர்கள். முந்திய எட்டு லாமாக்களின் சமாதிகளை முற்றும் தங்கத்தால் மூடியிருக்கிருர்கள். மாளிகையின் உப்பரிகை முழுவதும் தங்கக் கவசமிட்டு, வெகு தூரம் வரைக்கும் தகதகவென்று பிரகாசிக்கிறது.

திபேத்தியரின் வீடு உயரமாக இராது. ஒவ்வொரு வீட்டிலும் அதற்கென்றே தனியான பூஜை யறை உண்டு. அதில் புத்த விக்கிரகங்கள் இருக்கும்.

திபேத்தியர் பலதார மணமும் செய்துகொள்வார்கள்; பல புருஷர் மணமும் செய்துகொள்வார்கள்; ஏழை மக்களுக்குள் ஒரே பெண்ணை அண்ணன் தம்பிகள் அத்தனை பேரும் மனைவியாக வைத்துக் கொள்ளும் வழக்கம் உண்டு. அடிக்கடி விவாக ரத்தும் செய்துகொள்வார்கள். பெண்களுக்குப் பூர்ண உரிமை உண்டு.

திபேத்தியரின் கலைகளில் இந்திய சம்பந்தமும் இருக்கிறது; சீன சம்பந்தமும் இருக்கிறது. பல சித்திரங்களில் புராதன இந்திய பாணி தெளிவாய்த் தென்படுகிறது.

சுலபமான படிப்பு

ஒரு பணக்காரர் தம் மகனை அழைத்துக்கொண்டு பிரபல ஆசிரியர் ஒருவரிடம் சென்ருர்; "இவனுக்குச் சகல வித்தைகளையும் மிகவும் சுருக்கமாகவும் சீக்கிரமாகவும் கற்றுக் கொடுத்துவிடவேண்டும். நிதானமாகப் பல வருஷகாலம் படிக்கிறதென்ருல் இவனல் ஆகாது. இதற்கு எத்தனை நாள் பிடிக்கும்? சொல்லுங்கள்" என்று அந்த ஆசிரியரைக் கேட்டார்.

"அதற்கென்ன, சுருக்கமாக முடித்துவிடலாம். எல்லாம் பின்னலே அவன் எந்த மாதிரி ஆகவேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களோ அதைப் பொறுத்திருக்கிறது. கடவுளுக்குக் கூடப் பிரம்மாண்டமான ஓர் ஆலமரத்தை உண்டாக்குவதென்ருல் நூறு வருஷம் பிடிக்கிறது; ஆனல் ஒரு காணல் தட்டையைச் சிருஷ்டிக்கச் சில நாள்தான் பிடிக்கிறது என்ருல், பாருங்கள்" என்ருர் ஆசிரியர்.

பெர்னர்ட் ஷா துணுக்குகள்

முகுல் குப்த

சமீபத்தில் காலஞ் சென்ற தொண்ணூற்று நாலு வயதுக் கிழவர் ஷா ஓர் அபூர்வ புருஷர். ஷேக்ஸ்பியருக்குப் பின் உலகெங்கும் கீர்த்தி பெற்ற ஆங்கில நாடகாசிரியர். அவருடைய இலக்கியப் புகழையும்விட, அவர் புகழே அதிகம். அவருடைய குறும்புப் பேச்சிலெல்லாம் ஆழ்ந்த உண்மை அடங்கியிருக்கும். அவர் ஓர் எழுத்தாளர்தான். ஆனல், வாழ்க்கையின் சகல துறைகளையும் தம் கேலியின் வன்மையால் கலக்கிவிட்டவர்.



—'சங்கர்ஸ் வீக்லி'

ஒரு சமயம் பெர்னர்ட் ஷா சில ஆங்கில நண்பர்களோடு இதாலிக்குப் போயிருந்தார். மிலான் நகரத்து ரெயில்வே ஹோட்டல் ஒன்றில் அவர்கள் தங்கினர்கள். சாப்பிட்டு முடிந்ததும் வந்திருந்த 24 பேரும் தனித்தனி 'பில்' கேட்க விரும்பினர்கள். பரிமாறும் சிப்பந்தியோ இதாலிய மொழியைத் தவிர வேறு எதுவும் பேசவில்லை. இவர்களுக்கோ அது பேசத் தெரியாது. 'இதென்னடா சங்கடமாகப் போயிற்றே!' என்று விழித்தார்கள். கடைசியில் ஷாவைப் பார்த்து, "உங்களுக்கு நிச்சயமாக இதாலிய பாஷை தெரிந்திருக்கும். நீங்கள் தான் சொல்லியாக் வேண்டும்" என்று தொந்தரவு செய்தார்கள். ஷா தமக்கு அது தெரியும், தெரியாது என்று ஒன்றுமே சொல்லாமல் மண்டையை உடைத்துக்கொண்டு எதையோ ஞாபகப் படுத்திக்கொள்ளப் பார்த்தார். இப்படித் திணறிக்கொண்டிருக்கும் போது சட்டென்று ஏதோ ஓர் இதாலிய நாடகத்துப் பாட்டின் அடி ஒன்று நினைவுக்கு வந்தது:

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகா (வங்காளி: 20-11-'50), கல்கத்தா.

"ஒக்னே பேர் ஸே; பேர்டுட்டி இல் ஸியலோ."

இதற்கு, "அவனவன் பாட்டை அவன்வன் கவனித்துக்கொள்ள வேண்டும்; எல்லாருக்கும் அதுவே பேரின்பம்" என்றுதான் அர்த்தம்.

உடனே அங்கிருந்த ஹோட்டல் சிப்பந்திகளெல்லாரும் அதைப் புரிந்துகொண்டு ஓ என்று சிரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஷாவின் நண்பர்களோ அந்த மொழியில் அவருக்கு இருந்த பாண்டித்தியத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார்கள். பின்னால் ஒரு சமயம், இதைக் குறிப்பிட்டு, "அதிலிருந்து நாளடைவில் இதாலிய மொழியிலும் பிரமாத நிபுணன் என்று எனக்குக் கீர்த்தி ஏற்பட்டுவிட்டது" என்றார்.

* * *

தாமஸ் எல். கென்னடி என்பவர் எவர்ஷார்ப் ரேஸர் கம்பெனியின் அதிகாரி. சமீபத்தில் தாம் தயாரித்த புதுவித ஸேப்டி ரேஸரை அவர் ஷாவுக்கு அனுப்பினார். அதோடு ஒரு சீட்டில் இப்படி ஒரு குறிப்பும் எழுதியிருந்தார்:

"இத்தனை வருஷம் கழித்து நீங்கள் தாடியை எடுத்துவிடப் போவதாகக் கேள்விப்பட்டேன். இந்தத் தகவல் நிஜமோ இல்லையோ எனக்குத் தெரியாது. இருந்தாலும் இதைக் கேட்டதும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டதென்னவோ வாஸ்தவம். அப்படி க்ஷவரம் செய்து கொள்ளத்தான் போகிறீர்களென்றால் என்னுடைய ஸேப்டி ரேஸரையே உபயோகிப்பீர்கள் என்பது நிச்சயம்."

இதற்கு ஷா எழுதிய பதில்: "நான் இதுவரையில் க்ஷவரம் பண்ணிக்கொண்டதே இல்லை; க்ஷவரக் கத்தியும் என்னிடத்தில் இல்லை. (தாங்கள் அனுப்பிய ரேஸர் இன்னும் கிடைக்கவில்லை.) எப்படி இருந்தாலும் தாடியை எடுப்பதாக உத்தேசமில்லை. அடிக்கடி ஓரளவுக்குமேல் வளராதபடி அதைக் கத்தரித்துவிட்டுக் கொள்கிறேன். என்னை எல்லாரும் பின்பற்ற ஆரம்பித்துவிட்டால் அப்புறம் எவர் ஷார்ப் கம்பெனியார் மின்சாரக் கத்தரி தயாரிப்பதில் கவனம் செலுத்தவேண்டியதுதான்! தாங்கள் ரேஸர் அனுப்பியதற்காக முன்கூட்டி வந்தனம் தெரிவிக்க விரும்புகிறேன். என் சரித்திரத்தை எழுதும் டாக்டர் லோவென்ஸ்டைன் அதை எடுத்துக்கொண்டு விடுவார்; அது நிச்சயம். அவர்தான் க்ஷவரம் பண்ணுவதிலேயே போதை வீணாகக் கழித்து விடுகிறாரே!"

* * *

ஷா ஒருசமயம் தென் ஆப்பிரிக்காவுக்குப் போயிருந்தார். அங்கே ஒரு குளத்தில் நீந்திக் கொண்டே தமாஷாகப் பொழுதைப் போக்கினார். அவரோடு இன்னும் சில பையன்களும் நீந்திக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு அவர் யார் என்று தெரியாது. "இந்தக் கிழவனின் தலையை எப்படியாவது கப்பென்று ஜலத்துக்குள்ளே சற்றே அழுத்திவிட்டு வேடிக்கை பார்க்கலாம்" என்று ரகசியமாகப் பேசிக்கொண்டார்கள்; தங்களுக்குள் ஒரு பையனைத் தூண்டிவிட்டு இப்படிச் செய்தால் ஒரு ஷில்லிங் கொடுப்பதாகப் பந்தயமும் வைத்தார்கள். அந்தப் பையனும் அதற்கு ஒப்புக்கொண்டு ஷாவின் அருகில் வந்தான். ஆனால் அவருடைய தாடியையும் மீசையையும் உற்றுக் கவனித்ததும் பையன் பாடு வெலவெலத்துவிட்டது. ஷா, "என்னடா,

பையா?'' என்று விசாரிக்கவே பையன் தட்டுத் தடுமாறிக் கொண்டே விஷயத்தை உளறிக் கொட்டிவிட்டான். ஷா உடனே, "இதுதானே! கொஞ்சம் பொறு. ஒரு 'தம்' எடுக்கிறேன். அந்தச் சமயம்பார்த்து நீ என் தலையை ஜலத்துக் குள்ளே அழுத்து'' என்றார். அதே மாதிரி அவர் செய்ததும் பையன் அவரைக் கப்பென்று ஜலத்தில் அழுத்தினான்; பிறகு வெற்றிப் பெருமிதத்துடன் பந்தயத் தொகையை வாங்கிக்கொள்ளக் குளக்கரைக்குத் திரும்பினான்.

*   *   *

"நீங்கள் ஏன் மரக்கறி உணவே சாப்பிடுகிறீர்கள்?'' என்று யாரோ ஒருவர் ஷாவைக் கேட்டாராம். அதற்கு ஷா, "செத்த பிணங்களை இந்த உயிருள்ள உடம்பில் போட்டு அடைப்பதென்றால் எனக்குப் பிடிக்காது. அப்படி உயிர் வாழ்வதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் ஒரு விஷயம்: உலகத்தில் மரக்கறி உணவுக்காரர்கள் எத்தனையோ பேர் இருந்தாலும் ஒரே ஒரு பெர்னார்ட் ஷாதான் இருக்கிறார். மாமிசம் சாப்பிடாமல் சேமியா சாப்பிட்டாலே பெரிய மனுஷன் என்று பெயர் எடுத்துவிட முடியுமா?'' என்றார்.

*   *   *

லண்டனில் ஒரு நாகரிக மாது இருந்தாள். அவள் தன்னை அழகு படுத்திக்கொள்வதிலேயே ஏராளமாகப் பணம் செலவழிப்பாள். ஒரு சமயம் அவள் ஷாவிடம், "என்னைப் பார்த்தால் எவ்வளவு வயது இருக்கும் என்று தோன்றுகிறது, சொல்லுங்கள்'' என்றாள்.

ஷா, "உன் பல்லைக் கவனித்தால் 18 இருக்கும் என்று தோன்றுகிறது. தலைமயிரைப் பார்த்தால் 19 இருக்கும் என்று தோன்றுகிறது. நீ நடந்துகொள்கிற ரீதியைப் பார்த்தாலோ 14 வயதுப் பெண்ணைப் போல் இருக்கிறது'' என்றார்.

அந்த மாதுக்கு உச்சி குளிர்ந்து விட்டது. "ரொம்ப ஸந்தோஷம். இருந்தாலும் திட்டமாக என் வயது என்ன இருக்கும்? சொல்லுங்கள்?'' என்று கேட்டாள்.

உடனே ஷா, "சரி. இதைக் கூட்டு, பார்க்கலாம்: 18, 19, 14 இந்த மூன்றும் சேர்ந்தால் என்ன விடை? 51!'' என்று பதில் அளித்தார்!

*   *   *

புதிதாகக் கட்டுரை, கதைகளைத் தொகுத்து வெளியிட விரும்பிய ஒரு வாலிபன், "எங்கள் தொகுதியில் சேர்க்க ஏதாவது விஷயதானம் செய்யவேண்டும்; ஆனால் உங்களுக்கு வழக்கமாக மற்றவர்கள் தருகிற அளவு சம்மானம் கொடுக்க என்னால் இயலாது. நான் ரொம்பச் சின்னவன்!'' என்று ஷாவுக்கு எழுதினான்.

அதற்கு ஷா எழுதிய பதில் இது தான்: "நீ பெரியவன் ஆகிற வரைக்கும் காத்திருந்து அப்புறம் தருகிறேன்; அவ்வளவுதானே!''

*   *   *

ஒரு சமயம் ஷா ஓர் ஓவியரை அமர்த்தித் தம் படத்தை வரையச் சொன்னார். ஓவியருக்கு 100 பவுன் தருவதாக ஏற்பாடு. படம் எழுதி முடிந்ததும் ஷா அந்த ஓவியருக்கு இருபது இருபதாக மொத்தம் நூறு பவுனுக்கு ஐந்து செக்குகள் அனுப்பினார். அது கிடைத்தவுடன் ஓவியர் நன்றி தெரிவிக்கப் போன் மூலம் ஷாவை அழைத்தார்; அதோடு ஓவியருக்கு,

'மொத்தமாக 100 பவுனுக்கு ஒரே செக் அனுப்பியிருக்கலாமே; இப்படி ஐந்து செக்காக ஷா ஏன் அனுப்பினார்?' என்று புரியவில்லை. இதையே போன் மூலம் கேட்டார்.

அதற்கு ஷா, "இப்போது என் கையெழுத்துக்கு அதிகக் கிராக்கி இருக்கிறது, அப்பா. ஒரு கையெழுத்துக்கு முப்பது பவுன் வாங்குகிறேன். என் கையெழுத்து வேண்டும் என்று பறக்கிறார்களே, அந்த மாதிரி ஆசாமிகளுக்கு இந்த ஐந்தையும் விற்றால் உனக்கும் நல்ல லாபம்; எனக்கும் 100 பவுன் லாபம்" என்று பதில் சொன்னார்.

* * *

ஒரு பழைய புத்தகக் கடையில் ஷா தாம் எழுதிய புத்தகம் ஒன்றைக் கண்டார். அது தம் நண்பர் ஒருவருக்கு இவர் கொடுத்தது. உள்ளே இவர் கையெழுத்திலேயே 'அன்பளிப்பு' என்று போட்டிருந்தது. ஷா அதை விலைக்கு வாங்கி முதல் பக்கத்தில், 'மீண்டும் அன்பளிப்பு' என்று எழுதி அந்த நண்பருக்கே திரும்பவும் அனுப்பி விட்டார்.

ஆனால் இன்னொரு சமயம் இவர் துரதிருஷ்டத்தைப் பாருங்கள்! தாம் எழுதிய 'பிக்மலியன்' என்ற புத்தகத்தில் அநேக வரிகள் எழுதி ஒரு நண்பருக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார். அதுவும் இப்படி ஒரு பழைய புத்தகக் கடையில் கிடந்ததை ஒருநாள் கவனித்தார். முன் போலவே தமாஷ் பண்ணலாம் என்று எண்ணி, "இது என்ன விலை, அப்பா?" என்று கடைக்காரனை விசாரித்தார்.

"அதுவா? அது 12 ஷில்லிங்குக்குப் போயிருக்கும். ஆனால் ஏதோ மடக் கழுதை அதில் ஒரு பக்கம் முழுதும் இப்படிக் கிறுக்கி வைத்திருக்கிறது, பாருங்கள்... சரி; எடுங்கள்; மூன்று ஷில்லிங்குக் கொடுத்து விடுகிறேன்" என்றான்!

* * *

ஷா மிகவும் கிண்டல்காரப் பேர்வழி. இருந்தாலும் ஒரு சமயம் தம் மனைவியிடத்திலும் இன்னொரு நாள் லேடி ராண்டல்ப் என்ற சீமாட்டியிடமும் தமாஷ் பண்ணப் போய்த் தாமே கேலிக்கு ஆளானார்.

ஒரு நாள், "என்ன இருந்தாலும் பெண்பிள்ளைகளைவிடப் புருஷர்கள் தான் எதையும் நன்றாக ஆற அமர யோசித்துச் சொல்வார்கள்; இல்லையா?" என்று ஷா தம் மனைவியைப் பார்த்துக் கேட்டார். உடனே அந்த அம்மாள், "வாஸ்தவந்தான்! நான் உங்களை மணந்தேன்; நீங்களோ என்னை மணந்தீர்களே! இதிலிருந்தே தெரியவில்லையா?" என்று பதில் அளித்தாள்.

ஷாவை லேடி ராண்டல்ப் ஒரு விருந்துக்கு அழைத்திருந்தாள். அதற்கு அவர், "கட்டாயம் வரவே முடியாது. இதற்கெல்லாம் நான் வருகிற வழக்கமே இல்லை: இது ஜகப் பிரசித்தமாச்சே!" என்று தந்தி கொடுத்தார்.

உடனே லேடி ராண்டல்பிடமிருந்து பதில் தந்தி கிடைத்தது: "உங்களுடைய பழக்க வழக்கமெல்லாம் எனக்குத் தெரியாது. உங்கள் சுபாவத்தைவிட அது அவ்வளவு மோசமாக இராது என்றுதான் நம்புகிறேன்."

குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்ப முடியாது. பதிலும் எழுத முடியாது. —ஆசிரியர்.

ஐந்தாவது வகுப்பில் படிக்கும் என் தம்பி விவேகானந்தனுக்கு அன்று சரித்திரப் பரீட்சை. அவன் அதை எழுதிவிட்டு வீட்டுக்கு வந்திருந்தான். வீட்டில் உள்ள சுவாமியின் முன், மாலையில் திரு விளக்கு ஏற்றியதும் அவன் வந்து நின்று தினந்தோறும் வணங்குவது வழக்கம். அன்றும் அப்படியே வணங்கி, "சுவாமி, தயவு பண்ணி, கல்கத்தாவை இந்தியாவின் தலைநகராகச் செய்துவிடேன்" என்று பிரார்த்தித்தான். எனக்கு இது வேடிக்கையாக இருந்தது.



"என்னடா இது? டில்லியை விட்டு எதற்காகடா இப்படித் தலைநகரை மாற்ற வேண்டும்?" என்று கேட்டேன்.

"அதுதான் அண்ணா சமயத்தில் மறந்து போச்சு. 'இந்தியாவின் தலைநகர் என்ன?' என்ற கேள்விக்கு விடை 'கல்கத்தா' என்று எழுதிவிட்டேன். அது சரியாக வேண்டும். சுவாமியால் ஆகாத காரியமும் உண்டா?" என்றான் தம்பி!

—தி. மா. முத்துக்குமாரசாமி, பாளையங்கோட்டை.

என் மகன் கமலநயனனுக்கு மூன்று வயதாகிவிட்டதால், எழுத்துக் கற்றுக்கொடுக்க விரும்பினேன். எழுத்துக்களுக்குள்ளே சுலபமானது ட என்ற எழுத்துத்தானே! அதன் வடிவத்தை முதலில் சொல்லிக் கொடுத்தேன்.

சற்று நேரத்துக்கெல்லாம் அரிவாள்மணையில் என் மனைவி ஏதோ கறிகாய் நறுக்கிக்கொண்டிருந்தாள். அந்த அரிவாள்மணையைச் சுட்டிக் காட்டி, "இது என்ன,

அம்மா?'' என்று சிறுவன் கேட்டான்.

"அரிவாள்மணை'' என்று அவள் பதில் சொன்னாள்.

"இல்லை. இது ட'' என்றான் கமலநயனன்.

—ராஜரத்தினம் தேவி, பௌரிங்கிபேட்டை.

நவராத்திரியின்போது எங்கள் வீட்டில் கொலு வைத்திருந்தது. அதில் ஒரு செட்டியார் பொம்மை இருந்தது. நிஜமாகவே கொஞ்சம் பட்டாணிக் கடலை, பொட்டுக் கடலை முதலியவைகளை வாங்கி அந்தப் பொம்மைக்கு முன் ஒரு தட்டில் வைத்திருந்தோம்.

இரண்டாவது நாளே அந்தக் கடலைகளைக் காணவில்லை.



"நீ எடுத்தாயா?'' என்று என் மூன்று வயதுத் தங்கையைக் கேட்டேன்.

"இல்லை, அண்ணா; எடுக்கவில்லை. கடலையை எல்லாம் செட்டியார் எனக்கு விற்றார்; நான் தின்று விட்டேன்'' என்றாள்.

—வி. ஜகந்நாதன், காரைக்குடி.

ஒருநாள் என் வகுப்பில் 'முதல் உதவி' பற்றிப் பாடம் நடத்த ஆரம்பித்தேன். மாணவர்களைக் கேள்வி கேட்டு, அவர்கள் மூலமே பதில் வரவழைக்க முயன்றேன்.

ஒரு பையனைப் பார்த்து, "ஒரு

வனுக்குத் தேள் கொட்டி விட்டதென்று வைத்துக்கொள். டாக்டர் வர நேரமாகும். அதற்குள் முதல் முதலில் நீ ஏதாவது உதவி செய்ய வேண்டாமா? என்ன செய்வாய்?'' என்று கேட்டேன்.

பையன் ஒரு கணம் யோசித்தான். பிறகு, "அவன் அழுவான். 'அழாதேடாப்பா; அழாதே' என்று நான் அவனைத் தேற்றுவேன்'' என்றான்.

—த. கலியபெருமாள், முருகன்குடி.

அண்ணா, நான், சிறிய தம்பி மூன்றுபேரும் கோயிலுக்குப் போனோம்.

அண்ணாவுக்குத் தேவார திருவாசகங்களில் மிகுந்த பற்று உண்டு. அவர் இவைகளைப் பாடிக்கொண்டே சுவாமியை வணங்குவது வழக்கம். நடராஜர் சந்நிதி வந்ததும், "மானாட, மழுவாட, மயிலாட, புனலாட'' என்று அவர் பாடினார்.

உடனே என் தம்பி தனக்குத் தெரிந்த ஒரு பாட்டையும் எடுத்து வெளியே விட்டான்; "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி'' என்று உரத்த குரலில் பாட ஆரம்பித்தான்.

"அடே! போதும்டா, போதும்'' என்று சொல்லி, அவனை நிறுத்துவது பெரும் பாடாயிற்று.

—இரத்தினம் வேங்கடாசலம், மதுரை.

இது ஒரு புதுமையான யோசனை; நடக்குமானால் லாபகரந்தான்.

சமையலிலே கூட்டுறவு

எஸ். பி. ஸரோஜா

“ஐயோ! என்ன கஷ்டம்” என்று குடித்தனப் பெண்டுகள் அலுத்துக்கொண்டால், அது நியாயந்தானே! ஏன்? நீங்களே பாருங்கள். பட்டணங்களிலுள்ள சாதாரண எளிய குடும்பங்களை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு தெருவில் ஐம்பது சிறிய வீடுகள் வரிசையாக இருக்கின்றன. இந்த ஐம்பது வீடுகளிலும் சமைக்க வேண்டும். அதற்கு அரிசி, பருப்பு, விறகு முதலிய சாமான்கள் தினசரி கிடைக்க வேண்டும். எல்லா வீடுகளுக்கும் சேர்த்துச் சமையலுக்கு இருநூறு முந்நூறு தவலைகள், வெண்கலப் பானைகள் வேண்டும். சாப்பிட்ட பிறகு அவைகளையெல்லாம் ஜாக்கிரதையாய்த் தேய்த்துக் கவிழ்க்கவேண்டும். சாப்பாட்டுக்குத் தேவையான அரிசி, கறி காய்கள் முதலியவை வாங்குவதற்கு வீட்டுப் பெண்களோ, அல்லது அவர்களுடைய கணவன்மார்களோ, கூடையும் பையுமெடுத்துக்கொண்டு மார்க்கெட்டுக்குப் போய், ஒன்றுக்கு நாலு விலை கொடுத்து, வாடி வதங்கிப்போன இரண்டு கறி காய்களையும் கல்லும் மண்ணும் கலந்த அரிசியையும் வாங்கி வரவேண்டும். அப்புறம் எல்லா வீடுகளிலும் சேர்ந்தாப்போல் சமையல் வாசனை ஜமாய்க்கும். ஆயினும் அதன் மூலம் எவ்வளவு கஷ்டமும் தியாகமும் தோன்றுகின்றன! மனைவிக்குச் சமையல் மட்டுமா? இன்னும் எத்தனை சில்லறை வேலைகள் இருக்கின்றன? மூட்டிய அடுப்பைக் கவனித்துக்கொண்டே பாத்திரங்களையும் தேய்க்கவேண்டும். கிழிந்த துணிமணிகளைத் தைக்கவேண்டும். ஒரு வேலையா? இரண்டு வேலையா? அவைகளையெல்லாம் கவனிக்க நேரமும் ஒழிவுந்தான் எங்கே? நித்தியம் ஓய்ச்சல் ஒழிவில்லாமல் ஒரே விதமான வேலைகளைச் செய்துகொண்டிருப்பதில் எவ்வளவு பணமும் சக்தியும் நேரமும் விரயமாகின்றன! சின்னஞ்சிறு இடத்திலே, சின்னஞ்சிறிய அளவில் நடக்கும் சமையலால், இந்தச் சங்கடத்துக்கு மாற்றே இல்லாது போகிறது.

சமைப்பது, பாத்திரங்கள் தேய்ப்பது, மெழுகுவது போன்ற சிரமமான காரியங்களை, வேறு விதி இல்லாமல் பெண்கள் செய்ய வேண்டியிருக்கிறது. அடக்க ஒடுக்கமுள்ள பெண்கள் இன்றும் அந்தக் காரியங்களை மிகவும் சிரத்தையோடுதான் செய்துகொண்டு வருகிறார்கள். குடித்தன நிர்வாகத்தில் சிக்கனந்தான் முக்கியம். கணவனும் மனைவியும் சேர்ந்து குடும்பப் பொறுப்பை வகிக்க

காப்பிரைட்: போரம் (ஆங்கிலம்: 29-10-'50), பம்பாய்.

வேண்டும் என்பது என்னவோ உண்மை; அதற்கு ஊறு செய்யக் கூடாதுதான். ஆனால் எல்லா வீடுகளும் சேர்ந்து கூட்டுறவு முறையில் குடித்தனம் நடத்தினால், எவ்வளவு பணமும் சக்தியும் நேரமும் மிச்சமாகும்? இதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

பல பேர்கள் சேர்ந்து கூட்டுறவுக் குடித்தனம் நடத்தினால், அது நன்றாகவே நடக்கும்; செலவும் குறைவாக இருக்கும். அதோடு கவலையும் கஷ்டமும் ஒழிந்து எவ்வளவோ சௌகரியமாகவும் இருக்கும்! ஒவ்வொரு வீட்டிலும் அடுப்பை மூட்டிக்கொண்டு மன்றாடுவதற்குப் பதிலாக, தேர்ந்த சமையல்காரன் ஒருவனை வைத்து எல்லாருக்கும் சேர்த்துச் சமையல் செய்யச் சொன்னால், சாப்பாடு ருசிகரமாயிருப்பதுடன், தனித் தனியே சமைப்பதில் பாதிதான் செலவாகும். சொல்லியனுப்பினால் ஒவ்வொரு வீட்டுக்கும் சுடச் சுடச் சமைத்த உணவு அந்த அந்த வேளைக்கு வந்துவிடும். ஒவ்வொருவரும் பெருக்குவதும் அடுப்பு மெழுகுவதும் போன்ற அசௌகரியமான வேலைகளைச் செய்துகொண்டிராமல் ஒரு பெரிய அடுப்பில் நாற்பது ஐம்பது குடும்பங்களுக்குச் சேர்த்துச் சமைத்தால், வீட்டுப் பெண்களுக்கு அன்றாடம் செய்ய வேண்டிய சில்லறை வேலைகள் குறைந்துவிடும். தேகாரோக்கியம் இல்லாத பெண்களுக்கு அவசியமான ஓய்வும் கிடைக்கும். இந்தக் காலத்தில் எவ்வளவு வீடுகளில் பெண்கள் உடம்பு அசௌக்கியமாக இருக்கும்போதுகூட வீட்டு வேலைகளைச் செய்து உடம்பை அடியோடு கெடுத்துக்கொண்டு மிகவும் கவலைக்கு இடமான நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள்! குடித்தனத்தின் பொறுப்பை அவர்கள் வகித்து நடத்தாவிட்டாலோ, அது அடியோடு கெட்டுப் போய் விடும்.

கூட்டுறவுக் குடித்தனம் நடத்துவதனால் ஒழிந்த நேரத்தில் வேறு பலவிதமான சௌகரியங்களைச் செய்துகொள்வதில் பெண்கள் மனத்தைச் செலுத்த முடியும். வீடுகளில் ஸ்நான அறைகள் சுத்தமாக இருக்கும். வந்தவர்களை வரவேற்று உபசரிக்கப் பிரத்தியேகமான அறைகளை அலங்கரித்து வைத்துக்கொள்ளலாம். துணிமணிகள் வைத்துக் கொள்வதற்குப் பூச்சி முதலியவை புகமுடியாத பீரோக்கள், குழந்தைகள் படிப்பதற்கென்று வாசகசாலை, விளையாடுவதற்கென்று தோட்டம் முதலிய பல சௌகரியங்களை உண்டாக்கிக்கொள்ளலாம்.

இவ்விதம் பல குடும்பங்கள் சேர்ந்து கூட்டுறவுக் குடித்தனம் நடத்துவதில், அவரவர்களுடைய தனிச் சுபாவத்துக்கும் சுதந்தரத்துக்கும் பாதகம் விளைந்துவிடும் என்று நினைத்துவிடக் கூடாது. அந்த மாதிரி கவலைக்கு இடமே இல்லை. திறமையுடன் நடத்தப்பெறும் கூட்டுறவுக் குடித்தனத்தில் அவரவர்களுடைய சுபாவமும் சுதந்தரமும் இன்னும் நன்றாகவே விளங்கும் என்று கூறலாம். ஆயினும் பல குடும்பங்களின் கூட்டுறவிலே எல்லாரும் ஒரே விதமாய்த்தான் வாழ வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பல ஜாதி மனிதர்களும் பலவிதமான வழக்கங்களுடன் ஒன்றாக இருக்க முடியும் என்றே நான் கருதுகிறேன். மிக மட்டமான ஹோட்டலில் வசிப்பதைக் காட்டிலும் தனித் தனிக் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து வாழ்க்கை நடத்து

வது எவ்வளவோ நன்ருயிருக்கும். நான் கூறும் வாழ்க்கை ஒரு விதத்தில் உயர்தரமான ஹோட்டல் வாசத்தைப் போன்றதுதான். ஆனல் பணம் சம்பாதிப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டது ஹோட்டல். அதில் வசிப்பவர்களுக்குப் பொறுப்போ, ஒருவரிடம் ஒருவருக்கு மரியாதையோ இராது. நான் கூறுவது, பல சிறு வீடுகள் சேர்ந்து ஒரு பெரிய வீடாக விளங்கும். எவ்வளவு கஷ்டமான நிலைமையிலும் வேளைக்கு வேளை சமைப்பதும் பரிமாறுவதும் போன்ற வேலைகள் செய்தாக வேண்டுமே என்ற கவலை அதனல் நீங்கும்.

எந்த நேரமும் பலவிதத் துன்பங்களுக்குள்ளாகும் மத்திய அந்தஸ்திலுள்ள குடும்பங்களுக்கு இந்தக் கூட்டுறவு முறையால் எவ்வளவோ நன்மைகள் உண்டாகும். நகைநட்டு, சீர்செனத்தி என்றெல்லாம் அதிகச் செலவு செய்யாமலே சிறுவயதிலேயே பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் கல்யாணத்தை நடத்திவிடலாம். இளமையிலேயே ஒருவரை ஒருவர் அன்புடன் நேசித்து இன்ப வாழ்க்கை நடத்தலாம். தாம்பத்திய வாழ்க்கையில் ஏற்படும் எவ்வளவோ சிக்கல்களும் இந்த முறையால் எளிதில் தீர்ந்துவிடும். நூற்றுக்கு ஐம்பது பேர்கள் நல்ல வயதில் கல்யாணம் இல்லாமல் பிரம்மசாரிகளாகவே காலம் கழிப்பதால் நேரும் ஒழுக்கக் குறைவும் அதனல் ஏற்படும் கெட்ட வியாதிகளும் ஓரளவு மறைந்துவிடும். முன்போல் பெண்களும் பிள்ளைகளும் சரியான காலத்தில் கல்யாணமாகி இன்ப வாழ்க்கை நடத்தும் வழக்கம் மீண்டும் ஏற்படும்.

இவை தவிர வேறு நன்மைகளும் உண்டு. விவாகமான பெண்கள் வீட்டிலிருந்தபடியே ஏதாவது ஒரு வேலை செய்து, வீட்டுச் செலவுக்குச் சம்பாதித்துக்கொள்ளலாம். கணவனை இழந்த கைம்பெண்களுக்கும் சரி, மனைவியை இழந்த கணவர்களுக்கும் சரி - குழந்தைகள் உள்ளவர்களாயிருந்தாலுங்கூட - இந்தக் கூட்டுறவுக் குடித்தனத்தினல் மிகுந்த நன்மையே உண்டாகும். தொழிலாளிகளுக்கும் வியாபாரிகளுக்கும் இது நல்ல பயனை அளிக்கும்.

ஆயினும் தற்காலத்தில் இந்த மாதிரி கூட்டுறவுக் குடித்தன முறையைப் பொதுமக்கள் எல்லாரும் அநுசரிக்க முடியும் என்று தோன்றவில்லை. கிராமவாசிகள் இப்படிச் சேர்ந்திருப்பதைக் காட்டிலும் தங்களுக்குப் பிடித்தபடி தனித்தனி வீடுகளில் வசிப்பதைத்தான் விரும்புவார்கள். தவிர, புதிய முறை எதுவாயிருந்தாலும் அதை அநுசரிப்பதில் சோம்பலும் அருவருப்பும் யாருக்கும் ஏற்படுவது சகஜம். பழம் சம்பிரதாயங்களையே கட்டிக்கொண்டு மாரடிக்கும் வயதான பெண்டுகள் இந்த முறைக்கு முக்கிய விரோதிகளாயிருப்பார்கள்.

என்ருலும், இரண்டாவது உலக மகாயுத்தம் தொடங்கியது முதல் ஒன்றுக்கு நான்கு மடங்காகத் தனிக் குடித்தனச் செலவு பெருகியிருப்பதைப் பார்க்கும்போது, கூட்டுறவுக் குடித்தனத்தினல் ஏற்படக் கூடிய நன்மைகளை முடிவில் அதன் விரோதிகளும் புரிந்துகொண்டுவிடுவார்கள். ஆயினும் அதற்காகத் தனிக் குடித்தனங்களே அடியோடு அற்றுப் போய்விடும் என்று கூற முடியாது. எங்கும் மோட்டார் பஸ்களுக்குப் பதில்

ரெயிலே வந்துவிடுமா? கைத் தறிகள் மறைந்து எங்கும் நெசவு ஆலைகளே நிறைந்துவிடும் என்ற நிலைமைதான் ஏற்படுமா? விஸ்தாரமான முறையில் கூட்டுறவுக் குடித்தனத்தை அநுசரிப்பதன் சௌகரியத்தையும் அவசியத்தையும் இன்னும் சரியாய் ஒருவரும் புரிந்துகொள்ளவில்லை. அதனால் பணச் செலவு குறையும் என்பதுமட்டுமல்ல; அதிக ஒழிவு நேரம் கிடைக்குமாதலால் தேகாரோக்கியம், கல்வி அறிவு ஆகிய எல்லாம் விருத்தியாவதற்கும் அது உதவியாகும் என்று உறுதியாகக் கூறலாம்.

சென்றதும் வருவதும்

சென்ற காலம் நமக்குப் பல அரும் பொருள்களைப் பரிசளித்திருக்கிறது. நம்முடைய பண்பாடு, நாகரிகம், விஞ்ஞானம், தத்துவ ஞானம் இத்தனையுமே மிகப் புராதனமான காலத்தின் அல்லது சமீபத்தில் சென்ற காலத்தின் பரிசுகளே. சென்ற காலத்துக்கு நாம் பட்டிருக்கும் கடனை ஒப்புக்கொள்வதுதான் நியாயம்.

ஆனால், நம் கடனும் கடமையும் சென்ற காலத்தோடு முடிந்துவிடவில்லை. வருங்காலத்துக்கும் நமக்குரிய கடமையை நாம் செலுத்த வேண்டும். சொல்லப் போனால், சென்ற காலத்துக்கு நாம் பட்டிருக்கும் கடனைவிடப் பெரியது வருங்காலத்துக்கு நாம் செலுத்த வேண்டிய கடமை. ஏனென்றால், சென்ற காலம் சென்றுவிட்டது; முடிந்துவிட்டது. அதை நாம் மாற்ற முடியாது. வருங்காலம் இனித்தான் வரப் போகிறது. அதை நாம் ஒருவேளை சிறிது மாற்ற முடியலாம்.

உண்மையின் ஓர் அம்சத்தையே சென்ற காலம் நமக்கு அளித்திருக்கிறது. அதன் பல அம்சங்கள் வருங்காலத்திலே புதைந்து கிடக்கின்றன; அவைகளை ஆராய்ந்தறிய வருங்காலம் நம்மைக் கூவி அழைக்கிறது. ஆனால், வருங்காலத்தின் மீது பொறாமை கொண்டது போல, சென்ற காலம் நம்மைப் பயங்கரமாய் அமுக்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. அந்தப் பிடியிலிருந்து விடுபட்டு முன்னேற, சென்ற காலத்துடன் நாம் போராடத்தான் வேண்டியிருக்கிறது.

—ஜவாஹர்லால் நேரு

உபதேசமணி

சமயப் பிரசங்கி ஒருவர் ஒருநாள், "கடவுள் சிருஷ்டியில் ஒவ்வொரு புல்லும் பூண்டுமே அருமையான உபதேசமணியாகத் துலங்குகிறது" என்று ஆரம்பித்து ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். மறுநாள் அவர் தம் வீட்டுப் புழைக்கடையில் ஏராளமாக வளர்ந்து கிடந்த புல் பூண்டுகளையும் களைச் செடிகளையும் வெட்டிக்கொண்டிருந்தார். ஒரு குறும்புக்காரப் பேர்வழி, "இதுதான் சரி, ஸ்வாமிகளே! இப்படித்தான் உங்களுடைய உபதேசமணிகளை வெட்டிக் கழிக்க வேண்டும்" என்றான்.

—ஆங்கிலத்திலிருந்து.

மனித வாழ்க்கையிலேதான் எத்தனை விசித்திர மான நடவடிக்கைகளைக் காண்கிறோம்.

மனிதரிலே பலவிதம்

பாலசங்கர தேச்பாண்டே

பெண்களைக் கவர்ந்து செல்லும் விஷயத்தில், சிங்கார மான சுபத்திராபகர்ணம், கருண ரசம் ததும்பும் ராமாயணம், அற்புதமான வத்ஸலாபகரணம் - இப்படி எத்தனையோ பழங்கதைகள் இருக்கின்றன. ஆனால் ரேஷன் ஆபீசில் வேலை பார்க்கும் குப்புசாமி ஒரு பார்சிப் பெண்ணை இழுத்துச் சென்ற தகவல் கிடைத்ததும் மற்ற எல்லா ரசத்தையும்விட ஹாஸ்யந் தான் எங்களுக்கு உண்டாயிற்று.

டைப்ரைட்டர்மேல் கைவைப்பது போல அவ்வளவு லாகவமாக, செக்கச் செவேலென்ற ஒரு பெண்ணின் தோளிலே இந்தக் குப்புசாமி கை போட்டுக்கொண்டு போவது எங்களுக்கு வேடிக்கையாகத்தான்



தோன்றிற்று. இரவும் பகலும் கணக்கில் மண்டையை முட்டிக் கொள்ளும் இந்த ஆசாமிக்கு ஒரு பெண்ணின் கூந்தலில் கொண்டை ஊசியைச் செருகும் ரசிகத் தன்மை எப்படி வந்தது? இவனைப் பரிகாசம் செய்ததனால், மனித சுபாவத்தைப்பற்றிய எங்கள் அறியாமையைத்தான் நாங்கள் வெளிப்படுத்திக் கொண்டோம்.

மனம் என்பது மென்மையும் வன்மையும், நல்லதும் தீயதும், சத்துவமும் ரஜோகுணமும் ஆகிய பரஸ்பர விரோதமான பல உணர்ச்சிகள் கொண்டது என்பதை நாம் நினைத்துப் பார்ப்பதே இல்லை. அது ஏதாவது ஒரு செயலில் ஆழ்ந்திருக்கும்போது நாம் ஒரு தவறான நோக்கிலிருந்து அதன் போக்கையும் பாவனையையும் கண்டு ஒரு முடிவுக்கு வருகிறோம். சாதாரண மனிதர்கள் தான் இந்தப் பிழை செய்கிறார்கள் என்பதில்லை. பெரிய எழுத்தாளர்களும் சரித்திர ஆசிரியர்களும் ஜட்ஜ்களும் உபாத்தியாயர்களுங்கூட இப்படித்தான் மனித சுபாவத்தைப்பற்றித் தாம் கண்ட கோணலான பார்வையிலிருந்து ஒரு முடிவு கட்டிவிடுகிறார்கள். ‘மனத்தின் ஆழத்தைக் கண்டுபிடித்த பெரியோர் செய்த முடிவு’ என்று அதற்குப் புகழும் கிடைத்து விடுகிறது.

காப்பிரைட்: வஸந்த் (மராட்டி: தீபாவளி மலர் ’50), பம்பாய் 4.



ஓர் உபாத்தியாயர் என்ற முறையில் நான் ஏழு வருஷங்களாக மாணவர்களோடு பழகிவருகிறேன். அவர்களுடைய மனக்கடலின் ஆழத்தை நான் கண்டுபிடித்து விட்டதாகப் பெருமை கொள்ள முடியாது. பள்ளிக்கூடத்தில் சிகரெட் பிடித்ததற்காக ஒரு பணக்காரப் பையனை நான் தலைமை உபாத்தியாயரிடம் சொல்லிப் பள்ளியிலிருந்து நீக்கினேன். பிறகு மூன்று வருஷம் கழித்து, பாகிஸ்தானுக்குக் கடத்திச் செல்லப்பட்ட ஹிந்துப் பெண்களை விடுவிக்கும் தீரச்செயலில் அவன் முனைந்திருந்தபோது சில முஸ்லிம் காலிகள் அவனைக் கொன்றதாகச் செய்தி வந்தது. புகை பிடிக்கும் இந்தப் பையனுடைய உள்ளத்திலே தியாக நெருப்பைத் தாங்கும் ஆற்றல் இருந்தது என்பதை முன்னால் யார் கண்டார்கள்?

பூவை மோந்து பார்க்கும் முகல் பாதுஷாக்களின் படங்களைப் பார்க்கும்போதெல்லாம், 'இந்த ஓவியர்கள் எதற்காகத்தான் இப்படி வரைகிறார்களோ? மாந்தரைப் பிணக் குவியலாக்கும் இந்த அரசர்களின் கையில் ஒரு மாமிசத்துண்டைக் கொடுத்திருந்தாலாவது பொருத்தமாக இருக்கும்' என்று நான் நினைப்பது வழக்கம்.

ஆனால் தன் மகன் பிழைப்பதற்காக உயிரைத் துறந்த பாபர், சகோதரர்களுக்கு அரசைப் பங்கிட்டுத் தந்த ஹுமாயூன், குரானைப் பிரதி செய்து அந்த வருமானத்திலிருந்து வயிறு நிரப்பிய அவுரங்கஜேப், காதல் மனைவியின் கல்லறையின்மீது கலைமாளிகையைக் கட்டிய ஷாஜஹான் இவர்களுடைய சரிதத்தைப் படித்தால் இவர்களின் மனிதத் தன்மை தெரிகிறது. யுத்தங்களைப் பிரமாதமாக வர்ணிக்கும் சரித்திர ஆசிரியர்களைவிட ஓவியர்கள் உண்மை உள்ளத்தைக் கண்டுபிடிப்பதில் நிபுணர்கள் என்றுகூடத் தோன்றுகிறது.

காந்தியடிகளின் சரித்திரத்தை எழுதியவர்கள் அவருடைய மனிதத் தன்மையை எங்கே கண்டார்கள்? அவருடைய செயல்களைத் தெய்வம் செய்த அற்புதங்கள் என்றுதான் அவர்கள் வர்ணித்தார்கள். 'சத்திய சோதனை' என்ற அவருடைய சுயசரிதத்தைத் தவிர மற்ற எல்லா

நூல்களிலும் யாரும் அவருடைய மனித சுபாவத்தைக் கவனித்த தாகவே தெரியவில்லை.

கதாநாயகனா இவன்? அப்படி யானால் எல்லாக் குணங்களுக்கும் இவன் நிதி. இவன் துஷ்டனா? அப்படியானால் கொடுமையான உள்ளத்துக்கு வேறு உதாரணம் வேண்டியதில்லை. இவள் பதிதையா? அப்படியானால் இவள் சமூகத்தை முழுக்க முழுக்கக் கெடுத்துவிட்டதாகச் சித்திரிக்க வேண்டியது. ஓர் ஆண் அல்லது பெண்ணின் சித்திரத்தை ஒரே நிறத்தில் தீட்டும் நம் நாவலாசிரியர்களையோ நாடக ஆசிரியர்களையோ கண்டால், அவர்களின் அறியாமையை நினைந்து அழுவதா அல்லது சிரிப்பதா?

பற்றும் வைராக்கியமும், போகமும் தியாகமும், மென்மையும் வன்மையும் ஆகிய பரஸ்பர விரோதமான தன்மைகள் ஒரே சமயத்தில் மனத்தில் போராடுவதைச் சரத்சந்திரர் 'தேவதாஸ்' என்ற கதையில் காண்பிக்கும் போது, 'அடடா! இந்த ஆசிரியர் வாழ்க்கையை அப்படியே தத்ரூபமாகக் காண்பிக்கிறாரே!' என்று நாம் வியக்கிறோம். மனித இயற்கையை ஆழ்ந்து அறிந்தால்தான் இம்மாதிரியான பாத்திரங்களைச் சிருஷ்டிக்க முடியும். கடலுக்குள் வெவ்வேறு திசைகளில் ஓடும் பல நீரோட்டம் இருப்பதுபோல், மனத்துக்குள் பல்வேறு திசைகளில் பாயும் உணர்ச்சிகள் இருக்கின்றன. ஏழு நிறங்கள் கலந்து வெண்மை உண்டாவதுபோல, பல உணர்ச்சிகளின் கலப்பால் தோன்றியிருக்கிறது மனம்.

அன்னையின் அன்பைப்பற்றி டஜன்கணக்கான கவிதைகள் இருக்கின்றன. ஆனால் தந்தையின் அன்பை ஒரு கவி ஏன் வர்ணிக்கக் கூடாது? காவியத்திலே கண்ணீர் வடிக்கும் கவிகள் வாழ்க்கையில் துன்பச் சம்பவம் நேரும்போது சிறிதும் கண் கலங்காமல் இருப்பதை நான் கண்டிருக்கிறேன். இலக்கியம் என்றால் இன்னதென்றே தெரியாத ஒரு சாதாரண மனிதன், வெளிக்குப் பாறை போல் தோன்றுகிறான். அவனுடைய உள்ளத்திலும் மென்மையான உணர்ச்சிகள் எழுவதை நான் கண்டிருக்கிறேன்.

மனித சுபாவத்தின் விசித்திரங்களை நாம் ஆராய்ந்து பார்த்தால் உலகில் எது நிகழ்ந்தாலும் அது அதிசயமில்லை என்றுதான் தோன்றும். ஆகவே, ரேஷன் ஆபீஸில் வேலை செய்யும் குப்புசாமி பார்சிப் பெண்ணை இழுத்துச் சென்றதில் மனித சுபாவத்துக்கு மாறான தன்மை ஏதும் இல்லை.

உலகத்தின் தங்கம்

உலகத்திலுள்ள தங்கம் அத்தனையையும் உருக்கிச் சேர்த்தால் ஏழெட்டு அறைகள் கொண்ட ஒரு பெரிய வீட்டை நிறைத்துவிடும். கோடிக்கணக்கான டாலர் பெறுமானமுள்ள அவ்வளவு தங்கமும் ஒரே ஆசாமியின் கைக்கு வந்தால் என்ன நேரும்? அப்புறம் அவனுக்கு நண்பர்களோ, நல்ல சுபாவமோ, மன அமைதியோ, நீடித்த வாழ்வோ எதுவுமே இராது.

—சார்லஸ் எப். பானிங்

க்விஸ்

[இதோ சில கேள்விகள்: எங்கே உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 32-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

1. உத்தரப் பிரதேசத்தில் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வேலைக்கு ஆள் எடுக்கப் பரீட்சை கொடுத்தவர்களில் சிலர் எழுதிய தவருன பதில்கள் கீழே இருக்கின்றன: இவற்றைப் பார்த்து நீங்கள் சிரிக்கலாம்; ஆனால் திருத்துவீர்களா?

(அ) குதுப் மினரைக் கட்டியவன் அசோக சக்கரவர்த்தி.

(ஆ) பாகிஸ்தானின் கவர்னர்-ஜெனரல் ஹாபிஜ் முகம்மது இப்ராஹீம்.

(இ) இந்தியாவின் பூகோள எல்லைகள்: தெற்கே பஸிபிக் மகா சமுத்திரம்; வடக்கே ஆசியா; கிழக்கே இந்தோ-சீனு; மேற்கே பாரசீகம்.

(ஈ) ஷில்லாங் நகரம் பர்மாவில் இருக்கிறது.

2. ஷேக் முகம்மது அப்துல்லா, கோபிநாத் பார்தோலாய், கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் இந்த மூன்று பேர் வாழ்க்கையிலும் பொதுவான ஓர் அம்சம் உண்டு. அது என்ன தெரியுமா?

3. இங்கிலாந்தில் அரசாண்ட மூன்று பேர் ஒரே தந்தைக்குப் பிறந்தவர்கள். அவர்கள் யார், யார்?

4. கடிகாரப் பெண்டுலத்திலுள்ள குண்டைக் கீழே இறக்கினல் வேகம் குறையுமா, அதிகரிக்குமா? ஏன்?

5. பிரிட்டனுக்கு ஐரோப்பாவில் காலனிகள் உண்டா?

6. மோட்டார் ஓட்டத் தெரிந்தவர்கள் இந்தக் கேள்விகளுக்கு விடை சொல்லி விடுவார்கள். மற்றவர்கள் கவனித்திருந்தால் தான் சொல்ல முடியும்.

(அ) மோட்டாரைத் திருப்புவதற்காக உள்ள கை பிடிச் சக்கரம் (ஸ்டீயரிங் வீல்) எவ்வளவு தூரம் சுற்ற முடியும்? ஒரு முழுச் சுற்றுச் சுற்ற முடியுமா, முடியாதா?

(ஆ) காரின் முன் சக்கரங்கள் குதித்து ஓடும்போது திசை திரும்பிக் கைபிடிச் சக்கரத்தைச் சுழன்று ஆடச் செய்யுமா, செய்யாதா? ஏன்?

7. ஸர் வி. வி. ராமன், ஸர் நார்மன் ஏஞ்செல், சார்லஸ் ஷெரிங்டன் இந்த மூன்று பேரும் நோபெல் பரிசு பெற்றவர்கள் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். என்ன என்ன விஷயத்துக்காக அதைப் பெற்ருர்கள்?

8. "மத்திய இந்தியாவில் இருக்கும் ஓர் அற்புதமான கிராமத்துக்குச் சென்றேன். அது அதிகப் பள்ளத்தாக்கான இடம். உதிக்கும் போதும் அஸ்தமிக்கும்போதும் சூரியன் அந்த ஊரிலிருந்து இருக்கும் தூரத்தைவிட நடு உச்சி வேளையில் 3,000 மைல் சமீபமாக வந்து விடுகிருன்" என்று ஒரு நண்பர் சொன்னர். அந்த ஊரை உங்களால் கண்டுபிடித்துச் சொல்ல முடியுமா?

'திருட்டு' என்று பெரியவர்கள் நினைப்பது
சிறுவர்களுக்கு வேறாகத் தோன்றுகிறது;
கண்டித்துப் பலன் உண்டா?

சிறுவர் திருடினால்-?

கேட் கார்பின்

நம் குழந்தைகளே திருடுகிறார்கள் என்றால், அப்புறம் நாம் என்ன செய்வது? ஆனால் அநேக குடும்பங்களில் இந்த மாதிரி நேர்ந்துகொண்டுதான் இருக்கிறது. பிறர் பொருளைக் களவாடும் பழக்கம் ஐந்திலிருந்து எட்டு வயது வரையிலுந்தான் குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. இந்தக் கெட்ட பழக்கத்தைப் போக்குவதற்கு நாங்கள் சில வழிகளைக் கண்டுபிடித்தோம். இடையில் சில தவறுகள் நேர்ந்தன என்றாலும், முடிவில் இந்தத் துர்க்குணம் மறைந்தபடியால் அவைகளைக் கூறுகிறேன். அவை தவிர வேறு வழிகளே இல்லை என்று நான் கூறவில்லை. என் குழந்தைகள் விஷயத்தில் பலித்தது போல வேறு குழந்தைகள் விஷயத்திலும் அவை பலிக்கலாமே என்ற எண்ணத்தினாலேயே கூறுகிறேன்.

எங்கள் முதல் மூன்று குழந்தைகளிடத்திலும் இந்தக் கெட்டகுணம் இருந்தது. 'நாம் எவ்வளவோ பாடுபட்டும் எங்கிருந்தோ குழந்தைகளுக்கு இந்தப் பழக்கம் ஏற்பட்டு விடுகிறதே!' என்று நம் மனம் பரிதவிக்கலாம். சிலர் இதைக் கண்டு பயந்தே போய்விடுவார்கள். எங்கள் குழந்தைப் பருவம் எங்களுக்கு ஞாபகம் இருந்ததால், நாங்கள் அவ்வளவு பயந்து விடவில்லை. ஆனாலும் இந்தப் பழக்கத்தை லகுவில் ஒழிக்க முடியாமற் போனபோதுதான் எங்களுக்குக் கவலை உண்டாயிற்று. குழந்தைகளுக்கு எடுத்துச் சொன்னால் உடனே திருந்திவிடுவார்கள் என்று நம்பிவிட்டோம். அதுதான் தவறாயிற்று.

எங்கள் முதல் பிள்ளைக்கு ஏழு வயது. ஒரு நண்பர் எங்களிடம் வந்து, "உங்கள் மைக்கேல் எல்லாப் பையன்களுக்கும் தினம் பட்சணமும் மிட்டாயும் வாங்கித் தருகிறானே! இன்று அவன் கையில் ஐந்து டாலர் நோட்டுக்கூட ஒன்று இருந்தது; பார்த்தேன்" என்றார். இதைக் கேட்க எங்களுக்குத் தூக்கி வாரிப்போட்டது. என் பணப்பையிலிருந்து அவன் வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொண்டிருக்கிறான் என்று தெரிந்தது. அவனுக்கு இப்படித் திருடவேண்டும் என்று தோன்றுவானேன்?

காரணம் கண்டுபிடிப்பது ஒன்றும் கஷ்டமில்லை. மைக்கேலுக்கு விளையாட்டுக்களில் சூடிகை போதாது. ஆகவே, அவனை மற்றப் பிள்ளைகள் ஒரு விளையாட்டுக்கும் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். அவன் அவர்களுடைய நட்பை எவ்

காப்பிரைட்: பேரென்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்; செப்டம்பர் '50), சிக்காகோ 39,
ஐக்கிய அமெரிக்கா.

விதம் சம்பாதிப்பது? அதற்குத் தான் அவன் இந்த வழியைக் கையாண்டிருக்கிறான். அவன் திருடுவதைப்பற்றி ஒன்றும் சொல்லாமல், அதன் காரணத்தைப்பற்றிக் கவனிப்பது என்று தீர்மானித்தோம். கால்பந்து விளையாட்டில் அவனைத் தேர்ச்சி பெறும்படி செய்துவிடுவதாக அவன் தந்தை ஏற்றுக்கொண்டார். சில வார காலம் மும்முரமாக அப்பியாசம் செய்ததில் அவனுக்குப் போதிய திறமை உண்டாயிற்று. இப்போது அவனை மற்றப் பிள்ளைகள் சந்தோஷமாய் விளையாட்டில் சேர்த்துக்கொண்டார்கள். இவ்விதம் அவனுடைய ஆவல் நிறைவேறி விடவே அவன் திருடும் வழக்கமும் அதோடு ஒழிந்துவிட்டது. தண்டனையோ, கலவரமோ ஒன்றும் இல்லாமல் இதைச் சாதித்துவிட்டோம்.

ஒரு வருஷம் சென்றது. மைக்கேல் மறுபடியும் திருடத் தொடங்கினான். ஆயினும் இந்தத் தடவை ஜோன்ஸ் வீட்டுப் பையன்கள் கையில் அதிகப் பணம் வைத்திருந்தார்கள்; அதைக் கொண்டு அவர்கள் செய்வதைப் போலெல்லாம் தானும் செய்யவேண்டும் என்ற எண்ணத்தினால் தான் திருடினான். நாங்கள் பணவிஷயத்தில் மிகவும் சிக்கனமாக இருப்பவர்கள். தேவைக்குமேல் செலவழிக்க மாட்டோம். மைக்கேலும் வரவுக்குத் தகுந்தபடி செலவழிக்கத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம். என் கணவர் ஒழிந்த நேரத்தில் வேறு ஏதாவது வேலை செய்து குடும்பச் செலவுக்கு வேண்டியதைச் சம்பாதித்து வந்தார். இல்லாவிட்டால் அவர் சம்பளம் செலவுக்கு முழுவதும் பற்றாது. மைக்கேலும் இதேமாதிரி அதிகப்படிப் பணம் சம்பாதித்துக்கொள்ள வழி சொல்லாமல் அவன்மட்டும் வரவுக்குத் தக்க செலவு செய்ய வேண்டும் என்றோம். எவ்வளவு சொல்லியும் அவன் மேலுக்கு ஒப்புக்கொள்வது போல் பேசினானே யொழிய உண்மையில் அவன் இதை ஏற்கவில்லை.

இடையில் அவன் தங்கை ஷீலாவுக்கு ஏழு வயதாயிற்று. அவளுக்குத் திடீரென்று, 'அது வேண்டும். இது வேண்டும்' என்று ஆசை எழுந்தது. ஆனால் அவைகளையெல்லாம் வாங்குவது என்பதோ முடியாது. மைக்கேலிடம் நாங்கள் பேசியதைக் கேட்டதும் எங்களைப் பணம் கேட்க அவளுக்குச் சந்தேகம் உண்டாகிவிட்டது. ஆகவே, அவளும் ஒருவரும் அறியாமல் பணத்தை எடுக்கத் தொடங்கினாள். அவளிடம் இருந்த புதிய விளையாட்டுச் சாமான்கள் சிலவற்றைக் கண்ட பிறகுதான், எங்களுக்கு விஷயம் தெரிந்தது. அதைக் குறித்து ஒன்றும் கோபித்துக்கொள்ளாமல் முதலில் அவளிடம் பிரியமாய்ப் பேசினோம். அவள் ஆசைப்பட்ட இரண்டொரு பொம்மைகளைக்கூட வாங்கிக் கொடுத்தோம். சும்மாப் பேசுவதைக் காட்டிலும் இது நல்ல பயனை அளித்தது. அவள் இதற்குப் பிறகு ஒரே ஒரு தடவைதான் பணம் எடுத்தாள். அதற்கு அவள் ஒருவிதமான காரணம் கூறினாள்: "அவர்கள் எல்லாரும் என்னைவிட எவ்வளவோ நிறையப் பணம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் எடுக்கலாம் என்றால் நான்மட்டும் எடுக்கக்கூடாதா?" என்றாள்.

எல்லாருக்கும் சிறியவன் பாட். அவனும் திருட ஆரம்பித்து விட்டான். அது ரொம்பவும் அற்ப விஷயத்துக்காக. நித்தியம் ஐஸ்

க்ரீம்காரன் பள்ளிக்கூட வாசலில் வந்து நின்று ஆசைகாட்டிக் கூவுகிறுன். அது வாங்குவதற்கு அவனிடம் காசில்லை. ஆகவே, அவனும் பெட்டியிலிருந்து பணம் எடுக்கத் தலைப்பட்டான். நித்தியம் நாங்களே அவனுக்கு ஐஸ் கிரீம் வாங்கிக் கொடுத்ததும் அவனுக்கு அந்தப் பழக்கம் நின்றுபோயிற்று.

இதுவரைக்குமாவது பரவாயில்லை. இதற்குப் பிறகுதான் விஷயம் பெரிய விபரீதமாய்ப் போயிற்று. மூன்று பேரும் எங்கள் ஜேபிகளிலிருந்து திருடியதோடு நிற்காமல், பையன்களில் ஒருவன் உள்ளூர்க் கடை ஒன்றிலும் சில பொம்மைகளைத் திருடிவிட்டான்.

இந்தத் தடவைதான் நாங்கள் ஒரு பெரிய தப்புச் செய்துவிட்டோம். எங்கள் குழந்தைகள் இன்னமும் திருந்தாததால், அவர்களிடம் நாம் தாராளமாய் நடந்துகொண்டதுதான் பிசகு. 'அவர்களைத் தண்டிப்பதுதான் சரியான வழி' என்று எண்ணினேம். கடையில் போய்த் திருடியது பெருங்குற்றமாக எங்களுக்குப் பட்டது. "எங்கே, கடையில் போய்ப் பொம்மைகளை எடு பார்க்கலாம்" என்று பையன்களெல்லாம் ஒருவருக்கொருவர் சவால் விடுத்துக்கொண்டார்கள் என்று மைக்கேல் சமாதானம் சொன்னுன். கூட்டத்தோடு கூட்டமாக நடக்க விரும்பும் இந்த 'மந்தை உணர்ச்சி' கெடுதல் என்றே நாங்கள் எண்ணினேம். (ஆனுல், இந்த உணர்ச்சியாலேயே மிக நல்ல காரியங்களைச் செய்யச் சிறுவர்கள் முற்படுகிருர்கள் என்று பின்னுல்தான் நாங்கள் அறிந்துகொண்டோம்.)

"நீ எடுத்த பொம்மைகளுக்கு நீதான் பணம் கொடுக்க வேண்டும்" என்று மைக்கேலிடம் கண்டிப்பாய்ச் சொன்னேம். கடைக்காரர் நல்ல வேளையாக அவனிடம் அன்பாய் நடந்துகொண்டு, அவன் போய் இப்படிச் சொன்னதற்குச் சம்மதித்து விட்டார். அவர் பொல்லாதவராக இருந்தால், கோர்ட்டிலே நடவடிக்கைகூட எடுத்திருக்கலாம்.

வீட்டில் சொந்தச் செலவுக்கென்று குழந்தைகளுக்குக் கொடுக்கும் பணத்தை நிறுத்தி விட்டோம். வேறு பலவிதமான சௌகரியங்களும் குறைந்து போகவே, அவர்களுக்கு வெறுப்பும் கோபமும் அதிகரித்தன. 'இவர்கள் இப்படியெல்லாம் செய்தால், நமக்கு மாத்திரம் என்ன கவலை வந்தது?' என்ற ஆத்திரத்துடன் அவர்கள் மேலும் திருடத் தொடங்கியதுதான் நாங்கள் கண்ட பலன். தைரியமாய், 'வந்தது வரட்டும்' என்று பெட்டியிலிருந்து பணம் எடுக்கத் தொடங்கினுர்கள். 'இனிமேல் என்ன செய்வது?' என்று நாங்கள் தவித்தோம்.

கடைசியில் குழந்தைகளையே கூப்பிட்டு என்ன செய்யலாம் என்று கேட்கத் தீர்மானித்தோம். விஷயம் ரொம்ப மோசமாகி விட்டது. எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. "திருடப் பிடிக்கவில்லை என்றுதான் நீங்களும் சொல்லுகிறீர்கள். அப்படியானுல் என்ன செய்யலாம்? நீங்களே சொல்லுங்கள்" என்று வெளிப்படையாகக் கேட்டோம்.

இப்படியெல்லாம் பேசினுல் அவர்கள் பயந்து விடுவார்கள் என்று நினைத்தோம். ஆனுல் அவர்கள் பேசியது எங்களுக்கே ஆச்சரியமா

யிருந்தது. தாங்கள் செய்தது பெரிய தவறுதான் என்றாலும் அந்தத் தவறில் எங்களுக்கும் பங்கு உண்டு என்றுதான் அவர்கள் கூறினார்கள். பண விஷயமாய் இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் நாங்கள் சரியாக நடக்கவில்லை என்பதை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். "எங்களுக்கு என்ன என்ன வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ளாமலே செலவுக்குக் கொடுக்கிறீர்கள். அந்தப் பணத்தை நாங்கள் எங்கள் இஷ்டப்படி செலவு செய்ய முடியாமல் நீங்கள் பார்த்துக்கொள்ளுகிறீர்கள். பண விஷயமாய் உங்களுடன் பேசவும் முடியவில்லை. எப்பொழுதும், ஜாக்கிரதையாய்ச் செலவழிக்க வேண்டும், மிச்சம் பிடிக்கவேண்டும் என்று நீங்கள் கூறுவதால், எங்களுக்கு வேண்டியதைச் சொன்னால் நீங்கள் புரிந்துகொள்ளாமல் அதை வெறும் அசட்டுத்தனம் என்று தள்ளிவிடுவீர்கள்" என்று விவரித்துக் கூறினார்கள். எல்லாவற்றையும் விட அதிக ஆச்சரியத்தை அளித்தது அவர்கள் கடைசியில் கூறியதுதான். நாங்கள் பணத்தையும் சில்லறைகளையும் தாறுமாறாய் மேஜையிலும் டிராயரிலும் போட்டு வைத்திருந்ததால் 'பணம்தான் நிறைய இருக்கிறதே. அதிலிருந்து கொஞ்சம் எடுத்தால் எங்கே கண்டுபிடிக்கப் போகிறார்கள்?' என்று அவர்கள் நினைத்தார்களாம்!

"முதலில் திருடும் உத்தேசம் இருப்பதில்லை. ஆனால் பணம் தேவையாக இருக்கும்போது என்ன செய்வது? திருப்பி வைத்துவிடலாம் என்று எடுத்தால், அது சேர்ந்து சேர்ந்து பெரிய தொகையாகி முடிவில் திருப்பி வைக்கவே முடியாது என்று ஆகிவிடுகிறது. ஆகவே, அகப்பட்டுக்கொள்ளுகிற வரைக்கும் மேலும் மேலும் எடுத்துக்கொண்டே இருக்க நேருகிறது" என்று மைக்கேல் கூறினான்.

ஐஸ் கிரீமுக்காகத் திருடிய பாட் இருக்கிறானே, அவன் இன்னும் ஒரு படி மேலே போய்விட்டான். அவன் கூறியதாவது: "பணத்தைக் கண்டபடி செலவழிக்கக் கூடாது என்று எங்களுக்கு உபதேசித்து விட்டு அம்மாமட்டும் கடைக்குப் போய் உபயோகமற்ற ஒரு ஹாட்டைப் பத்து டாலர் கொடுத்து வாங்குகிறாள். ஆனால் ஐஸ் கிரீமுக்குப் பத்து அணா செலவழிப்பதென்றால் அவளுக்கு மனசு வருவதில்லை. அதனால்தான் பணம் எடுக்கும்படி ஆகிறது" என்றான்.

அவர்கள் கூறியதெல்லாம் எங்களுக்கு நியாயந்தான் என்றுபட்டது. ஆனால் உண்மையில் நமக்குப் பணம் எவ்வளவு கிடைக்கிறது, எவ்வளவு செலவழித்தால் நமக்குக் கட்டும் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று தோன்றிற்று. நமது வரவு செலவைப்பற்றி அவர்களுக்கு இதற்குள் கூறுவானேன் என்று நினைத்தோம். ஆனால் இப்போது அது அவசியமாகப் படவே கணக்குப் புத்தகத்தை எடுத்து அவர்களுக்குக் காட்டும்படியாயிற்று. எங்களைப் போல் ஒரு குடும்பத்தின் சாப்பாட்டுக்கும், துணிமணிக்கும் எவ்வளவு பணம் செலவாகிறது என்பதைப் பார்த்ததும் அவர்களுக்குத் திகைப்பு உண்டாயிற்று. தங்கள் கைச்செலவுக்குக் கொடுக்கும் பணத்தோடு, ஸ்கூல், ஃபீஸ், புத்தகம் ஆகியவைகளுக்காகச் செலவாகும் பணத்தையும் சேர்த்துத் தங்களிடமே கொடுத்து விட்டால்தான்

தங்கள் பொருட்டுச் செலவாகும் பணம் உண்மையில் எவ்வளவு என்பது தங்களுக்குத் தெரியவரும் என்று அவர்கள் யோசனை கூறினர்கள். கைச் செலவுக்கு என்று தங்களுக்குக் கொடுக்கும் பணம் மிகக் குறைவு என்றும் அவர்கள் கூறவே, அவர்களுக்கு என்ன என்ன தேவை என்பதைப்பற்றிப் பேசி ஒரு மத்தியஸ்தமான முடிவுக்கு வந்தோம். அவர்கள் சொந்தச் செலவுக்குக் கொடுக்கும் பணத்தை இரட்டிப்பாகக் கொடுக்க இசைந்ததுடன் மேற்கொண்டு பணம் தேவையாக இருந்தால் என்ன என்ன வேலைகள் செய்து அவர்களே சம்பாதித்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தோம். ஆயினும், தாங்களே சம்பாதிப்பதென்றால் என்ன சிரமம் இருக்கிறது என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளும் பொருட்டுச் சில மாத காலம் வரைக்கும் அவர்கள் சொந்தச் செலவுக்கென்று கொடுக்கும் பணத்தை மட்டும் அடியோடு நிறுத்திவிட்டோம். குழந்தைகள் விஷயத்தில் இப்படியும் செய்யலாமா என்றுதான் கேட்பவர்களுக்குத் தோன்றும். ஆனல் தண்டனையாக இல்லாமல் அவர்களுக்குச் சரியான படிப்பினை ஏற்படவேண்டும் என்றே இந்த யோசனையைக் கூறியதால், எங்கள் குழந்தைகளின் விஷயத்தில் இதனல் ஒரு தவறும் ஏற்படவில்லை.

துணி துவைப்பது, சலவை செய்வது போன்ற சில்லறை வேலைகளைத் தாங்களே செய்து பார்த்ததும், 'அப்பா எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிருர்' என்பது அவர்களுக்கு ஒருவாறு விளங்கிற்று. நாங்கள் எங்கள் சிரமத்தை எடுத்துச் சொன்னபோதெல்லாம் அவர்களுக்கு அவ்வளவு நன்ருகப் படவே இல்லை. சில மாதம் வரை அவர்கள் தாங்கள் சொன்னபடி சரியாக நடந்துகொள்ளவே வழக்கம்போல் மீண்டும் அவர்களுடைய சொந்தச் செலவுக்குப் பணம் கொடுக்கத் தொடங்கினேம். இப்போது அவர்களுக்கு அதன் அருமை நன்ருகத் தெரிந்தது. இந்தச் சம்பவம் இரண்டு வருஷங்களுக்கு முன்பு நடந்தது. அதற்குப் பிறகு முன்போல் திருட்டு எதுவும் நடக்கவேயில்லை.

கவிஞரின் கேள்வி

ஒரு மனிதருக்குப் பத்திரிகைகளில் எழுதவேண்டும் என்று ஆசை வந்தது. 'நான் ஏன் வாழ்கிறேன்?' என்ற தலைப்புடன் ஒரு கவிதை எழுதினர். அதை ஒரு பத்திரிகாசிரியருக்கு அனுப்பினர்.

சிலநாளில் அந்தக் கவிதை திரும்பி வந்துவிட்டது. அதோடு ஆசிரியரின் பின்வரும் குறிப்பு இருந்தது. "உம்முடைய கவிதையை நாங்கள் உபயோகித்துக்கொள்ள முடியாததற்கு வருந்துகிறேம். ஆனல், உம் கேள்விக்குப் பதில் சொல்ல முடியும்: அது ஏனென்ருல், நீர் இந்தக் கவிதையை எங்களிடம் நேரே கொண்டு வந்து கொடுக்காமல், தபாலில் போட்டதனல்தான்."

—'அவுட்ஸ்பான்'

யார் வீரர்? அவர்களுடைய ஜயந்தியை எந்த மனோபாவத்துடன் கொண்டாடுவது? இந்த நுட்பங்களை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

யாருக்கு ஜயந்தி?

காகா காலேல்கர்

இந்த உலகத்தில் பிறக்கும் மனிதர்களுக்குக் கணக்கு வழக்கே இல்லை. நாம் அவர்கள் எல்லாருக்கும் ஜயந்தி கொண்டாடுவதில்லை. யாருடைய வாழ்க்கை ரகசியத்தை எண்ணும்போது நமது உள்ளத்தில் உன்னதமான தூய எண்ணங்கள் எழுகின்றனவோ அவர்களுக்குத்தான் ஜயந்தி கொண்டாடுகிறோம். கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கை உண்பதிலும் உணவுக்காக உழைப்பதிலுமே கழிந்து போய்விடுகிறது. மனிதனுக்குக் கவலையைக் கொடுத்து அவனை அறியாமையில் வீழ்த்தும் எதிரிகள் பல. இவற்றை எதிர்த்துப் போராடுகிறவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு.

பகைவனை எப்படியாவது தட்டிக் கழிப்பதும், அவனுக்குப் பயந்து உடன்படிக்கை செய்துகொள்வதும், போராட்டத் தொல்லையிலிருந்து தப்பித்துக்கொள்வதுமே சாமானிய மக்களின் வாழ்க்கை வழி. இந்த முறைகளினால் பகைவன் ஓடிப் போவதில்லை. அவன் அடிக்கடி வந்து ஒவ்வொரு சமாதானத்தின் போதும் அதிகச் சலுகைகள் கேட்கிறான். இதற்காகப் பணம் மட்டுமல்ல; உயிரையும் வீரத்தையும் சுதந்தரத்தையுங்கூட விலை கூற வேண்டி வருகிறது. இந்த மூன்று பொருள்களிலும் ஒவ்வொருவனுக்கும் ஆசை உண்டு. ஆனால் தலையைக் கொடுத்தாவது வீரத்தையும் சுதந்தரத்தையும் காக்கும் துணிச்சல் எவனிடம் இருக்கிறதோ அவனைத்தான் நாம் வெற்றிவீரன் என்கிறோம். மானிட ஜாதியின் எதிரியை எவன் வெல்கிறானோ அவனுக்குத்தான் நாம் ஜயந்தி கொண்டாடுகிறோம். ஜயந்தி என்ற சொல்லுக்கு இதுதான் பொருள்.

நாம் ஜயந்தி கொண்டாடுவதன் நோக்கம் என்ன?

இரண்டு வகையான பேர்கள் ஜயந்தி கொண்டாடுகிறார்கள் - வீரர்களிடமிருந்து தூண்டுதலைப் பெற விரும்புகிறவர்கள் ஒரு வகை; வீர புருஷர்கள் தம்மைக் காப்பாற்ற வேண்டும் என்று விரும்புகிறவர்கள் இன்னொரு வகை. முதல் வகையார் வீரர்களை வழிபடுகிறவர்கள்; இரண்டாவது வகையார் வீரர்களைப் புகலாகக் கொள்வார்கள். முதல் வகையாருக்கு அந்த மகாபுருஷர்களின் வீரச் செய்கைகளிலிருந்து தூண்டுதலும் உற்சாகமும் வலுவும் கிடைக்கின்றன. வீரர்களை வழிபட்டு அவர்கள் தாமே வீரர்கள் ஆகிவிடுகிறார்கள். மற்றொரு வகையார் பாமரர்கள். அவர்கள் எப்போதும் பயப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்; தியா

காப்பிரைட்: வாழ்வின் இன்னிசை (குஜராத்திப் புத்தகம்)
பிரசுரித்தவர்: நவஜீவன காரியாலயம், அஹமதாபாது.

கத்துக்கு அஞ்சுகிறார்கள். "இந்தப் பயத்திலிருந்து எவன் எங்களை விடுவிக்கிறானோ, எவன் எங்களுக்கு ஆறுதல் கூறுகிறானோ, அவன் தான் எங்கள் தலைவன். அவனுக்கு நாங்கள் வெற்றி முரசு கொட்டுவோம்; அவனுடைய வீரத்தின் நிழலிலே சுகமாக வாழ்வோம்; அவனுடைய முகவிலாசமே எங்கள் வாழ்வு. அவன் போய்விட்டால் வேறு தலைவனை அனுப்பும்படி ஆண்டவனை வேண்டுவோம்" என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

தலைவனை வேண்டுபவர்கள் வீர பூஜை செய்யும்போது அந்த வழிபாட்டில் அநாதைகளின் கூக்குரல் கேட்கும். "அம்மா, இங்கே வா" என்னைத் தூக்கிப்போய் எதாவது ஒரு பத்திரமான இடத்தில் வை" என்கிறது பூனைக்குட்டி. "எங்கள் தாய் சிறகை அடித்துக்கொண்டு பறந்தால் நாங்களும் அப்படியே செய்வோம்" என்கிறது பறவைக் குஞ்சு.

இப்படி இரண்டுவித நோக்கத்தோடு ஜயந்திகள் கொண்டாடுகிறார்கள்.

நமது நாட்டில் அநாதை மனப்பான்மையோடு ஜயந்திகள் கொண்டாடும்வரைக்கும் நமக்கு ஆற்றல் உண்டாகாது. மனப்பான்மைக்குத் தகுந்தபடிதானே பயனும் இருக்கும்! 'ஆண்டவனுடைய திருவுள்ளத்தில் கருணை பிறக்கும் போது அவன் நமக்கு ஓர் அற்புத மகா புருஷனைத் தருவான். அந்த மகாபுருஷனைப் பயன்படுத்தி - சந்தையில் விற்று - நாம் சுகம் பெறலாம்' என்ற மனப்பான்மையில் எவ்வளவு சௌகரியம் இருக்கிறதோ அவ்வளவு வீழ்ச்சியும் இருக்கிறது. புண்ணிய புருஷர்களைப் பலி கொடுத்து இந்த உலகத்துச் சுகங்களைப் பெறுவதனால் நமது புண்ணியம் அழிகிறது; நமது பலம் போய்விடுகிறது. அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து, நம்மையே பலியிடும் தன்மையை நாம் பெற்றால்தான் நாம் அவர்களை உண்மையாக வழிபட்டவர்கள் ஆவோம். அப்போதுதான் நமக்கு மேன்மை உண்டாகும்.

இன்று நாம் ஆண்டவனிடம், "நாங்கள் பாமரர்களாகவே இருப்போம். நீ அவதாரம் செய்து எங்கள் துயரைத் தீர்ப்பாய்" என்று பிரார்த்தனை செய்யக்கூடாது. நாம் அவனிடம், "கடவுளே, எங்கள் உள்ளத்தில் நீ அவதரிப்பாய். வானரங்களையும் வீரர்களாக்கும் அவதாரம் எங்களுக்கு வேண்டும். எங்களைக் கொண்டே நாங்கள் முன்னேறும் அவதாரம் எங்களுக்கு வேண்டும். பிறரைச் சார்ந்திருப்பது எங்களுக்குத் தாழ்வு, அவமானம். சுய நம்பிக்கையிலேயே நாங்கள் எப்போதும் கடைத்தேறுவோம்" என்று சொல்ல வேண்டும்.

சுய நம்பிக்கைப் பான்மையோடு பெரியோர்களின் ஜயந்தியைக் கொண்டாடுவதால் அவர்களுடைய பெருமைக்கு நாம் உரியவர்களாவோம். பிறரைச் சார்ந்து வாழும் பான்மையோடு ஜயந்தி கொண்டாடினால் அந்தப் பெரியோர்களின் அருளுக்கு நாம் உரியவர்களாவோம்; அருள் என்றால், நல்லதனமாக அவமதிப்பைக் காட்டும் தன்மை என்று அர்த்தம்.

பிரார்த்தனையின் உண்மை

சாதாரண மக்கள் கடவுளைப் பிரார்த்திப்பதில்லை; பிச்சை தான் கேட்பார்கள்.

—பெர்னார்ட் ஷா

விவேகானந்தர் - - வாழ்வும் வாக்கும்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஞானச்சுடரை உலகெலாம் ஒளி வீசச் செய்த இந்த மகா புருஷரின் வாழ்வு தூய்மை மிக்கது; வாக்கு வன்மை பொதிந்தது.

என்ன வரம் கேட்பது? சிறு வயதில் ஸ்வாமி விவேகானந்தருக்கு நரேந்திரர் என்று பெயர். தந்தை இறந்தபிறகு அவர் வறுமையின் கொடுமை தாங்காமல் தவித்தார். ஒருநாள் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வந்து, "எங்கள் குடும்பம் மிகவும் கஷ்ட தசையில் இருக்கிறது. இந்தக் கஷ்டமெல்லாம் நீங்க வேண்டுமென்று தாங்கள் எனக்காகப் பரா



சக்தி அன்னையிடம் தயை செய்து வேண்டிக்கொள்ள வேண்டும்" என்று பணிவோடு சொன்னார். ஸ்ரீராமகிருஷ்ணர் அன்போடு, "இந்தமாதிரி அநித்தியமான உலக விஷயங்களைப்பற்றி அன்னையிடம் நான் வேண்டிக்கொள்வது வழக்கமில்லையே, அப்பா! நீயே போய் முறையிட்டு வா" என்றார்.

நரேந்திரர் தேவியின் கோயிலுக்குப் போனார். தேவியின் சிலையைத் தரிசித்தார். அப்போது அன்னை பராசக்தி தெய்விக அன்பு, அழகு இரண்டின் வடிவாய் உயிர் பெற்று அவருக்குக் காட்சி அளித்தாள். அவர் பக்தி வெள்ளத்தில் மூழ்கினார். உவகை பொங்க, "தாயே, எனக்கு இது நல்லது, இது கெட்டது என்று அறியும் விவேகம் தந்தருள். துறவறம் எற்கும்படி எனக்கு அருள் புரி. அறிவும் பக்தியும் கொடுத்தருள். இடையறாமல் நான் இந்தக் கோலத்தைக் கண்டு மகிழ வேண்டும்" என்று வேண்டினார்.

அவருடைய உள்ளத்தில் பேரமைதி நிலவியது. உலகத்தையே மறந்துவிட்டார். இருதயத்தில் அன்னை பராசக்தி குடிகொண்டு விளங்கினாள்.

அவர் அங்கிருந்து திரும்பியதும் ஸ்ரீராமகிருஷ்ணர், "என்ன அப்பா, உலகத்தில் உன் இஷ்டமெல்லாம்

பூர்த்தியாகும்படி வேண்டிக்கொண்டாயா?" என்றார். இதைக் கேட்டதும் நரேந்திரர் திடுக்கிட்டுப் போனார்; "அதை மறந்தே போய் விட்டேன். இப்போது என்ன செய்யலாம்? வேறு வழி இல்லையா?" என்றார். "சரி; மறுபடியும் போய் உனக்கு வேண்டியதை அருளும்படி கேள்" என்றார் ராமகிருஷ்ணர். நரேந்திரர் மறுபடியும் கோயிலுக்குப் போனார். ஆனால் தேவியின் சிலையைப் பார்த்ததும் வந்த காரியத்தை மறந்தார். பழையபடியே அன்பும் பக்தியும் மட்டும் அருளும்படி வேண்டினார். திரும்பியதும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் முன் கேட்ட கேள்வியையே மறுபடியும் கேட்டார். நரேந்திரர் அவரிடம் நடந்ததைச் சொன்னார். "அடடா, என்ன மடத்தனம்! அந்த இரண்டு வார்த்தை சொல்லக்கூடவா, அப்பா, உனக்குச் சக்தியில்லை? சரி; மறுபடியும் போய் வேண்டிக்கொள். சீக்கிரம்" என்று அவரை ஸ்ரீ ராமகிருஷ்ணர் அனுப்பினார். மூன்றாந் தடவையாகக் கோயிலில் நுழையும்போது நரேந்திரருக்கு ஒரே கூச்சமாகவும் தலையிறக்கமாகவும் இருந்தது. "ஐயைய! இந்த அற்ப விஷயத்துக்காகவா அன்னையை வேண்டிக்கொள்வது? எல்லாம் தரவல்ல மன்னனிடம், போயும் போயும் இரண்டு காய்கறி தா என்று யாசிப்பது போலத்தான் இருக்கிறது இது! சுத்த மடையன் நான்!" என்று தம்மைத் தாமே நொந்துகொண்டார். பிறகு பராசக்தியை வணங்கி, "தாயே, அறிவும் பக்தியும் தந்தருளினால் போதும்; வேறொன்றும் வேண்டேன்" என்று உள்ளூறப் பிரார்த்தித்தார். ஸ்வாமி விவேகானந்தரே, பின்னால் ஒரு சமயம் இந்த நிகழ்ச்சியைச் சொல்லியிருக்கிறார். (வாழ்வு)

உருவ வழிபாட்டின் கருத்து: முதலில் நம் மனத்தில் ஏதாவது ஒரு பொருளை வைத்துத் தியானத்தில் ஈடுபட வேண்டும். ஆரம்பத்தில் இப்படி ஒரு கரும்புள்ளியை மனத்தில் வைத்துக்கொண்டு தியானித்து வந்தேன். கடைசியில், அந்தப் புள்ளிகூட இராமல் தியானிக்க முடிந்தது. காற்றே சிறிதும் இல்லாத கடலைப்போல் என் மனம்



அசைவற்று நின்றது. மனமேகூட இல்லை என்ற நிலை ஏற்பட்டது. வாயினால் வர்ணிக்க இயலாத ஓர் உண்மையை அப்போது நான் சிறிது உணர்ந்தேன். 'எந்த விதமான அற்ப வஸ்துவாக இருந்தாலும் சரி, அதைப்பற்றித் தியானித்து நம் மனத்தை அதிலேயே செலுத்தப் பழகினால் அதுவே ஏகாக்கிர சித்தத்தை உண்டாக்கும்' என்று எனக்குப் படுகிறது. எளிதாகப் பற்றக்கூடிய ஒரு பொருளைப்பற்றித் தியானிக்கப் பழகுவதால் மனம் எளிதில் அமைதி நிலை அடைகிறது. இதனால்தான் நம் நாட்டிலே தேவ

தேவிகளின் உருவங்களை வழிபடு கிறார்கள். இந்த மாதிரி வழிபாட்டிலிருந்து அற்புதமான ஓவியக் கலை விருத்தி அடைந்தது. சாதகர்கள் எல்லாருமே ஒரே விதமான தியானப் பொருளை மனத்தில் கொண்டிருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. அவரவர் எதைத் தியானித்துப் பூர்ண நிலையை அடைந்தார்களோ அதையே உலகத்துக்கும் விளக்கி உபதேசித்தார்கள். பூர்ணமாக மன அமைதி ஏற்பட இந்தத் தியான உருவங்கள் துணையாக நிற்கின்றன என்ற உண்மையை மறந்து பின்னால் மக்கள் அதையே அளவு மீறிப் போற்ற ஆரம்பித்து விட்டார்கள்; சாதனைப் பொருளில் ஈடுபட்டுச் சாதனையின் பயனை மறந்தார்கள். மனம் எந்தவிதத் தொழிலுமின்றி அசைவற்று நிற்கும்படி செய்வதே சரியானது. ஏதாவது ஒரு பொருளிலே ஈடுபட்டால்தான் இந்த மன அமைதி ஏற்படுவது எளிதாகும். (வாக்கு)



குருவின் லட்சணம்: ஒருவரை ஆசாரியர் என்று எப்படி அறிந்து கொள்வது? சூரியனைப் பார்க்க விளக்குத் தேவையில்லை. அது உதித்ததும் தானாகவே நமக்குத் தெரிகிறது. அதேமாதிரி ஆசாரியர் நம்மை நெருங்கும்போதே அவர் உபதேசிக்கும் தத்துவங்கள் நம் உள்ளத்தில் சுடர்விடும். உண்மையை நிலைநாட்ட எந்தவிதமான சான்றும் தேவையில்லை. அதுவே தன்னியல்பில் ஒளிரும். ஒவ்வொருவரின் அந்தக்கரணத்திலும் அது ஊடுருவி நிற்கும். அந்த நிலையில் ஜகம் முழுவதுமே 'இதுதான் சத்தியம்' என்று முழக்கம் கேட்கும். சூரியனுடைய ஒளியைப் போல் விளங்கும் தத்துவமும் பேரறிவும் படைத்த ஆசாரியர்களை மக்கள் தெய்வமென்றே கொண்டாடுவார்கள். (வாக்கு)

கரும்புக் கிணறு

சரக்குகளைப் பதுக்கிவைக்கும் கள்ளமார்க்கட் வியாபாரிகளைக் கண்டுபிடிப்பதற்காக, பீகாரில் போலீஸார் மும்முரமாகக் கிளம்பினார்கள். அப்போது ஓர் அதிசயக் கிணறு அவர்களுக்குத் தென்பட்டது. அதன் நீர் ஒரே கருப்பஞ் சாறுய்த் தித்தித்தது. விஷயத்தை விசாரித்தபோது, அந்தக் கிணற்றில் பெரிய சர்க்கரை மூட்டைகளைக் கள்ள மார்க்கட் வியாபாரி ஒருவர் கொட்டியிருக்கிறார் என்று தெரிந்தது.

—'போரம்'

க்விஸ் விடை

1. (அ) குத்ப் உத்தீன் என்ற அடிமை வம்ச அரசனே இதைக் கட்டியவன்.

(ஆ) குவாஜா நாஜிமுத்தீனே பாகிஸ்தானின் கவர்னர்-ஜெனரல். இந்த ஹாபிஜ் முகம்மது இப்ராஹீம் நம் உத்தரப்பிரதேசத்தில் ஒரு மந்திரி.

(இ) இந்திய எல்லைகள்: தெற்கே இந்து மகா சமுத்திரம். வடக்கே ருஷியா, சீனு, நேபாளம், பூடான். கிழக்கே பாகிஸ்தான், பர்மா, வங்காளக் குடாக் கடல். மேற்கே அரபிக் கடல், பாகிஸ்தான்.

(ஈ) ஷில்லாங் அஸ்ஸாமில் இருக்கிறது.

2. மூன்று பேரும் பள்ளிக்கூட ஆசிரியர்களாக இருந்தவர்கள். அப்துல்லா எம். எஸ்ஸி. பட்டமும், பார்தோலாய் எம். ஏ., பி. எல். பட்டமும், சாஸ்திரியார் பி. ஏ., எல். டி. பட்டமும் பெற்றவர்கள்.

3. ஆரும் எட்வர்டு, முதல் மேரி, எலிஜபெத் இந்த மூன்று பேரும் எட்டாம் ஹென்ரியின் மக்கள்.

4. குறையும். குண்டு மேலே ஏற ஏறப் பெண்டுலம் வேகமாய் ஆடும்; கீழே இறங்க இறங்க வேகம் குறையும்.

5. உண்டு. ஜிப்ரால்டர், மால்டா இரண்டும்.

6. (அ) அது ஒரு முழுச் சுற்றுக்கு மேல்கூடச் சுற்றும். ஆனுல் வண்டியின் முன் சக்கரங்கள் ஒரு குறிப்பிட்ட கோணத்துக்கு மேல் திரும்புவதில்லை. கை பிடிச் சக்கரத்துக்கும் காரின் முன் சக்கரங்களுக்கும் உள்ள இணைப்பு அந்த முறையில் அமைந்திருக்கிறது.

(ஆ) ஆடச் செய்யாது. 'இர்ரிவெர்ஸிபிள் கியர்' என்ற அமைப்பு இருப்பதால் கை பிடிச் சக்கரத்திஞல் முன் சக்கரங்களைத் திருப்ப முடியும்; ஆனுல் அந்தச் சக்கரங்களால் கை பிடிச் சக்கரத்தைத் திருப்ப முடியாது.

7. ராமன் பௌதிக சாஸ்திரத்துக்காக. ஏஞ்செல் உலக சமாதான முயற்சிக்காக. ஷெர்ரிங்டன் வைத்திய சாஸ்திரத்துக்காக.

8. அந்த நண்பர் பொய்யராகத்தான் இருக்கவேண்டும். உலகத்திலேயே இப்படி எந்த ஊரும் இருக்க முடியாது. பூமியின் குறுக்களவு 8,000 மைல். நடு உச்சி வேளையைவிட உதய அஸ்தமன வேளைகளில், அநேகமாக எந்த ஊரிலுமே சுமார் 4,000 மைல் (அதாவது பூமியின் குறுக்களவில் பாதி) சூரியன் எட்டிப் போய்விடுவான். பத்து மைல் ஆழமுள்ள பள்ளத்தாக்குக்கூட உலகத்தில் எதுவுமே கிடையாது. 1,000 மைல் ஆழமுள்ள பள்ளத்தாக்கு இருந்தால் அல்லவா நண்பர் சொன்னது நிகழும்?

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'பிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். அவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும்.

கேள்வி: நம்முடைய தலைவர்கள் எப்போதாவது பாடுவதுண்டா?

பதில்: எப்போதுமே பாடுகிறார்கள்; ஆனால் இப்போதெல்லாம் அந்தப் பாட்டுக்கு ஏற்றபடி ஆடுபவர்களைத்தான் காணோம்.

*   *   *

கே: இந்தியாவின் பிரஜை எப்படி இருக்க வேண்டும்?

ப: மரம் நடுகிறவனாக, விரதம் இருப்பவனாக, பயிர் செய்பவனாக, வீர பூஜை பண்ணுபவனாக, பட்டினி கிடக்கிறவனாக, சமாதானப் பிரியனாக, காங்கிரஸுக்கு வோட்டுப் போடுகிறவனாக இருக்க வேண்டும்.

*   *   *

கே: பெண்கள் ஏன் பணத்தின் மேல் அவ்வளவு ஆசை வைத்திருக்கிறார்கள்?

ப: பணத்தின் மேல் அல்ல; அதைச் செலவழிப்பதில்தான் அவர்களுக்கு ஆசை.

*   *   *

கே: இளம் பெண்கள் வீதியில் திரிந்து பிச்சை எடுக்கிறதைப் பார்க்கிறேன். இதைப் போக்குவது எப்படி?

ப: பிச்சை எடுப்பதில் பருவமோ ஆண்பெண் என்ற வித்தியாசமோ இல்லை. பசியும் வேதனையுந்தான் அதற்குக் காரணம்.

*   *   *

கே: படம் எடுக்கிறபோது நடிகைகளின் கணவர்கள் பிரசன்னமாயிருக்க அநுமதிக்கிறார்களாமே, உண்மையா? அப்படியானால் அது ஏன்?

ப: அவர்கள் தங்கள் மனைவிமாருக்கு டீயோ பிஸ்கோத்தோ தண்ணீரோ சவுக்கமோ கொடுக்கிறார்கள்; இதனால் படம் எடுக்கிறவர்களுக்கு எத்தனையோ தொந்தரவு மிச்சமாகிறது.

*   *   *

கே: பாரத நாட்டில் உடனே தேவையானது என்ன?

ப: மூளையும் யோசனையும் உள்ள மந்திரிகள் தேவை; மற்றவற்றையெல்லாம் நாட்டில் நாமே உண்டுபண்ணிக்கொள்ளலாம்.

*   *   *

கே: மந்திரி கவர்னராவது எப்போது?

ப: அந்த ஆசாமி நல்லவராகவும் ஆனால் உபயோகமற்றவராகவும் இருக்கும்போது. ஆகவே இந்தியாவில் கவர்னர்களுக்கு ஒரு நாளும் பஞ்சமே இராது.

*   *   *

கே: குருக்கள் இல்லாத கோயில் எப்படி இருக்கும்?

ப: விற்பனை வரி இல்லாத கடவுள் அதில் இருப்பார்.

காப்பிரைட்; பிலிமிண்டியா (ஆங்கிலம்: டிசம்பர் '50), பம்பாய்.

கே: அன்புள்ள பெண்ணொருத்தியோடு சில நாள் கழிப்பதற்கு மலை தேவலையா? கடற்கரை தேவலையா?

ப: மலைப்பிராந்தியந்தான்; அது சொர்க்கத்துக்குச் சமீபம்.

* * *

கே: நாமெல்லாம் நேரு, படேல் கம்பெனியின் வேலை செய்யாத கூட்டாளிகளா?

ப: அவர்களுடைய ராஜாங்க சர்க்கஸில் ஆடுகிற குரங்குகள்!

* * *

கே: ஒருவர், "பெண்கள் ஆடவர்களைக் கண்ணால் விழுங்குகிறார்கள்" என்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன். அது சரியா?

ப: ஆண்களெல்லாம் அந்தக் கண்களை நீச்சடிக்கிற குளமென்று தவறாக எண்ணிக்கொண்டு மூழ்கிப் போகிறார்கள் என்று நினைக்கிறேன். நீச்சந் தெரியாத பேர்வழிகள்!

* * *

கே: கண்ணைத் திறந்துகொண்டு வோட்டுப் போடவேண்டுமா?

ப: ஒரு கண்ணை மாத்திரம் திறந்துகொண்டு போடுங்கள். அது தான் கட்சி வோட்டு ஆகும்.

* * *

கே: மனச் சாட்சியின் வயது என்ன?

ப: அது மிகப் பழைய குள்ளன். யுகயுகாந்தரமாக அதை அமுக்கியே வைத்திருக்கிறார்கள்; அதனால் அது வளர முடிவதில்லை.

கே: இந்தியாவில் எப்போது பட்டினித் தொல்லை ஒழியும்?

ப: இந்த முட்டாள்தனமான ஜனநாயகத்தை ஒழித்து விட்டுத் தாராள மனசுள்ள சர்வாதிகார ஆட்சி வந்தால் பத்து வருஷத்தில் ஒழித்துவிடலாம்.

* * *

கே: டாக்டர்களின் கையெழுத்தைப்பற்றி என்ன அபிப்பிராயப் படுகிறீர்கள்?

ப: விதியின் எழுத்துக்கும் அதற்கும் நேரடியான சம்பந்தம் இருக்கிறது. பல டாக்டர்கள் புரியாத தங்கள் எழுத்தால் பல நோயாளிகளைச் சீக்கிரத்தில் வானுலகத்துக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

* * *

கே: பதினாரும் நூற்றாண்டில் பெண்மணிகள் தங்கள் பதிபக்தியை நிரூபிக்க ஒரு காரியம் செய்வார்களாம். அவர்கள் பிரிந்திருக்கும் போது தாங்கள் விட்ட கண்ணீரைக் கணவர்களுக்குக் காட்டுவதற்காகப் புட்டிகளில் ஏந்தி வைப்பார்களாம். தற்காலத்து மனைவிகளுக்குப் புதிய முறை ஏதாவது சொல்வீர்களா?

ப: நவீன மங்கையர்கள் தாம் குடித்த சிகரெட்டுத் துண்டுகளைக் குப்பைத் தொட்டியில் போட்டு வைக்கலாம். கோபக் கனல் கொழுந்துவிட்டு எத்தனை புகை வெளியேறியிருக்கிறதென்பதை அது காட்டலாம் அல்லவா?

நோயையும் துக்கத்தையும் விடக் கடுமையாகத் தொத்திக் கொள்ளக் கூடியவை சிரிப்பும் நல்ல விகடமுந்தான.

—சார்லஸ் டிக்கன்ஸ்

ரவீந்திரர் பாராட்டிய நஜ்ருல்

★

இந்தச் சிறந்த முஸ்லிம் கவிஞருக்குத் தான் கவியரசர் டாகுர் தம் 'வசந்தம்' என்ற நூலை அர்ப்பணம் செய்தார். இவர் இன்னும் உயிரோடு இருக்கிறார் - ஆனால் பரிதபிக்கத்தக்க நிலையில்!

நஜ்ருல் இஸ்லாம் என்ற பெயரைக் கேட்டமாத்திரம் ஹிந்து முஸ்லிம் வங்காளிகள் எல்லோருமே உற்சாகம் கொள்வார்கள். கவியரசர் ரவீந்திரநாதருடைய பாடல்களைப் போலவே நஜ்ருல் இஸ்லாமின் பாடல்களுக்கும் வங்கத்தில் விசேஷ மதிப்பு உண்டு.

நஜ்ருல் வர்த்தமான் ஜில்லாவிலுள்ள சுருளியா கிராமத்தில் 1899-ஆம் ஆண்டில் ஓர் எளிய முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தவர். இள வயதில் பள்ளிக்கூடத்தில் சேர முடியவில்லை. அதோடு எந்தக் கட்டுக்கும் அடங்காத சுபாவம் உள்ளவர். அப்போதெல்லாம் ஊராரின் தோட்டங்களில் புகுந்து பழங்களைத் திருடுவதில் இவருக்கு இருந்த உற்சாகம் சொல்லிமுடியாது. பள்ளிக்கூடப் படிப்பு இராவிட்டாலும் இவருடைய புத்திக் கூர்மையைக் கண்டு கிராமத்தில் இருந்த கிழ மௌல்வி ஒருவர் இவருக்குப் பாரசீக இலக்கண இலக்கியங்களைப் போதித்தார். நஜ்ருல் தாய்மொழியான வங்காளியிலும் பயிற்சி பெற்றார். மேற்கு வங்க முஸ்லிம்கள் 'லேடோ நாச்' 'ஜாரி நாச்' என்ற ஆட்ட பாட்டங்களில் தேர்ந்தவர்கள். அந்த நாட்டியம் ஆடும்போது கவிதைப் போட்டிகள் நடத்துவார்கள். இதில் யார் ஜயிக்கிறார்களோ அவர்களைக் கவியரசர் என்று சிறப்பித்துக் கொண்டாடுவது வழக்கம். நஜ்ருலின் சிறிய தந்தை இப்படிப் பெயர் எடுத்தவர். நஜ்ருலும் 12, 13 வயதிலேயே இரண்டோர் அற்புதமான பாடல்களைப் பாடிப் புகழெடுத்தார்.

ஊரார் சிலர் பண உதவி செய்து இவரை ராணிகஞ்சுக்கு அருகில் இருந்த ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். ஆனால் இவருக்குப் பள்ளிக்கூடம்போகப்பிடிக்கவில்லை. ஒரு ரொட்டிக் கடையில் மாதம் ஐந்து ரூபாய் சம்பளத்தில் மாவு பிசையும் வேலையில் அமர்ந்தார். இரவு நேரத்தில் சந்தர்ப்பம் கிடைத்தபோது ஏதாவது புத்தகத்தை வைத்துக்கொண்டு படிப்பார். மைமன்சிங்கிலிருந்த ரபீஜுத்தீன் என்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் இவருடைய மேதையைக் கண்டு வியந்து தம் சொந்தச் செலவில் மறுபடியும் இவரைப் படிக்க வைத்தார். ஆனால் நஜ்ருல்

ஆதாரம்: (1) மௌசாக், (2) கவிதா (வங்காளி), கல்கத்தா.

தினந்தோறும் அங்கே போவதாகப் பாசாங்கு செய்துவிட்டு எங்காவது மரத்தின்மேல் ஏறி வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பாராம். ஆண்டு முடிவில் பரீட்சையின் போது நஜ்ருல் விடைத் தாளில் அற்புதமான வங்காளிக் கவிதைகளை எழுதிவிட்டு வந்தார். அதைப் படித்ததும் பள்ளிக்கூடத்துப் பண்டிதர் அப்படியே திகைத்துவிட்டார். அப்போது அவர், "இவனுக்குக் கற்றுக்கொடுக்கும் தகுதி எனக்கு இல்லை" என்றாராம்.

பிறகு நஜ்ருல் தாமாகவே பள்ளிக்கூடத்துக்குப் போய் வரலானார். அப்போது இவருக்கு வயது 18. முதல் உலக மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. யாரோடும் சொல்லாமல் பட்டாளத்தில் சேர்ந்துவிட்டார்.

யுத்தம் முடிந்ததும் மெஸபடோமியாவிலிருந்து திரும்பி வந்தார். அப்போது நாட்டில் ஒத்துழையாமை இயக்கமும் கிலாபத் கிளர்ச்சியும் ஆரம்பமாயின. இவருடைய உள்ளத்தில் தேசாபிமானம் கொழுந்துவிட்டது. தீவிரமாக அந்த இயக்கத்தில் ஈடுபட்டார். 'முஸ்லிம் பாரதம்' என்ற வங்காளிப் பத்திரிகையின் துணை ஆசிரியராகி வீரம் செறிந்த அநேகம் கவிதைகளை எழுதினார். 'வித்ரோகி' (புரட்சியாளன்) என்ற கவிதை எழுதியதற்காகப் பிரிட்டிஷ் அரசாங்கம் இவருக்குக் கடுமையான சிறைத் தண்டனை விதித்தது. வங்காளம் முழுவதுமே அந்தக் கவிதையைப் படித்துவிட்டுக் கொதித்தெழுந்தது.

ரவீந்திரருக்கும் நஜ்ருலுக்கும் நட்பு ஏற்பட்ட வரலாறு ரசமானது. அப்போது ரவீந்திரர் கல்கத்தாவில் தம் ஜோடாஸாங்கோ மாளிகையிலே வசித்துவந்தார். நஜ்ருலின் நண்பர்கள், "அங்கே நுழைவதென்றால் லேசா? பெரிய பெரிய ஆசாமிகளுக்கெல்லாமே அவ்வளவு துணிச்சல் இல்லையே!" என்று சொன்னார்களாம். நஜ்ருல் மீசையை முறுக்கிவிட்டு, "பார்க்கலாமா? நான் இதோ போகிறேன்" என்று புறப்பட்டார். நண்பர்கள் ஏதோ விபரீதந்தான் நேரப்போகிறது என்று அஞ்சினார்கள். ஆனால் நஜ்ருல் மனம் வைத்தால் நடக்காத காரியம் இல்லை. "பசு தன்னைக் கழுவிடுவாய், நண்பா!" என்று தாம் கட்டிய ஆயன் பாடலை உரக்கப் பாடிக்கொண்டே நேராகக் கவியரசரின் அறையில் நுழைந்துவிட்டார். ரவீந்திரர் ஏற்கனவே இவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார்; இவருடைய கவிதைகளையும் படித்து மகிழ்ந்தவர். உடனே எதிர்கொண்டு அழைத்து நஜ்ருலை மார்புறத் தழுவிக்கொண்டார்.

'கவிதையில் உன் சொல் பிரயோகம் வன்மையாகவும் அபாரமாகவும் இருக்கிறது, அப்பா!' என்ற கருத்தைக் கவியரசர் எப்படி வெளியிட்டார் பாருங்கள். "நஜ்ருல், இப்போதெல்லாம் ஸேப்டி ரேஸரை விட்டுப் பட்டாக்கத்தியையே உபயோகிக்கிறாய்போல் இருக்கிறதே!" என்றுதான் தமாஷாகக் கேட்டார்.

பின்னால் நஜ்ருல், 'தூமகேது' என்ற பத்திரிகையின் ஆசிரியரானார். 'அக்கினி வீணை' என்ற கவிதை எழுதியதற்காகப் பிரிட்டிஷ் அரசாங்கம் ராஜத்துரோகி என்று இவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. சிறைக் கொடுமை தாங்காமல் நஜ்ருல் ஹூக்ளியில் உண்ணாவிரதம் ஆரம்பித்தார். இதைக் கேட்டு

ரவீந்திரரின் உள்ளம் வேதனைப் பட்டது. "தயைசெய்து உண்ணுவிரதத்தை நிறுத்து, நஜ்ருல். வங்க இலக்கியம் நீ இன்றி வாடுகிறது" என்று தந்தி கொடுத்தார். ஆனால் எந்தக் காரணத்தாலோ அந்தத் தந்தி, 'ஆள் இங்கே இல்லை' என்று அவரிடமே திருப்பி வந்துவிட்டது. அப்போது தாம் எழுதிய 'வசந்தம்' என்ற நூலை ரவீந்திரர் நஜ்ருலுக்கு அர்ப்பணம் செய்தார்.

அதே சமயம் நஜ்ருல், தம்மை மகனைப்போல் ஆதரித்துவந்த விரஜா தேவி என்ற அம்மையாரின் வேண்டுகோளுக்கு இணங்க உண்ணுவிரதத்தை நிறுத்தினார். சிறையிலிருந்து விடுதலை ஆனதும் இவருக்கு விவாகம் ஆயிற்று. நஜ்ருல் எப்போதுமே, ஹிந்து முஸ்லிம் என்று பேதம் பாராட்டியதில்லை. இவர் மனைவி ஹிந்துப் பெண்மணிதான். சில ஆண்டுகள் கழித்து இவருடைய சின்னஞ்சிறு மகன் புல்புல் இறந்துபோனான். மனைவிக்கும் பாரிச வாயு கண்டு படுத்த படுக்கையாகிவிட்டாள். அப்போது இவர் பட்ட மன வேதனையைச் சொல்லி முடியாது. வரதாசரண் மஜூம்தார் என்ற வேதாந்தியின் உபதேசத்தை ஏற்றுயோக சாதனையில் ஈடுபட்டார். உபநிஷதம், குர்ஆன், தந்திர சாஸ்திரம் இவைகளை ஆராயத் தொடங்கினார். சமீபத்தில் சில காலமாக இவருக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டிருக்கிறது. நெருங்கிய நண்பர்களைக்கூட அடையாளம் கண்டுகொள்ள முடியாத நிலையில் இருக்கிறார். "அதிகமாக யோக சாதனையில் ஈடுபட்டதே இதற்குக் காரணம்" என்கிறார்கள் வைத்தியர்கள். ஒரு காலத்தில் வங்க மக்களின் வீர உணர்ச்சியைத் தட்டி எழுப்பிய இவருடைய குரல் இன்று மங்கிக்கிடக்கிறது; வறுமைப்பிணி இவரை வாட்டுகிறது. நண்பர்கள் அவ்வப்போது இவருடைய குடும்பத்துக்குத் தங்களால் ஆன உதவி செய்து வருகிறார்கள்.

கணவனின் பரவசம்

கூடத்தில் குழந்தையின் தொட்டிலுக்குப் பக்கத்தில் கணவன் குனிந்த தலை நிமிராமல் நிற்பதைக் கண்டாள் வாலிப மனைவி. சத்தப்படாமல் அவன் அருகே போனாள். ஓட்டை உடைசல் சாமான்களை வாங்கி விற்கும் அந்த வியாபாரியின் முகத்திலேதான் என்ன சந்தேகம்! என்ன வியப்பு! என்ன ஆனந்தம்! என்ன திகைப்பு! என்ன பரவசம்! மனைவிக்குப் பெருமை தாங்கவில்லை. உள்ளங் குழைந்து உணர்ச்சி மிக்கவளாய் அன்பு கனிந்த குரலில், "ஏது! அப்படியே சிலையாய்ப் போய்விடுவீர்கள்போல் இருக்கிறதே! அப்படி என்ன மெய் மறந்த சிந்தனை?" என்று கேட்டாள்.

கணவன் பிரக்ஞை வந்தவனைச் சட்டென்று நிமிர்ந்து திரும்பி, சிறிதும் யோசியாமல், "ஒன்றுமில்லை, வேலை மெனக்கிட்டுப்போய் ஐந்து வெள்ளிக் காசுக்கு இத்தனை வேலைப்பாடு செய்திருக்கிறானே இந்தத் தொட்டிலைப் பண்ணியவன். அதைப்பற்றித்தான் அதிசயித்துக்கொண்டிருந்தேன்" என்று உளறிவிட்டான்.

—'கூரியர் - ஜர்னல் மகஸீன்'

கார்ட்டூன் கதம்பம்



இன்னமும் கனவு காணும் பிரகாசம்.

—'ப்ரீ இந்தியா'



அப்படியானால் ஏன் இத்தனை விவகாரம்?

—'பயனீர்'



"முஸ்லிம் லீகே பாகிஸ்தான்" என்கிருர் லியாகத்.

—'சங்கர்ஸ் வீக்லி'

கத்தரித்து நாகரிகப்படுத்த வந்த கரடி.

—'அமிர்தபஜார் பத்திரிகா'

எல்லாவிதத் தேனும் ஒரேவிதமாய்க் குணந் தராதாம்; அதிலே பல ரகங்கள் உண்டாம்.

தேனின் குணம்

புச்சா வேங்கடராமையா

தேன் நம் நாட்டில் பல இடங்களில் கிடைக்கிறது. இது உணவாகவும் மருந்தாகவும் பயன்படுகிறது. நாட்டு வைத்தியர்கள் இதன் அருமையை ஆராய்ந்து உணர்ந்து தம் சிகிச்சையில் பல முறைகளில் இதை உபயோகிக்கிறார்கள். தேனைத் தொட்டால் சில்லென்றிருக்கும். அதன் இனிப்பு எல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான். சிலேஷ்மத்தைப் போக்கித் தாகம், வறட்சி, பித்தம் முதலியவற்றைச் சரிப்படுத்தும். உள்ளுக்குச் சாப்பிட்டால் குறுகிய கால அளவிலே, உடம்பின் ஒவ்வோர் அணுவிலும் புகுந்து பரவி வேலை செய்யும். விறுவிறுப்பும் உஷ்ணமும் வீரியமும் இதில் சேர்ந்திருப்பதால், விசேஷமாகச் சுவாச காச நோய்க்கும், நீரிழிவுக்கும் சிறந்த மருந்தாகும். தேனை ஆறாத ரணத்தின் மேல் தேய்த்தால், அதில் சீழ் பிடிக்காமல் காக்கும். புதிய வெட்டுக்காயங்களில் தடவினால் பிளவுபட்ட தோல் ஒன்றாகச் சேர்ந்துகொள்ளும்; ரணமும் ஆறிவிடும்.

தேனை ஒழுங்காக உட்கொண்டு வந்தால் வாய்க்கு ருசி உண்டாகி, தாது புஷ்டி ஏற்படும். உடம்புக்கு நல்ல நிறமும் திடமும் மனத்துக்கு உல்லாசமும் இருதயத்துக்குப் பலமும் தரும். தேன் கலக்காத லேகிய முறையே இல்லை. ரொட்டி, அடை முதலியவைகளுக்குத் தேன் பாகு என்று வழங்கும் வெல்லப் பாகைவிடத் தேனையே சேர்த்து உண்பது நல்லது. இது நுண்ணிய பூச்சிகளைக் கொல்லும் சக்தி உள்ளது; அதனால் முக்கியமாகக் குஷ்டம் முதலிய நோய்களுக்கு உபயோகிப்பார்கள். ஆஸவங்கள், அரிஷ்டங்கள் என்று சொல்லும் திரவமான மருந்துகளில் தேனைச் சேர்ப்பதால் அவை பல மாதங்கள் வரையில் கெடாமல் ருசியாகவும், நிறம் மாறாமலும் இருக்கும். கண்களில் சொட்டுச் சொட்டாகத் தேனைச் செலுத்தினால் கண்ணில் இருக்கும் பீளையும் துர்நீரும் வெளிப்பட்டு விடும்; கண்ணைப்பற்றிய நோய்கள் தீர்ந்து பார்வை கூர்மையாகும்.

தேனில் பல ரகங்கள் உண்டு. நிறத்திலிருந்தும் குணத்தைக் கொண்டும் அவைகளை அறிந்து கொள்ளலாம். **பிராமரகம்** என்னும் தேன் வெளுப்பாகவும் ருசியாகவும் இருக்கும். **பைத்திகம்** என்னும் வகைத் தேன் நெய்போல் தோய்ந்து கபவாத பித்தங்களைக் கிளப்பும்; ஆனால் இது உடம்புக்குப் புஷ்டியைத் தரும் என்கிறார்கள். **க்ஷௌத்திரம்** என்பது ஒருவகைத் தேன். இது குழம்புபோல் கெட்டியாகவும் பழுப்பாகவும் இருக்கும்.

மூலம்: ப்ரக்ருதி (தெலுங்கு ; செப்டம்பர் '50), விஜயவாடா.

இது மிகச் சிறந்தது என்கிறார்கள். இது சிலேஷ்மத்தை உண்டாக்கும். **மாக்ஷிகம்** என்னும் தேன் எண்ணெய் போல் லேசாகவும் விறுவிறுப்பாகவும் இருக்கும். வாதத்தை உண்டாக்கும். ருசியாக இருக்கும். ரணங்களை ஆற்றுவதில் சிறந்தது. இது தேன் வகைகளில் முதல் தரமானது.

இவை தவிர வேறு நாலுவகைத் தேனைப்பற்றியும் சுச்ருதர் எழுதியிருக்கிறார்: அவை, **சாத்ரம், அர்க்கியம், ஔத்தாலகம், தாலம்** என்பவை. அவைகளின் குணம், நிறம் எல்லாம் ஒன்றுக்கொன்று வேறுபட்டவை. அவைகளை உபயோகிப்பதிலும் வேறுபாடு உண்டு.

தேனீக்களின் விஷமும் பூக்களின் விஷமும் சேர்ந்திருப்பதால் தேனைச் சூடுள்ள பதார்த்தங்களோடு சேர்ப்பதில்லை. ஆனால் இலுப்பை மரத்திலிருந்து உண்டான வெள்ளைத்தேனை உபயோகிக்கலாம்; அழுக்குச் சேர்ந்த தேனாயிருந்தால் எட்டில் ஒரு பங்கு பாலையோ தண்ணீரையோ சேர்த்து, அந்தப் பாலோ தண்ணீரோ வற்றும் வரையில் காய்ச்சினால் தோஷம் நீங்கிச் சுத்தமாகும். ஆனால் வெறும் தேனை மட்டும் காய்ச்சுவது அபாயம்.

புத்தம் புதியதாக எடுத்த தேன் மிக ருசியாகவும் கொழ கொழ வென்றும் இருக்கும். இது சிலேஷ்மத்தை விருத்தி செய்யும்; மலத்தைக் கட்டும். ஆகவே, பழைய தேனை உட்கொள்வதும் மருந்துகளில் சேர்ப்பதுந்தான் நலம்.

தேனைச் சுலபமாக உபயோகித்து நோய்களைக் குணமாக்கும் முறைகளைப் பல வைத்திய நூல்களில் காணலாம். தேனைத் தண்ணீருடன் கலந்து குடித்தால் தூர்மாமிசம் கரைந்துவிடும். கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இந்த மூன்றின் சூர்ணத்தோடு தேனைச் சேர்த்துக் குழைத்து உள் நாக்கு வளர்ந்த இடத்தில் தடவினால் அதிகச் சதை கரைந்துவிடும்.

தற்காலத்தில் மருந்துக் கடைகளில் விற்கும் தேன் அநேகமாக மோசமானது. நமக்கு அவசியம் நேர்ந்தபோது விசாரித்து நல்ல தேனாகப் பார்த்து வாங்கி உபயோகித்தால் ஆரோக்கியம் உண்டாகும்.

'தேன் சூடானது. அது உடம்புக்கு உஷ்ணத்தைத் தரும்' என்று சிலரும், 'குளுமை செய்யும்' என்று சிலரும் பொதுப்படையாகச் சொல்வதற்குக் காரணம் தேன் பல வகைப்பட்டது என்பதை மக்கள் அறியாததுதான்.

சொல் நயம்

கதரைன் விட்கூம்ப் என்ற நூலாசிரியை நியூ யார்க் நகரத்துப் பெரிய ஹோட்டல் ஒன்றில் ஒரு சமயம் சாப்பிடச் சென்றாள். மேஜையண்டை உட்கார்ந்து காத்துக் காத்து இவளுக்குச் சலித்துப் போய்விட்டது. சிப்பந்தி எவனும் இவளுக்குச் சாப்பாடு கொண்டுவரவேயில்லை.

இவள் அங்கே இருந்த டெலிபோனை எடுத்தாள். ஹோட்டல் மானேஜரை அழைத்தாள். "பரிமாறும் சிப்பந்தியை என் மேஜைப் பக்கம் வரவழைக்க என்ன வழி? அதைத் தயை செய்து தெரிவியுங்கள்" என்றாள் மிகவும் மரியாதையாக.

சற்று நேரத்தில் அவளுக்குச் சாப்பாடு வந்துவிட்டது.

—கிரேஸ் வி. கைனன்

மதச் சீர்திருத்தத்திலும் சமரசத்திலும் தோன்றியதுதான் சீக்கிய சமயம்.

சீக்கியர் தெய்வம்

சர்தார் சார்தூல் சிங் கவீசர்

எல்லா மதங்களுக்கும் சம்பிரதாயங்களுக்கும் புத்துணர்ச்சி அளித்து, கால நிலைக்குத் தகுந்தபடி புதிய அமைப்போடு விளங்குவது கடவுள் தத்துவம். சீக்கிய மதத்தைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால், முதலில் கடவுளைப்பற்றிய அவர்கள் கருத்தை அறிந்துகொள்ள வேண்டும்.

சீக்கியர்கள் மிகவும் தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள். சைவர், வைஷ்ணவர், பௌத்தர், கிறிஸ்துவர், முகம்மதியர் என்று அந்த அந்தச் சம்பிரதாயத்தாரை அழைக்கிறோம். இதே மாதிரி சீக்கியர்களையும் அகாலிகள் (கடவுளின் மக்கள்) என்றும், கால்ஸாக்கள் என்றும் அழைப்பது வழக்கம். கால்ஸா என்பதற்கு "எக் பினு மன நாய்க் ந ஆநாய் (ஒன்றே பரம் பொருள்; அதையன்றி வேறு எதையும் மனத்தில் கொள்ளாதவர்கள்)" என்று பொருள். சீக் என்றாலே குருவிடம் கடவுளைப்பற்றி உபதேசம் பெறும் சிஷ்யன் என்றுதான் அர்த்தம். அன்பு செலுத்திக் கடவுளுக்குத் தொண்டு புரிவதே அவனுடைய வாழ்க்கையின் முக்கியமான கடமை. சீக்கியரின் நீதிமுறை, சமூகம் இவைகூட இந்தத் தெய்வ நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவைதான்.

அவர்களின் மூலமந்திரம் இதுதான்: '**ஏக் ஓங்கார்; ஸத் நாம்; கர்த்தா புருக்; நிர்ப்பயோ; நிர் வைர்; அகாலமூரத்; அஜூனி; குரு ப்ரஸாத்.**' 'ஒரே கடவுள்; அவரே சன்மொழி; எல்லாம் வல்ல கர்த்தா; பயமும் பகையுமில்லாதவர்; காலமும் வரம்புமற்ற மூர்த்தி; தன் நேரில்லாத பரம்பொருள்; அந்தப் பரம குருவின் அருளே நமக்குத் துணை' - இதுதான் அந்த மந்திரத்தின் பொருள்.

சீக்கிய குருமார் தோன்றுவதற்குமுன் கடவுளைப்பற்றி மாறுபட்ட இரண்டு கொள்கைகள் இந்தியாவில் பிரபலமாக இருந்தன. சங்கராசாரியர், "கடவுள் அனைத்துக்கும் அப்பாற்பட்ட பற்றற்ற தனிப் பரம்பொருள். சிருஷ்டிக்கும் அவருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை" என்கிறார். சிருஷ்டியே மாயை என்பது இந்தச் சம்பிரதாயத்தாரின் சித்தாந்தம். ஆனால் பாமரனின் கருத்து இதற்கு மாறுபட்டிருந்தது. பற்றற்ற தனிப் பரம்பொருள் என்றால் அவனுக்கு விளங்கவில்லை. சர்வாதிகாரம் செலுத்தும் ஒரு சக்கரவர்த்தி என்றே அவரை மதித்து வழிபட்டான். அவருடைய ராஜ்யத்தின் அங்கமாக அவருக்குக் கீழே குட்டித் தெய்வங்கள் இருப்பதையும்

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்; நவம்பர் '50), கல்கத்தா.

கடவுளின் பல அவதாரங்களையும் அவன் நம்பி வந்தான். விக்கிரகம், கல், மரம், ஆறு, மிருகம் இவைகளைத் தெய்வமாகக் கொண்டாடி வந்தான். சமூகத்தில் தெய்விகச் சடங்குகளை நடத்தி வைக்கும் புரோகிதரைக் கடவுளின் அம்சமாகப் போற்றினான்.

குரு கோவிந்தர் ஹிந்து-முஸ்லிம்கள் வழிபடும் முறையை ஒரு பாடலில் இப்படி வருணிக்கிறார்:

“சிலர் கல்லைத் தொழுகிறார்கள். சிலர் தலைமேல் அதை வைத்துக் கொண்டாடுகிறார்கள். இன்னும் சிலர் லிங்கத்தைக் கழுத்தில் கட்டிக்கொள்ளுகிறார்கள். வேறு சிலர் தெற்கே கடவுளைக் கண்டு வணங்குகிறார்கள். சிலர் மேற்கு நோக்கி அவரைத் தொழுகிறார்கள். சில மூடர் விக்கிரகங்களை வணங்குகிறார்கள். வேறு சிலர் சமாதியைத் தொழுகிறார்கள். இப்படிப் பொய்ச் சடங்குகளில் சிக்கிக் கடவுளின் ரகசியத்தை அறியாமல் எல்லாரும் தவிக்கிறார்கள்.”

முப்பத்து முக்கோடி தேவர்களை ஒவ்வொருவரும் தம் தம் இஷ்டப்படி தொழலாம் என்றால் பாருங்கள்!

பண்டிதருக்கும் பாமரருக்குமுள்ள பேதத்தைப்பற்றிக் குரு அர்ஜுனர் பாடிய ஒரு பாடலின் கருத்து இது:

“தோழிமாரே, என் அன்பனைப் பற்றிய சேதி சொல்லிடுவீர். பலர் பலவிதமாகக் கூறுகிறார்களே; அவர்கள் சொன்னதை மொழிவேன், கேளுங்கள்: சிலர் அவன் பற்றற்றவன் என்கிறார்கள்; சிலர் அவன் அனைத்திலும் ஒன்றியிருக்கிறான் என்கிறார்கள். அவன் மேனியும் உருவமும் தெளிவாக விளங்கவில்லையே! என் தோழிமாரே, அவன் எப்படி இருப்பான் என்று சொல்லிடுவீர்! அவன் எங்கும் நிறைந்தவன். எவர் உள்ளத்திலும் இலங்குகிறான். எனினும் எதனுடனும் இணையவுமில்லை. பற்றற்று விளங்குகிறான். ‘மக்களே, சாதுக்களின் உபதேச மொழி கேட்டு அதன்படி நடப்பீர்!’ என்கிறார் நானக்.”

பண்டிதரும் பாமரரும் கடவுளை ஒரு கண்ணால்மட்டுமே கண்டு அநுபவித்து வந்தார்கள்; அந்தக் கண்ணும் அநேகமாய் அரைக் குருடாகத்தான் இருந்தது. ‘கடவுள் அனைத்துக்கும் அப்பாற்பட்டவர்’, ‘எல்லாப் பொருளிலும் வியாபித்திருப்பவர்’ என்றெல்லாம் வாதம் செய்வது வீண் என்று அறிவில் சிறந்த பெரியோர்களும் சாதுக்களும் சொல்கிறார்கள்.

“கடவுள் அருகிலேதான் இருக்கிறார் என்கிறார்கள் சிலர்; அவர் வெகு தொலைவில் இருப்பதாகச் சொல்கிறார்கள் சிலர். இப்படியெல்லாம் சொல்வது மீனுக்குப் பனை மரம் ஏறத் தெரியும் என்பது போலத்தானே யொழிய வேறில்லை. ஏன், ஐயா, இந்த வீண் பேச்சு! கடவுளைக் கண்டறிந்தவர் மௌனமாக இருப்பார்கள். பண்டிதர்கள் வேதக் கருத்துக்களை அள்ளி வீசுவார்கள். ஆனால் பாமரனான நாமதேவனுக்கு அதெல்லாம் தெரியாது; கடவுள் ஒருவர் இருப்பது மட்டுமே அவனுக்குத் தெரியும்.”—**நாமதேவர் பாடல்.**

சீக்கிய குருமார், ‘கடவுள் தன் நேரில்லாப் பரம்பொருள்தான்’ என்றோ ‘காலமும் வரம்புமற்ற மூர்த்திதான்’ என்றோ சொல்லி அதோடு நிறுத்திவிடவில்லை. ‘அவர் எங்கும் பரவியவர்; சிருஷ்டிக்கு மூலகர்த்தர். அவர் அனைத்

துக்கும் அப்பாற்பட்டவராக இருந்தும் எந்தப் பொருளிலும் வியாபித்திருக்கிறார். சிருஷ்டியை மீறியவர்; ஆயினும் அவரிடத்திலிருந்துதான் எல்லாம் உற்பத்தியாயின' என்ற சித்தாந்தத்தையும் ஒப்புக்கொள்கிறார்கள்.

"கோடிக்கணக்கான கண் படைத்தும் உனக்கெனக் கண் படைத்ததில்லை நீ! கோடிக் கணக்கான உருக்கொண்டும் உருவற்று நிற்பாய் நீ! கோடிக் கணக்கில் பாதம் படைத்தும் கால் ஒன்று பெற்றிலை நீ! மணமின்றித் திகழும் உன்னிடமிருந்து பல் மணம் வீசுகிறது! இத்தனையும் கொண்டு என்னை மயக்கிய பெருமானே, உன் ஒளியே எங்கும் எப்பொருளிலும் பரவி நிற்கிறது."

குரு நானக், புரிக்ஷேத்திரத்தைத் தரிசிக்கச் சென்றிருந்தபோது ஜகந்நாத ஸ்வாமியின் மர உருவத்தைப் பக்தர்கள் வழிபடுவதைக் கண்டு மேலே சொன்ன கருத்துடைய ஒரு பாடல் பாடினார். இன்னும் ஓர் இடத்தில், "என் ஐயன் பிரபஞ்சம் முழுவதிலும் வியாபித்திருக்கிறான். எல்லாம் அவன் சித்தம். அவனை அருகில் இருக்கிறான் என்றோ, தொலைவில் இருக்கிறான் என்றோ எப்படி உரைப்பேன்? சூட்சுமப்பொருள் ஸ்தூலப்பொருள் அனைத்திலும் புகுந்து அவன் அவைகளை இயங்க வைக்கிறான். இப்படி இருந்தும் சிலர், 'கடவுள் வேறு; சிருஷ்டி வேறு' என்கிறார்களே" என்று ஆச்சரியப்படுகிறார்.

சீக்கியரின் கிரந்த சாகிப் என்ற புனித நூல் இதே கருத்துக்களைத்தான் வலியுறுத்துகிறது. நானக்குக்குப் பின் வந்த குருமார்களும் இதையேதான் மீண்டும் மீண்டும் உபதேசித்து வந்தார்கள். கடவுள் இப்படித் தூரமுமாய், சமீபமுமாய் இருக்கும் நிலைகளைப் பஞ்சாபி மொழியில் முறையே 'தூர்' 'நேரே' என்று குறிப்பிடுவது வழக்கம். அதே மாதிரி அவர் சூட்சுமமாயும் ஸ்தூலமாயும் விளங்குவதைக் 'குப்த்' என்றும் 'பரகத்' என்றும் சொல்கிறார்கள். 'குப்த்' நிலையில் நாம் தியானிக்கும்போது அவர் மனத்துக்கு எட்டாத பொருளாகிவிடுகிறார்; 'பரகத்' நிலையில் நோக்கும்போது அவரை நாம் எந்தப் பொருளிலும் கண்டு இன்புற்று அவருடன் இணைந்து நிற்கிறோம்.

"அனைத்திலும் இயங்கும் உயிரும் பொருளும் ஒளியும் ஒன்றே; அதனைப் பல வகையாகப் பல பொருள்களிலும் காண்கிறோம். அதற்கு ஈடு இணை எதுவும் இல்லை" என்று குரு ராமதாசர் சொல்லுகிறார். குரு அர்ஜுனரும் இதே கருத்தைத்தான் தம் பாடல்களில் அடிக்கடி வலியுறுத்துகிறார்:

"நீயே மரமாயும் கிளையாயும் இலையாயும் தழைத்திருக்கிறாய்; கடலும் நீயே; அதன் நுரையும் நீயே. நாங்கள் எம்மாத்திரம்? மாலையிலுள்ள நூலும் நீ; மணியும் நீ; மாலையை இணைக்கும் முடியும் நீ; பெருமணியும் நீ. நிர்க்குணப் பொருள் நீ. ஆயினும் களிப்பும் அன்பும் நிறைந்து விளங்குகிறாய்! மறைந்திருந்தும் எங்கும் வியாபித்திருக்கும் பொருள் நீ."

சீக்கிய குருமார் ஸகுணம், நிர்க்குணம், தூரம், சமீபம், ஸாகாரம் (ரூபம்), நிராகாரம் (அரூபம்), குப்த், பரகத், சூட்சுமம், ஸ்தூலம் என்றெல்லாம் வருணிப்பதையே ராமகிருஷ்ண பரமஹம்ஸர், துளசிதாசர், நாமதேவர் ஆகிய மகாபுருஷர்கள் உவமைகள் மூலம் பாமரருக்கு ஏற்றபடி

உபதேசித்தார்கள். ஸ்வாமி தயானந்தரும் இவ்விதமே, “நாம் நிர்க்குணப் பிரம்மம் என்னும் போது சத்துவ, ரஜஸ், தமஸ் என்ற மனித இயல்புகளுக்கு அப்பாற்பட்ட பரம்பொருள் என்ற கருத்தில் சொல்லுகிறோம். ஸகுணப் பிரம்மம் என்னும்போது அந்தக் குணங்களையே கொண்ட கடவுளாகச் சிறப்பித்துக் கூறுகிறோம்” என்றார்.

சீக்கிய குருமார் வாழ்ந்த காலத்தில் இந்தியாவில் கடவுளைப்பற்றி நாலு வகையான கொள்கைகள் பிரபலமாக இருந்தன. பழைய உபநிஷத்துக்கள், “கடவுள் நம் அறிவுக்கு எட்டாதவர்; எவருக்கும் விளங்காத பரம்பொருள். பிரபஞ்சம் என்பது வெறும் மாயை. மனிதர் உள்ளத்தில் குடிகொண்டவராஹுலும் கடவுள் இந்தப் பிரபஞ்சமாகிய மாயைக்கு அப்பாற்பட்டவர்” என்று போதித்தன.

இன்னும் சில உபநிஷத்துக்கள், “கடவுள் பிரபஞ்சத்திலேயே லயமாகியிருப்பவர். சிருஷ்டி முழுவதிலும் அந்தத் தெய்வ ஒளி திகழ்கிறது” என்றன. முஸ்லிம் சூபிகளின் சித்தாந்தமும் இதுவே.

எத்தனையோ குட்டித் தெய்வங்கள் இருந்தாலும் அவைகளுக்கெல்லாம் தலைமை பூண்ட தனி முதற் கடவுள் ஒருவர் இருப்பதாகப் புராணங்கள் போதித்தன.

முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் இவர்களின் கொள்கையும் இதோடு சம்பந்தப்பட்டதுதான்: “கர்த்தர் ஏழாம் சொர்க்கத்தில் அமர்ந்து பிரபஞ்சத்தை ஆட்டி வைக்கிறார். கர்த்தரின் கீழ் அவரிட்ட ஏவல்களை நிறைவேற்றி அவருடைய ராஜ்யத்தை நடத்த அநேகம் குட்டித் தேவதைகளும் மகாபுருஷர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவரோ சிருஷ்டி முதலிய அனைத்துக்கும் அப்பாற்பட்டவர்.”

இவைகளின் நுட்பமான பேதங்களையெல்லாம் அலசி ஆராயாமல் பொதுவாக நோக்கும்போது ஓர் உண்மை தெளிவாகிறது: பழைய உபநிஷத்துக்கள், குர்ஆன் இவைகளில் கூறியிருப்பதுபோல், ‘கடவுள் அனைத்துக்கும் அப்பாற்பட்ட’வராகவும் புராணங்களில் சொல்லியிருப்பதுபோல் ‘எங்கும் எப்பொருளிலும் நிறைந்த’வராகவும் விளங்குகிறார். பின்வந்த சீக்கிய குருமார் இந்தப் பல்வேறு கருத்துக்களையும் இணைத்து ஒருவிதமான சமரச சன்மார்க்கத்தையே போதிக்க முன் வந்தார்கள்.

குழந்தைக்கு வந்துவிட்டது!

புதிதாய்க் கல்யாணமான ஒரு கணவனுக்கும் சரி, அவன் மனைவிக்கும் சரி, நாய்களிடம் வெகு பிரியம். பல ரக நாய்களை வளர்த்துக்கொண் டிருந்தார்கள். அவைகள் குட்டியும் போடத் தொடங்கிவிட்டன. எப்போது பார்த்தாலும் வீட்டிலே நாய்க் குட்டிகள் மயமாய் இருந்தது. இந்த நிலையில் அந்த இளந் தம்பதிக்கு ஒரு குழந்தை பிறந்தது. ஊராருக்கெல்லாம் ஒரு சந்தேகம்: இத்தனை நாய்க்குட்டிகளுக்கு நடுவிலே அந்தக் குழந்தை எப்படித்தான் வளருகிறதோ?

தாயை ஒரு நாள் வீதியிலே நான் சந்தித்தேன். “குழந்தை சௌக்கியமாயிருக்கிறதா? பேசக் கற்றிருக்குமே?” என்றேன்.

“இல்லை என்றாள் அவள்; “இல்லை. இன்னும் பேசக் கற்கவில்லை; குரைக்கக் கற்றுவிட்டது.” —எலினர் க்ளாரேஜ்

அப்போதே பறித்த புதிய பழங்கள் எப்போதும் கிடைப்பதில்லை; அதற்கு ஒரு பரிகாரம் இது.

பாதுகாத்த பழங்கள்

'எச்'

உணவுப் பொருள்களை அவை கிடைக்கும் காலத்தில் ஏராளமாகச் சேமித்து வைத்திருந்தால்தான் அவை கிடைக்காத காலத்தில் நாம் உபயோகித்துக் கொள்ள முடியும். உலகத்தில் நாகரிகம் தோன்றியதிலிருந்து இந்தப் பழக்கம் இருந்து வருகிறது. இன்று உலகெங்கும் வேகமாகப் பெருகி வரும் ஜனத்தொகைக்குப் போதுமான உணவுப் பொருள் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, உணவுப் பொருள்களை முன் ஜாக்கிரதையாகச் சேமித்துப் பாதுகாக்க விஞ்ஞானிகள் பல ஆச்சரியமான முறைகளைக் கையாண்டு வருகிறார்கள்.

கெட்டுப் போகும் உணவுப் பொருள்களைத் தக்க முறையில் பாதுகாப்பது அவசியம். இல்லாவிட்டால் அவை சமயத்தில் நமக்குப் பயன்படாமல் போய்விடும். மீன்களைப் பொறுத்தவரையில் அவை கெடாமல் இருப்பதற்காகச் செய்த ஆராய்ச்சியினால் நல்ல பயனும் லாபமும் ஏற்பட்டன.

அநேக ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்துகூட மீன்கள் அழுகிப் போகாதபடி வரவழைக்க முடிகிறது. சில ஆண்டுகளுக்கு முன்வரையில் இதுதான் பெருத்த சங்கடமாக இருந்தது.

இங்கிலாந்தில் உணவுப் பொருள்களை வெளியிலிருந்து வரவழைக்க வேண்டியிருப்பதால் அங்கே உள்ள மக்கள் அவைகளைப் பாதுகாக்கும் முறையில் மிகவும் முன்னேறியிருக்கிறார்கள். நமக்குத் தெரியாத முறையில் கஷ்டப்படுவதைவிட நமக்குத் தெரிந்த முறையில் முயற்சி எடுத்துக்கொள்வதே நலம். ஆப்பிள் சம்பந்தமாக அவர்கள் நடத்திய ஆராய்ச்சியினால் இப்போது ஏராளமாக ஆப்பிள் பழம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிறது. குளிர் காலத்தில் சில ஆப்பிள் பழங்களை ஈரம் காக்காத உஷ்ணமான அறைகளில் வைத்துப் பாதுகாக்கலாம். இடையிடையே எவ்வளவு கவனித்தும் அழுகிப்போகும் பழங்களை அவ்வப்போது நீக்கிவிட வேண்டும். சில பழங்கள் அழுகிக் கெட்டுப் போகாவிட்டாலும் சுருங்கிப் போய்விடும்.

பழத் தோட்டம் போட்டு வியாபாரம் செய்வோருக்கு இதனால் நஷ்டம் ஏற்பட்டு விடும். இதை ஈடுகட்ட, பொதுமக்களின் தலைக்குப் பாரமாகப் பழத்தின் விலையை ஏற்ற வேண்டியிருக்கும்: ஆகவே, அப்படி நேராமல் விஞ்ஞான முறையில் ஆராய்ந்து தக்கது செய்ய வேண்டும்.

சூடான அறைகளைவிடக் குளிர்ச்சியான அறைகளே சில

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்; 15-10-'50), கள்ளிக்கோட்டை.

பழங்களுக்கு ஏற்றவை. ஒரு ஜாதிப் பழத்திலேகூட வெவ்வேறு ரகம் இருப்பதால் குளிர்ச்சியான அறையிலும் பல மாற்றங்கள் செய்யவேண்டியிருக்கும். உதாரண மாக 'நியூட்டன் வண்டர்' என்ற ஆப்பிள்களுக்கும் 'ப்ராட்லீஸ் ஸீட் லிங்' என்ற ஆப்பிள்களுக்கும் பாது காப்பு அறைகளின் சீதோஷ்ண நிலை வெவ்வேருக இருக்க வேண் டும்.

மரத்திலிருந்து பறித்த பிறகும் சில பழங்களுக்கு உயிர் உண்டு. மிருகங்களைப் போல் அவை மூச்சு விடுகின்றன. அதிகக் காற்றுப் புழங்கும் இடத்தில் வைத்திருந் தால் அவைகளுக்கு மூச்சு முட்டும் நிலை ஏற்பட்டு விடும். அதனுல் அவை பாதியில் கெட்டுவிடக் கூடும். ஆகவே, தகுந்த இடமாகப் பார்த்து அவைகளைப் பத்திரப் படுத்தவேண்டும்.

மேலே கூறிய உண்மையை ஆதாரமாகக் கொண்டுதான் 'ரெப்ரி ஜிரேட்ட் காஸ் ஸ்டோரேஜ்' என்ற முறை உருவாகியிருக்கிறது. பழங் களை அறையில் வைத்த பிறகு யந்திரத்தின் உதவியால் அதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை அறையில் ஏற்படும்படி செய்வார் கள். ஒருகதவைத் திறந்து வைத்து, பழத்தைக் கெடுக்கக் கூடிய கெட்ட காற்றை வெளியேற்றுவார் கள்.

நல்ல பழங்கள் கிடைப்பதற்குப் பழத் தோட்டக்காரரும் பல முன் னேற்பாடுகள் செய்யவேண்டும். முதலில் நன்ருக முற்றிய சமய மாகப் பார்த்துப் பழத்தைப் பறிக்க வேண்டும். பிறகு பழப்பாதுகாப்பு அறையில் அவைகளை வைத்துச் சீதோஷ்ண நிலையை உண்டாக்கும் யந்திரத்தை உபயோகிக்க வேண் டும். அந்த அந்தப் பழவகைக்கு வேண்டிய சீதோஷ்ண நிலையை ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிருர்கள். அதற் கேற்றபடி கவனித்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதால் பழங்கள் கெடாதபடி பாதுகாக்க முடிகிறது.

வாக்காளர் சொன்ன காரணம்

தெற்கே ஓர் ஊரில் முனிசிபல் தேர்தலுக்கு இரண்டுபேர் அபேட்சகர்களாகப் நின்ருர்கள். அதில் ஓர் ஆசாமி மகா அயோக்கியர் என்று பெயரெடுத்தவர். இரண்டு வாக்காளர் களுக்குள்ளே இந்தப் போட்டி அபேட்சகர்களைப்பற்றி வெகு நேரமாகப் பலத்த விவாதம். முதல் வாக்காளர் அந்த அயோக் கியருக்குத்தான் வோட்டுப் போவதாகப் பிடிவாதமாகச் சொன் ஞர். இரண்டாம் வாக்காளர், "ஏன் ஐயா அப்படி? அவருக்கு எதிராக நிற்கிறவர் நேர்மையான மனுஷராச்சே!" என்று கேட்டார்.

"நான் சொல்கிறது இதுதான்: எவனும் அயோக்கியனு யிருந்தால்தான் அதிகாரத்துக்கு வழிகிறன்; அல்லது அதி காரத்துக்கி வந்ததும் அயோக்கியனுகி விடுகிறன். அநியாயமாக ஒரு நல்ல மனுஷனை எதற்காகக் கொடுக்கவேண்டும், அப்பா!" என்ருர் முதல் வாக்காளர்.

ராமாவதாரம்

ராவணனுடைய தொந்தரவு தாங்காமல் தேவர்கள் பிரம்ம தேவனை முன்னிட்டுக் கொண்டு திருமாலை வேண்டினார்கள். அதற்கு இணங்கப் பகவானும் தசரதனுக்கு மகனாக அவதரித்து ராவணனை அழிப்பதாக வாக்களித்தார்.

சந்ததியற்ற தசரத மன்னன் பிள்ளைப் பேறு தரும் புத்திர காமேஷ்டியைச் செய்துகொண்டிருந்தான். அப்பொழுது யாக குண்டத்திலிருந்து ஒப்பற்ற ஒளியும் புஜபலமும் பராக்கிரமும் பொருந்திய புருஷன் ஒருவன் தோன்றினான். கரிய மேனியும், சிவந்த வஸ்திரமும், துந்துபி போன்ற குரலும், இளங் கதிரவனின் பொற்கிரணங்களுக்கு ஒப்பான தலைமயிரும் தாங்கி, சுபலட்சணங்கள் திகழத் தேவர்களுக்கேற்ற அணிகளையும் அணிந்து அவன் விளங்கினான். தேவர்கள் உண்ணும் பாயசம் நிறைந்த வெள்ளி விளிம்புடைய தங்கப் பாத்திரம் ஒன்றை அந்தப் புருஷன் கையில் ஏந்தியிருந்தான். அன்புள்ள பத்தினியைப் போல் இரு கைகளாலும் அதைத் தாங்கிக்கொண்டு தசரதனைப் பார்த்து, "அரசே, நான் பிரம்ம தேவரின் தூதன். அவருடைய உத்தரவால் இங்கே வந்திருக்கிறேன்" என்றான்.

இதைக் கேட்டு மன்னன் கை கூப்பி, "பகவானே, உமக்கு நல்வரவு. நான் என்ன செய்யவேண்டும்?" என்றான். உடனே அந்தப் புருஷன், "அரசே, நீர் செய்த யாகத்தின் பயனாக இது உமக்குக் கிட்டியிருக்கிறது. தேவர்கள் கொடுத்தது இந்தப் பாயசம். இதை வாங்கிக்கொண்டு உமக்கு

ஏற்ற மனைவிகளிடம் கொடுத்து உண்ணச் சொல்லும். அவர்கள் மூலம் உமக்குக் குழந்தைகள் பிறக்கும்'' என்றான். அரசன், ''அப்படியே'' என்று சொல்லித் தலை வணங்கி அந்தப் பாத்திரத்தைப் பெற்றுக்கொண்டான். ஏழைக்குத் தனம் கிடைத்தது போல் உள்ளம் பூரித்து அந்தப் புருஷனை வணங்கினான். பாயசத்தைக் கொடுத்துவிட்டு அக்கினியிலேயே புருஷன் மறைந்துவிட்டான்.

இந்தச் சமாசாரத்தைக் கேட்டதும் தசரதனின் அந்தப்புரத்தில் இருந்தவர்களெல்லாரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். மன்னன் அங்கே சென்று கௌசல்யையைப் பார்த்து, ''மகனைக் கொடுக்கும் இந்தப் பாயசத்தை வாங்கிக்கொள்'' என்று சொல்லிப் பாயசத்தில் ஒரு பகுதியை அவளுக்குக் கொடுத்தான்.

பிறகு அரசன் மீதிப் பாயசத்தில் பாதியைச் சுமித்திரைக்கும் மிகுந்ததில் பாதியைக் கைகேயிக்கும் கொடுத்தான். மிகுதியாக இருந்ததை மீண்டும் சுமித்திரைக்கே கொடுத்துவிட்டான். மகிஷிகள் மூவருக்கும் இன்பமும் பெருமையும் தாங்கவில்லை.

பிறகு சில நாட்களில் அவர்கள் கர்ப்பம் தரித்தார்கள். அசுவமேதம் முடிந்தவுடன் தசரதன் தீட்சையை முடித்துக்கொண்டு தன் பரிவாரம் சூழ நகரத்தை நோக்கிப் புறப்பட்டான். யாகத்தைக் காண வந்திருந்த மன்னவர்களெல்லாரும் அதை நடத்தி வைத்த ரிச்யசிருங்க முனிவரை வணங்கி மகிழ்ச்சியுடன் தம் நாட்டுக்குத் திரும்பினார்கள். தம் மனைவியும் தசரதனின் மகளுமான சாந்தையுடன் ரிச்யசிருங்கர்

ஆதிகவி வால்மீகியின் ராமாயணம் மகோன்னதமான காவியம் என்பது உலகப் பிரசித்தம். அதன் முக்கியமான பகுதிகள் ஒவ்வொன்றாக 'மஞ்சரி'யில் வரும். இது முதல் பகுதி.





ஆசிரமம் சென்றார். எல்லாரையும் வழி அனுப்பிவிட்டுத் தசரதன் குறையற்ற உள்ளத்தோடு நகருக்குத் திரும்பினான்; அங்கே தனக்குக் குழந்தை பிறக்கப் போகும் நாளை எண்ணி மகிழ்ச்சியோடு இருந்து வந்தான். யாகம் முடிந்து ஆறு பருவங்களும் கழிந்தன. பன்னிரண்டு மாதங்கள் ஆனதும் சித்திரை மாதத்தில் நவமி திதியில் புனர்வசு நட்சத்திரத்தில் நவக்கிரகங்களில் ஐந்து கிரகங்கள் ஆட்சியிலும் உச்சத்திலுமாக இருக்கும்போது சந்திரனோடு குரு சேர்ந்து இருக்கும் நேரத்தில் கடக லக்கினத்தில் கௌசல்யை திருமாலின் அம்சமான ராமனைப் பெற்றெடுத்தாள். அவன் பிறந்தபோதே சோபையோடு விளங்கினான். திருமாலின் ஒரு பாகமாகிய பரதன் சத்தியத்தையே பராக்கிரமமாகக் கொண்டு கைகேயியின் வயிற்றில் பூச நட்சத்திரத்தில் மீன லக்கினத்தில் பிறந்தான். லட்சுமணனும் சத்துருக்கினனும் ஆயில்ய நட்சத்திரத்தில் சூரியன் கடக லக்கினத்தை அடைந்த சமயம் சுமித்திரையின் புதல்வர்களாகப் பிறந்தார்கள்.

அப்போது கந்தர்வர்கள் பாடினார்கள்; தேவமாதர் நடனம் செய்தார்கள்; தேவர்கள் துந்துபி முழங்கினார்கள். ஆகாயத்திலிருந்து மலர் மாரி சொரிந்தது. அயோத்தி மக்கள் கூடி அந்த நாளைக் கொண்டாடினார்கள். எல்லா வீதிகளிலும் பாட்டும் வாத்தியமும் ஒலித்தன. மன்னன் தன் மெய்க்கீர்த்தி பாடுவோருக்கு ஏராளமாக வழங்கினான். அந்தணருக்கு ஆயிரக்கணக்கில் பசுமாடுகளைத் தானம் செய்தான். பதினொரு நாட்கள் கழிந்தன. பன்னிரண்டாம் நாளில் மன்னன் தன் நாலு பிள்ளைகளுக்கும் வசிஷ்டரைக் கொண்டு நாமகரணம் செய்து வைத்தான்.

அந்த நான்கு பேரில் ராமனிடத்தில்தான் தசரதனுக்கு மிகவும் அன்பு. நாலு பேருமே சிறந்த அறிவுள்ளவர்கள். வேதத்தை நன்ருகக் கற்ருர்கள். மக்களின் நன்மையையே கோரினுர்கள். இருந்தாலும் பராக்கிரமசாலியான ராமனே மக்களுக்கு மிகவும் பிடித்திருந்தான். ராமன் வில்வித்தையிலும் யானை குதிரை ஏற்றங்களிலும் தேர் ஏறிச் செல்வதிலும் திறமை பெற்றிருந்தான். அதே சமயம் தந்தைக்கும் அடங்கிப் பணிவிடை செய்துவந்தான்.

குழந்தைப் பருவத்திலிருந்தே லட்சுமணன் ராமனிடம் விசேஷப் பற்றுதல் கொண்டிருந்தான். ராமனும் லட்சுமணனை நேசித்து வந்தான். அவனைத் தன் ஆருயிராகவே கருதினுன். லட்சுமணனின்றி அவன் உண்ணுவதுமில்லை; உறங்குவதுமில்லை. குதிரையில் ஏறிக்கொண்டு ராமன் வேட்டைக்குச் சென்ருல் லட்சுமணன், தானும் கையில் வில்லை ஏந்தி ராமனைக் காத்துக்கொண்டு பின் தொடருவான். இப்படியே பரதனுக்குச் சத்துருக்கினன் துணையாக இருந்தான். இதனுல் தேவர்கள் புடை சூழ்ந்த பிரம்மதேவனைப்போல் தசரதன் களிப்புற்று இருந்தான்.

வீடு கட்டியவரே, உஷார்!

ஒரு நகரத்தில் புதிதாய் வீடு கட்டிக்கொண்டார்கள் ஒரு குடும்பத்தினர். வீட்டிலே அப்பழுக்கு இல்லை. ஆனுல், சமையல் அறையிலேமட்டும் ஓர் ஒழுக்கு இருந்தது. வீட்டைக் கட்டிக்கொடுத்த கம்பெனியாரிடம் இதைப்பற்றி வீட்டுக்காரி தெரிவித்தாள். பலமுறை புகார் செய்தும், அந்தக் கம்பெனியார் அசட்டையாக இருந்துவிட்டார்கள். வீட்டுக்காரிக்கு ஒரு யுக்தி தோன்றியது. ஒரு பெரிய பலகையை எடுத்தாள். அதில் கொட்டை எழுத்துக்களில் ஒரு விளம்பரத்தை எழுதி வாசலிலே தொங்கவிட்டாள். அந்த விளம்பரத்தின் வாசகம் இதுதான்:

'தண்ணீர்ப் பஞ்சமா??? அது இங்கே இல்லை.
எங்கள் சமையலறை முழுவதும் ஒரே வெள்ளக்காடா யிருக்கிறது.
இந்த வீட்டைக் கட்டியவர்: இன்ன கட்டிடக் கம்பெனியார்.

சில மணி நேரத்துக்கெல்லாம் வீட்டின் ஒழுக்கு அடைபட்டு, சுத்தமாய்ப் பழுது பார்க்கப்பெற்றுவிட்டது.

—வில்லியம் டீவியர்

பிரமுகரின் கருத்து

மாதர் சங்கம் ஒன்றில் பிரபல அரசியல் பிரமுகர் ஒருவரைப் பேச அழைத்திருந்தார்கள். மாறுதல் விரும்பாமல் பழைய ரீதியாக இருக்கவேண்டும் என்ற கட்சியைச் சேர்ந்தவர் அவர். சபையில் கூடியிருந்த மாதர்களைப் பார்த்து, "பெண்கள் கூட்டத்தில் பேசுவதென்ருல் எனக்கு மிகவும் பிரியம். ஏனென்ருல், இந்தக் காலத்துப் புருஷர்கள் எதையும் ஒரு காதில் வாங்கி மறு காதால் வெளியே விட்டுவிடுகிருர்கள். பெண்களோ அப்படி இல்லை. அவர்கள் எதையும் இரண்டு காதாலும் வாங்கி வாயால்தான் வெளியே விடுகிருர்கள்" என்ருர்.

இந்தக் கலைப் பொக்கிஷம் வளர்ந்த வரலாறு மிக ஆச்சரியமானது.

இந்தியா ஆபீஸ் நூல்நிலையம்

சித்தரஞ்சன் பானர்ஜி

கிழக்கிந்தியக் கம்பெனியார் முதல் முதல் வியாபாரம் செய்து பெரும்பொருள் திரட்டத் தான் இந்தியாவுக்கு வந்தார்கள். இந்திய நாகரிகத்தைப்பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, திறமையுள்ள ஆங்கிலேயர்கள் அநேகம் பேர் இந்தியாவுக்கு வர ஆரம்பித்தார்கள். இவர்களில் சிலர் நம் நாட்டின் அறிவுக் களஞ்சியத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்தார்கள்.

முன்னால் முகம்மதியர் ஆண்டு வந்ததால் இன்னும் பாரசீகமே அரசாங்க மொழியாக இருந்தது. இதனால் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களும் மொழி ஆராய்ச்சியாளரும் முதலில் பாரசீகமும் அராபியுந்தான் கற்றுக்கொண்டார்கள். கொஞ்சகாலங் கழித்து ஸம்ஸ்கிருத மொழிக்கு மவுசு ஏற்பட்டது. விரைவில் ஸம்ஸ்கிருத மொழி ஆராய்ச்சியில் பல ஐரோப்பிய அறிஞர்கள் ஈடுபடலானார்கள்.

இந்தியர்களின் பழைய நீதி முறையை ஒட்டியே ஆட்சி நடத்துவதுதான் நல்லது என்ற அபிப்பிராயம் கொண்டவர் வாரன் ஹேஸ்டிங்ஸ். 1776 - இல் ஹிந்து சட்ட விதிகளை ஸம்ஸ்கிருதத்திலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்படி உத்தரவிட்டார். ஹிந்து பண்டிதர்களுக்கு ஆங்கிலம் தெரியாவிட்டாலும் பாரசீகத்தில் அவர்களுக்கு நல்ல பயிற்சி உண்டு. ஆங்கிலேயர்களுக்குப் பாரசீகம் தெரிந்திருந்தது. அதனால் பண்டிதர்களின் துணையோடு அந்த நீதி நூல்களைப் பாரசீகத்தில் முதலில் தர்ஜமா செய்துகொண்டு, அதன் மூலம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொண்டார்கள்.

இதற்கு எட்டு வருஷம் கழித்து ஸர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் இந்தியாவின் பூர்விக சரித்திரம், சிற்பம், இலக்கியம் சம்பந்தமாக ஆராயக் கல்கத்தாவில் ஏஷியாடிக் சொஸைட்டி என்ற சங்கத்தை ஸ்தாபித்தார். அவருடைய முயற்சியால் பல ஐரோப்பியர் இந்த விஷயத்தில் மிகவும் ஊக்கம் காட்டிப் பல ஏட்டுச் சுவடிகளைத் தேடித் தொகுத்தார்கள். ஆனால் அவர்கள் வேலையை விட்டு நீங்கினதும் இவைகளைத் தங்கள் சொந்த சொத்தாகவே பாவித்து, இங்கிலாந்துக்கு எடுத்துக்கொண்டு போவது வழக்கம்.

'இதனால் இந்தியாவின் அரிய கலைப்பொக்கிஷம் ஐரோப்பியப் பொதுஜனங்களுக்குத் தெரியாமல் உலகத்துக்கும் பயன்படாமல் போய்விடுமே' என்று கம்பெனி டைரக்டர்கள் அஞ்சினார்கள். 'இந்

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி; அக்டோபர் '50), கல்கத்தா.

தியா ஹவுஸ்' என்ற கட்டிடத்தில் இவைகளைச் சேமித்து வைப்ப தென்று முடிவு செய்தார்கள். இந்தியா சம்பந்தமான கலைப் பொருள்களை யார் தேடிக்கொடுத் தாலும் சரி அதை ஏற்று, அதன் கீழ் 'இன்னார் உபயம்' என்று எழுதி அங்கே வைக்கப்போவதாக அறிவித்தார்கள்.

'மொகல் சாம்ராஜ்யத்தின் சரித் திரத் துணுக்குகள்' என்ற நூலை 1805-இல் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட ராபர்ட் ஆர்ம் என்ற அறிஞரே இதற்கு ஊக்கமூட்டினார். இந்திய மொழிகளில் அவருக்கு அப்படிப் பிரமாத பாண்டித்தியம் இல்லாவிட்டாலும் அவர் இந்திய நாகரிகத்தைப் போற்றுபவர். "ஒரு கப்பல் அளவுக்குமேல் கொள்ளக் கூடிய அத்தனை அரிய நூல்கள் இந்தியாவில் இன்னும் இருக்கின் றன" என்று ஒரு சமயம் அவர் பாராட்டினாராம்.

கம்பெனி டைரக்டர்கள் ஆரம் பித்து வைத்த இந்தத் திட்டம் பின்னால் சார்லஸ் வில்கின்ஸன் என்ற அறிஞரின் முயற்சியினால் உருவாகிப் பலன் தந்தது. இவர் 30 வயதில் கம்பெனி உத்தி யோகஸ்தராக வங்க தேசத்துக்கு வந்தார். முதலில் வங்க மொழி யும் பாரசீகமும் கற்றுக்கொண் டார். ஏழெட்டு வருஷம் இப்படிப் பயின்ற பிறகு ஸம்ஸ்கிருதத்தில் அரிய நூல்கள் இருப்பதை அறிந்து அந்த மொழி ஆராய்ச்சி யில் ஈடுபட்டார். அந்தச் சமயத் தில்தான் வாரன் ஹேஸ்டிங்ஸின் உத்தரவுப்படி 'பகவத் கீதை'யை முதல் முதலாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். மொழி பெயர்ப்பு அப்படிப் பிரமாதமாக இராவிட்டாலும் விஷயம் புதுமை யாக இருந்ததால் ஐரோப்பாவி லுள்ள அறிஞர்கள் அதில் அடங் கிய உயர்ந்த கருத்துக்களைக் கண்டு வியந்தார்கள். பிறகு மநு ஸம்ஹிதையை மொழி பெயர்க்கத் தொடங்கினார். கால் பாகத்துக்கு மேல் எழுதினதும் ஸர் வில்லியம் ஜோன்ஸ் அதைப் படித்துப் பார்த்துவிட்டு மீதி யைத் தாம் முடிக்க அநுமதி தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வில்கின்ஸன் மகிழ்ச்சியோடு அதற்கு இணங்கி னார். இதையே 'ஹிந்து சட்ட விதி கள்' என்று ஜோன்ஸ் ஆங்கிலத் தில் வெளியிட்டார். பதினாறு வருஷம் கம்பெனி வேலையில் ஈடு பட்டு வில்கின்ஸனின் உடல் நலம் கெட்டுவிட்டது. ஓய்வு எடுத்துக் கொண்டு இங்கிலாந்துக்குத் திரும் பினார். இருந்தாலும் ஸம்ஸ்கிருத ஆராய்ச்சியை மட்டும் விடவில்லை. 1796-இல் அவர் வீடு பற்றி எரிந்து அதில் அநேக அரிய கலைப்பொருள்கள் சாம்பலாகிவிட் டன. இதனால் வில்கின்ஸன் மனம் உடைந்துவிட்டார். இந்தச் சம யத்தில் கம்பெனியார் லண்ட னிலே இந்தியா சம்பந்தமான நூல்நிலையம் ஒன்று ஏற்படுத்தப் போவதாக அறிவித்தார்கள். இங்கிலாந்திலே வில்கின்ஸனைத் தவிரக் கீழ்நாட்டு மொழிகளில் தேர்ச்சிபெற்றவர் வேறு எவருமே இல்லை. 1799-இல் இது விஷய மாக அவர் கம்பெனி டைரக்டர் களுக்கு எழுதும்போது, 'பழம் பொருள் காட்சி நிலையமாகவும் இதைப் பயன்படுத்திக் கொண் டால் நல்லது' என்று குறிப்பிட் டார். தம்மை அதற்கு அதிகாரி யாக நியமிக்கும்படியும் கேட்டுக் கொண்டார். அதற்குப் பதிலே

கிடைக்கவில்லை. பிறகு வாரன் ஹேஸ்டிங்ஸுக்கே ஒரு கடிதம் எழுதினர். வில்கின்ஸனின் திறமையைப்பற்றி அவர் டைரக்டர்களுக்கு ஒரு சிபார்சுக் கடிதம் அனுப்பினர். அப்படியும் ஒரு பலனும் ஏற்படவில்லை. ஒரு வருஷங் கழித்து வில்கின்ஸன் மறுபடியும் டைரக்டர்களுக்குக் கடிதம் எழுதினர். டைரக்டர்களின் தலைவராக இருந்த டாண்டாமஸ் என்பவர் அப்போதுதான் வேலையிலிருந்து விலகிக்கொண்ட சமயம். 'இந்த டாண்டாமஸ்தான் அதுவரை இந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டு வந்தார்' என்று பின்னல் தெரிந்தது. விரைவிலேயே புதிய டைரக்டர்கள் வில்கின்ஸனை 200 பவுன் வருஷச் சம்பளத்தில் அந்தப் பழம்பொருள் நிலையம், நூல் நிலையம் இரண்டுக்கும் அதிகாரியாக நியமித்தார்கள். இதில் முதல் முதலாகக் கிடைத்து, வரவு வைத்திருக்கும் பொருள்கள் மூன்று யானைகளின் மண்டையோடுகள்தான். அடுத்தபடி வந்தது 'மொகல் சரிதம்' என்னும் பாரசீகக் கையெழுத்துப் பிரதி. பழைய நூல் தொகுதியில் ராபர்ட் ஆர்ம் என்பவர் திரட்டிக் கொடுத்த நூல்கள் சிறந்தவை. பிறகு மேஜர் பீட்ஸன் என்பவரின் மூலம் 'திப்பு சுல்தானின் தினசரிக் குறிப்பு'க் கிடைத்தது. திப்பு என்ன என்ன பிரமாதமான திட்டங்களைப் போட்டு வைத்திருந்தார் என்று அதிலிருந்து தெரிகிறது. அவர் தோற்ற பிறகு ஸ்ரீரங்கப்பட்டணத்திலுள்ள அவருடைய மாளிகையைச் சோதித்தபோது, வெள்ளைக்காரன் ஒருவனைக் கீழே தள்ளி அறைவது போல் ஒரு புலியின் பொம்மை கிடைத்தது. அதில் அற்புதமான யந்திர சூட்சுமம் அமைந்திருந்தது. ஒரு கைப்பிடியைத் திருகினதும் அந்தப் புலி கர்ஜிப்பது போலவும் கூடவே கீழே கிடக்கும் ஆள் ஐயோ என்று கூவுவது போலவும் சத்தம் கேட்கும். அந்தக் காலத்தில் இந்த அதிசயத்தைப் பார்க்க லண்டன்வாசிகளெல்லாம் திரண்டு வருவார்களாம்.

கம்பெனியார் இப்படியெல்லாம் சிரமப்பட்டு இந்த விஷயமாக உழைத்தும் வங்காளத்திலிருந்து எந்த விதமான அரிய பொருளும் கிடைக்கவில்லை. அதனல், 'வங்க சர்க்கார் இதைப்பற்றிச் சிரத்தை காட்டாதிருப்பதற்கு மிகவும் வருந்துகிறேம்' என்று இந்தியா ஆபீஸ் அதிகாரிகள் அந்தச் சர்க்காருக்கு ஒரு கடிதம் எழுதினர்கள்.

ஆனல் வங்காளத்திலிருந்து கிடைக்காததற்கு வேறு காரணம் இருந்தது. ஏஷியாடிக் சொஸைட்டி ஸ்தாபிதமாகி, போர்ட் வில்லியம் காலேஜும் அப்போது நடந்து வந்ததால் லண்டனுக்கு அனுப்பாமல் இங்கேயே அந்தப் பொருள்களைச் சேகரித்து வைத்திருந்தார்கள். ஆயினும் வங்க சர்க்கார் தம் கெஜட்டில் அந்தக் கடிதத்தைப் பிரசுரித்தார்கள். அது முதல் குறை சொல்வதற்கே இடம் இல்லாதபடி இந்தியா ஆபீஸில் ஏராளமான நூல்கள் வந்து குவிய ஆரம்பித்தன. பொருட்காட்சி நிலையமும் அபிவிருத்தி அடைந்தது. வில்கின்ஸன் ஒருவராகவே இதுவரை எல்லா வேலைகளையும் கவனித்து வந்தார். இப்போது அங்கே பல குமாஸ்தாக்களை வைத்து வேலை நடத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டு

விட்டது. தக் என்ற கொள்ளைக் கூட்டத்தினரின் மண்டை ஓடுகள், பழைய நாணயங்கள், சிலைகள், திராவகத்தில் போட்டு வைத்த தவளை, பாம்பு, மீன் எல்லாம் அங்கே குவிந்துவிட்டன. இந்திய சர்க்காரின் சர்வேயர்-ஜெனரலாக இருந்த கர்னல் மெக்கென்ஸி என்பவர் பல அரிய ஸம்ஸ்கிருத, பாரசீக, அராபி, தமிழ், தெலுங்கு நூல்களைத் திரட்டி அனுப்பினர். ஹாஜ்ஸன் என்பவர் நேபாளம், திபேத் இங்கிருந்தெல்லாம் அநேகம் பழைய சுவடிகளைச் சேகரித்து அனுப்பினர். வாரன் ஹேஸ்டிங்ஸ், பிலிப் பிரான்ஸிஸ், லீடன், ஸர் வில்லியம் ஜோன்ஸ், கோல்ப்ரூக் இவர்களும் இந்தத் தொண்டில் ஈடுபட்டார்கள்.

1891-இல் துருக்கிஸ்தானில் மரப்பட்டையில் எழுதிய பழைய ஸம்ஸ்கிருத ஆயுர்வேத நூல் ஒன்றைக் கர்னல் பவர் என்பவர் கண்டெடுத்து இந்தியா ஆபீஸுக்கு அனுப்பினர். மத்திய ஆசியா முதலிய இடங்களிலிருந்து வட இந்தியக் கரோஷ்டி லிபியில் எழுதிய இன்னும் பல ஸம்ஸ்கிருத நூல்களை ஸர் ஆரல்ஸ்டீன் என்பவர் கொண்டு வந்து அங்கே சேர்த்தார்.

1867-இல் இந்தியப் புத்தகப் பதிவுச் சட்டம் அமலுக்கு வந்ததும், இந்தியாவில் அச்சாகும் ஒவ்வொரு புத்தகத்திலும் ஒரு பிரதி இந்தியா ஆபீஸ் நூல்நிலையத்துக்கு அனுப்ப வேண்டும் என்று உத்தரவாயிற்று. பத்து வருஷத்துக்குள் ஏராளமான புத்தகங்கள் குவிந்துவிடவே, 'புத்தக ஜாபிதா மட்டும் அனுப்பினல் போதும். அதிலிருந்து பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம்' என்று லண்டனிலுள்ள அதிகாரிகள் மாகாண சர்க்கார்களுக்கு எழுதிவிட்டார்கள்.

வில்கின்ஸன் இறந்தபின் 1836-இல் ஹொரேஸ் ஹேமன் என்பவரை நூல் நிலைய அதிகாரியாக்கினர்கள். இவர் காலத்தில் தான் பொருட்காட்சி நிலையத்தையும் நூல் நிலையத்தையும் தனித் தனியாக்கினர்கள். 1858-இலிருந்து இவைகளை நிர்வகிக்கும் பொறுப்பைக் கம்பெனியாரிடமிருந்து சர்க்காரே ஏற்றுக்கொண்டு விட்டார்கள். பின்னல் நிலைய அதிகாரிகளாக வந்த டாக்டர் பாலன்டைன், தாமஸ், புரொபஸர் ராஸ்ட், டானி முதலியவர்களும் இந்த விஷயமாக அரிய சேவை செய்திருக்கிறார்கள்.

1935-இல் இந்தியா ஆபீஸ் அறிக்கையின்படி அந்த நூல்நிலையத்தில் சுமார் 2 லட்சத்து 3 ஆயிரம் அச்சுப் புத்தகங்களும் 20,000 பழஞ்சுவடிகளும் இருந்ததாகத் தெரிகிறது. கீழ்க்கண்டபடி அவைகளை மொழிவாரியாகப் பிரித்திருக்கிறார்கள்:

அராபி, பாரசீகம் ...	11,000
ஸம்ஸ்கிருதம், பாலி, பிராகிருதம் ...	2,000
திப்பதி ...	100
சீனம் ...	1,800
ஜெந்த், பஹ்லவி ...	200
அஸ்ஸாமி ...	700
வங்காளி ...	24,000
தமிழ் ...	15,250
குஜராத்தி ...	9,500
ஹிந்தி ...	19,000
கன்னடம் ...	3,160
மலையாளம் ...	1,350
மைதிலி ...	29
மராட்டி ...	9,200
நேபாளி ...	370

ஒரியா	...	3,950
பஞ்சாபி	...	4,925
புஷ்டு	...	315
ஸாந்தாலி	...	125
ஸிந்தி	...	2,500
தெலுங்கு	...	9,500
உர்து	...	19,000

இவை தவிர ஐரோப்பிய மொழிகளில் எழுதிய 60,000 நூல்களும் இன்னும் பர்மா, சியாம், மலாய், ஜாவானிய மொழிகளில் எழுதிய பல நூல்களும் சித்திரங்களும் அங்கே இருக்கின்றன. இப்போது இந்த நூல்நிலையமும் பொருட்காட்சி நிலையமும் நம் இந்திய சர்க்கார் கைக்கு வந்து விட்டன. இனியாவது இந்த அரிய கலைக் களஞ்சியத்தை நம் நாட்டுக்குக் கொண்டுவந்து பாதுகாப்பது நலம்.

அந்தக் காகிதத் துண்டு

ஒரு பிரபல ராணுவ அதிகாரி ஒரு நாள் ஐரோப்பாவில் எங்கோ ரெயில் மார்க்கமாகப் போய்க்கொண்டிருந்தார். அவர் முதல் வகுப்புப் பெட்டியில் இருந்தார். படுக்கச் சௌகரியமாக மெத்தை இருந்தது. நிம்மதியாக நீட்டிப் படுத்துக்கொண்டார். காலையில் எழுந்திருப்பதற்குள் அவர் பாடு போதும் போதுமென்றாகி விட்டது. மூட்டைப் பூச்சிகள் அவரைக் கடித்துத் தீர்த்து விட்டன. பாவம், வீட்டில் ஆரோக்கியமாக, சகல சௌகரியத்தோடும் வாழ்ந்தவர் அந்த அதிகாரி. இதுவரை இந்த மாதிரி அவதிப்பட்டதில்லை. அதனால் உடனே ரெயில்வே கம்பெனியாரின் அசிரத்தையைக் கண்டித்து ஒரு கடிதம் அனுப்பினார். விரைவிலேயே அதற்குப் பதிலும் கிடைத்தது; உயர்ந்தரகக் காகிதத்தில் பல பக்கம் அழகாக 'டைப்' செய்த நீண்ட கடிதம் அது. அதில் கம்பெனியின் காரியதரிசி, அந்த ராணுவ அதிகாரிக்கு நேர்ந்த சிரமத்துக்காகப் பல முறை மிகவும் விநயமாக மன்னிப்புக் கேட்டு எழுதியிருந்தார்.

"இந்த மாதிரி நடந்ததேயில்லை......ரெயில் சிப்பந்திகள் ஏதோ சாக்குப்போக்குச் சொன்னார்கள்....அதெல்லாம் யார் கேட்பார்கள்?...... தங்களுக்கு இதனால் எவ்வளவு ஆரோக்கியக் குறைவு....டாக்டர் செலவு வேறு ஆகும்...தங்களைப் போன்ற பிரபலஸ்தர் இப்படி அவதிப்பட நேர்ந்ததென்றால் கம்பெனிக்கே பெரிய அவமானமாயிற்றே!..." என்றெல்லாம் வேறு அதில் அடுக்கியிருந்தது.

"பரவாயில்லை. நல்ல ஆசாமிகள்தான். மரியாதையாகத்தான் பதில் எழுதியிருக்கிறார்கள்" என்று எண்ணினார் அந்த ராணுவ அதிகாரி. அவருக்கு உச்சி குளிர்ந்துவிட்டது. அதை மடித்து ஜேபிக்குள் வைக்கப்போனார். அப்போது தற்செயலாக கடிதத்தின் கடைசிப் பக்கத்தில் ஒரு காகிதத்துண்டு ஒட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது. அதில் நீலப் பென்ஸிலில் ஏதோ கிறுக்கி வைத்திருந்தது. உற்றுக் கவனித்தார் அதிகாரி. "இந்தப் பயலுக்கு அந்த மூட்டைப்பூச்சிக் கடிதத்தின் நகல் ஒன்று அனுப்பிவிடுங்கள்" என்றுதான் அதில் எழுதியிருந்தது;

—'லீடர்', இங்கிலாந்து.

வழி வழி வந்த வசனநடை : 13.

தேவியின் பெருமை

★

கவிச் சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் பல நூல்களை இயற்றியிருக்கிறார். 11-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் அவர். அவர் இயற்றிய நூல்களில் 'தக்கயாகப் பரணி' என்ற பிரபந்தமும் ஒன்று. அது கி. பி. 1146-ஆம் ஆண்டுமுதல் ஆட்சி புரிந்த இரண்டாம் ராஜ ராஜ சோழன் காலத்தில் இயற்றப் பெற்றது. அதற்குப் பழைய உரை ஒன்று உண்டு. அதன் ஆசிரியர் இன்னார் என்று தெரியவில்லை. அவரைப் பற்றி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பின்வருமாறு எழுதியிருக்கிறார்கள். "இவருடைய பெயர் தெரியவில்லை. ஆயினும் இவருடைய உரையினால் இவர் இருமொழியினும் வல்லுநரென்பதும், தமிழில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தகடூர் யாத்திரை, இரும்பல்காஞ்சி, மாடலம், ஐம்பெருங்காப்பியம், சூளாமணி, உதயணன் கதை முதலிய பழைய நூல்களிலும், தொல்காப்பியம், அவிநயம், வயிரமேக விருத்தி முதலிய இலக்கணங்களிலும், வடமொழியில் வேதம், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள், காவியங்கள், வியாகரணங்கள், யோகம், சோதிடம், வைத்தியம் முதலியவற்றிற்குரிய நூல்களிலும், பல சமய நூல்களிலும் தக்க பயிற்சி உடையாரென்பதும், நூலாசிரியர் கருத்தறிந்து உரை எழுதுபவரென்பதும் விளங்கும்."

பின்னே வருவது 'தக்கயாகப் பரணி'யில் கடைதிறப்பின் முதல் பாட்டாகிய, "தார்மார்பமும் முகவிம்பமும் நுமகாதலர் தரநீர், சேர்தாமரை இறையாளடி பணிவீர்கடை திறமின்" என்பதன் உரை.

தக்கயாகப் பரணி உரையாசிரியர்: *ஸ்ரீதேவியும் சரசுவதியும் அடியாராக விட்டுணுவாலும் பிரமாவாலும் உமாபரமேசுவரிக்கு ஸ்திரீதனமாகக் கொடுக்கப்பட்டாரென்னும் புராண கதையை உட்கொண்டு கூறியது இக்கடை திறப்பு.*

தார்மார்பமாவது, விட்டுணுவினுடைய திருத்துழாய்த் திருமார்பு. முகவிம்பமாவது, பிரமாவினுடைய முக மண்டலம்.

என்றது, இவை இரண்டையும் உம்முடைய புருஷரான இருவரும் உமக்கே தர, நீங்கள் இருவரும் இருந்தும்

தாமரைகளை உமாபரமேசு வரியுடைய ஸ்ரீபாதங் களிலே ஒப்பிப்பீர், உம்மு டைய கோயில் திருவாயிற் கதவுகளைத் திறமின் என்ற வாறு.

எனவே, தார்மார்பமான மகாவிட்டுணுவின் திரு மார்பு பூமி தேவிக்கும் உரித் தாய்ப் பொதுவாய் இருத்த லைத் தவிர்ந்து ஸ்ரீதேவி தானே பெறுதற்கும், பிரமா வினது திருமுகமண்டல மானது சாவித்திரிக்கும் உரித்தாய்ப் பொதுவாய் இருத்தலைத் தவிர்ந்து சரசு வதி தானே பெறுதற்கும் வேண்டிச் சௌபாக்கிய கர்த்தரி பரமேசுவரியாவ தறிந்து, அவளுடைய ஸ்ரீ பாதங்களிலே ஸ்ரீதேவி தன் செந்தாமரையும் சரசு வதி தன் வெண்டாமரையு மான இரண்டு புட்பங்களை யும் இட்டு அர்ச்சிக்கவே, பரமேசுவரி அனுக்கிரகித்தரு ளித் தாங்கள் இருக்கும் இடங் களை நமக்குத் தந்தாரென அவர் நினைத்த சிறப்பைப் பிரசாதித் தருளுவளென்பது பொருள்.

[குறிப்பு: கடை திறப்பு - வாயி லைத் திறத்தல். சௌபாக்கிய கர்த் தரி - செல்வங்களுக்குத் தலைவி. பிரசாதித்தருளுவள் - வழங்கு வாள்.]

பெரியோர் பெருந்தன்மை

ஐக்கிய அமெரிக்காவில் ஆப்ரகாம் லிங்கன் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பிரமாதமான உள்நாட்டு யுத்தம் நடந்தது. அதன் கடைசிக் கட்டத்தில் கெட்டீஸ்பர்க் என்னும் இடத்தில் நிகழ்ந்த சண்டை உலகப் பிரசித்தமானது. அதில் ஒரு நிலையில் எதிர்க் கட்சியைச் சேர்ந்த தளபதி லீ என்பவரின் சேனை பின்வாங்கிக்கொண் டிருந்தது. 'உள்நாட்டு யுத்தத்தை அடியோடு முடிவுக்குக் கொண்டுவர இதுதான் சமயம். லீயின் சேனையை விரட்டியடித்தால் அதை முறியடிக்கலாம்' என்று ஜனாதிபதி லிங்கன் எண்ணினார். அப்படியே விரட்டும்படி தம் சேனாதிபதி ஒருவருக்கு நட்பு முறையில் ஒரு கடிதத்தின் மூலம் யோசனை கூறினார். அந்தக் கடிதத்துடன் ஒரு சிறு சீட்டும் வைத்திருந்தார். அந்தச் சீட்டில் கண்டிருந்தது இதுதான்:

"என் யோசனை அடங்கிய கடிதத்தை உத்தியோக முறைத் தஸ்தாவேஜாக நீங்கள் பதிந்துகொள்ளத் தேவையில்லை. அதன்படி போரிட்டு உங்களுக்கு வெற்றி கிடைத்தால், என் கடிதத்தை நீங்கள் வெளியிட வேண்டியதில்லை; தோல்வி நேர்ந்தால் அதை வெளியிட்டு விடுங்கள். அப்போது, உங்களுக்கு வெற்றி கிடைத்தால் அதன் பெருமை உங்களையே சேரும்; தோற்றால் அதன் பொறுப்பை நான் ஏற்பேன்."

பத்திராசலம் ராமனை நேரில் தரிசித்த இந்த மன்னனின் வரலாறு மிகவும் உருக்கமானது.

தானீ ஷா

★

பக்த ராமதாசரைப் பல சித்திரவதைக்கு உள்ளாக்கிக் கடைசியில் ராம லட்சுமணர்களைத் தரிசிக்கக் கொடுத்துவைத்த கோல்கொண்டா மன்னர் தானீ ஷா. அவர் உண்மையில் நல்ல அரசர் தான்.

ராமதாசரின் அம்மான்மாரான அக்கன்னாவும் மாதன்னாவும் தென்னாட்டின் சிறந்த ராஜதந்திர நிபுணர்கள் என்று அந்தக் காலத்திலேயே பெயர் எடுத்தவர்கள். மாதன்னாவை முதல் மந்திரியாக்கி அவரிடம் ராஜ்யப் பொறுப்பு முழுவதையும் ஒப்பித்துவிட்டுத் தானீ ஷா, வேதாந்தத்திலும் கவிதையிலும் ஈடுபட்டு ராஜயோகியாக வாழ்க்கை நடத்தி வந்தார்.

அக்கன்னாவையும் மாதன்னாவையும்பற்றிக் கட்டுக்கதைகள் சில வழங்கி வருகின்றன. அவற்றில் ஒன்று இது:

மாதன்னா முதல் மந்திரி. அவருடைய வீட்டில் தினந்தோறும் விருந்தாளிகளுக்குச் சாப்பாடு நடக்கும். யாரோ ஒரு பிராம்மணர் பல நாட்கள் மந்திரி வீட்டில் தங்கினார். மாதன்னா அந்தப் பிராம்மணர் தம் மனைவியின் உறவினர் என்றும், மனைவி மாதன்னாவின் உறவினர் என்றும் நினைத்துப் பல நாட்கள் பேசாமல் இருந்துவிட்டார்கள். ஒருநாள் ஏதோ லோகாபிராமமாகப் பேசிக்கொண்டிருந்த சமயம் பார்த்து அக்கன்னா, "அப்பா! நாம் இருவரும் சிறிய தாயார் பெரிய தாயார் மக்கள்: அண்ணன் தம்பிகள். நீ லட்சுமிதேவியின் மகன்; நான் ஜேஷ்டாதேவியின் மகன்" என்று சொல்லிச் சிரித்தா

தானீ ஷா

அக்கன்னா

மாதன்னா

காப்பிரைட்: ஆந்திர பத்திரிகா (தெலுங்கு), சென்னை.

ராம். அது முதல் இருவரும் அண்ணன் தம்பிகளாகவே மாறிவிட்டார்களாம்.

கதை வேடிக்கையாய் இருந்தாலும் உண்மை அல்ல. அக்கன்னு மாதன்னு இருவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளே. இவர்கள் ஒருகல்லு என்ற ஊரைச் சேர்ந்த நியோகிப் பிராம்மணர்கள். தகப்பனுர் பானுஜீ பந்துலு; தாய் பாக்கியம்மாள். சிறுவயதிலேயே வித்தைகள் கற்றுத் தேர்ந்து உத்தியோகம் தேடிக் கோல்கொண்டாவுக்கு வந்தார்கள். அங்கே மீர் ஜும்லா என்ற தர்பார் உத்தியோகஸ்தனிடம் குமாஸ்தாக்களாக அமர்ந்தார்கள். மாதச் சம்பளம் 10 கில்டர் (சுமார் 11¼ ரூபாய்). மாதன்னு தந்திரசாலி. அக்கன்னு கற்றுத் தேர்ந்த பண்டிதராஞலும் படபடப்பு உள்ளவர். இவர்கள் குமாஸ்தாக்களாக இருக்கும்போதே இவர்களுடைய அறிவும் திறமையும் தானீ ஷாவின் காதுக்கு எட்டின. இருவரையும் அந்தரங்க உத்தியோகஸ்தர்களாக நியமித்துவிட்டார்.

தானீ ஷாவின் கதை விசித்திரமானது. அவர் இயற்பெயர் அபுல் ஹாஸன். சிறுவயதிலே தந்தையையும் ஆஸ்தியையும் இழந்து வறுமையில் உழன்றூர். அப்போது கோல்கொண்டாவில், சையத் ராஜ் கொத்தால் என்ற முஸ்லிம் ஞானி ஒருவர் இருந்தார். அவருடைய சிஷ்யராக அபுல் ஹாஸன் 14 வருஷ காலம் பக்தியோகத்தில் ஈடுபட்டார்.

அந்த நாளில் கோல்கொண்டா அரச குடும்பத்தின் நிலைமை சீர்கெட்டிருந்தது. சுல்தான் அப்துல்லாவுக்கு ஆண் சந்ததி இல்லை. மூன்று பெண்களே இருந்தார்கள். அரசன் மக்காவைச் சார்ந்த உயர் குடும்பத்துப் பிள்ளையான சையது அகமது என்பவனுக்கு முதல் பெண்ணை மணம் செய்து கொடுத்தான். அவன் அரண்மனையில் செல்வாக்குப் பெற்று மன்னனைத் தன் கைப் பொம்மையாக ஆட்டி வைத்தான். ராஜ்யத்தை ஆண்டதும் மருமகனே. இரண்டாம் பெண்ணை அவுரங்கஜேபின் மகனுன முகம்மது சுல்தானுக்குக் கொடுத்தார்கள். மூன்றும் பெண்ணின் விவாகம் 'காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனுன்' என்ற கதையாக முடிந்தது.

முதல் மருமகனுன சையது அகமதுக்குவேண்டியவனுன சையது சுல்தான் என்பவனுக்குப் பெண்ணைக் கொடுப்பதாக ஏற்பாடாகியிருந்தது. விவாகம் நாளைக்கு என்ற சமயத்தில் பெரிய மாப்பிள்ளை சையது அகமதைப் புது மாப்பிள்ளை ஏதோ கேலி செய்தானென்ற காரணத்தால் விவாகம் நின்றுவிட்டது. பெரிய மாப்பிள்ளை சையது அகமது, தன் பேச்சுக்குக் கட்டுப்படக் கூடிய அநாமதேயப் பேர்வழி யாருக்காவது இந்தப் பெண்ணைக் கொடுக்கத் தீர்மானித்தான். இரவுக்கு இரவே அவன் மனத்தில், நல்ல குலத்தில் பிறந்தும் ஏனென்று கேட்பார் இல்லாமல் பைராகியாகத் திரியும் அபுல் ஹாஸனின் ஞாபகம் வந்தது. உடனே அவரை அழைத்து வந்து பெண்ணைக் கட்டிக் கொடுத்துவிட்டான்.

சுல்தான் அப்துல்லா இறந்ததும் சையது அகமது தானே சுல்தான் ஆகிவிடலாம் என்று மனப்பால் குடித்தான். அவனுடைய துடுக்குத் தனத்தாலும் கர்வத்தாலும் தர்

பாரில் அவனுக்குப் பல விரோதிகள் ஏற்பட்டார்கள். சேனாதிபதி, மகல்தார் இருவருடைய தலைமையில் பலர் சேர்ந்து பெரிய மருமகனைச் சிறையில் அடைத்தார்கள். பைராகியான அபுல் ஹாஸனைத் 'தானீ ஷா' என்ற பெயரில் சிம்மாசனம் ஏற்றினார்கள். சேனாதிபதியும் மகல்தாரும் மந்திரிகளானார்கள். தானீ ஷா தம் கைப் பொம்மை என்று அவர்கள் எண்ணி வந்தார்கள். ஒன்றும் தெரியாத அப்பாவி போல் வெளிக்குத் தோன்றினாலும் தானீ ஷா மட்டும் அவர்களைத் தொலைக்கச் சமயம் பார்த்துக்கொண்டுதான் இருந்தார்.

இந்தச் சமயத்தில் தானீ ஷாவுக்கு அக்கன்னா - மாதன்னா சகோதரர்களின் அறிவையும் நேர்மையையும் பற்றித் தகவல் எட்டியது. பின்பு தம்மை ஆட்டிவைக்க நினைத்த இரு சதியாளர்களையும் மாதன்னாவின் உதவியால், தக்க சமயத்தில் பிடித்துத் தண்டித்தார். மாதன்னாவுக்குச் சர்வாதிகாரத்துடன் முதல் மந்திரி பதவியையும் 'சூரியப் பிரகாச ராவ்' என்ற பட்டத்தையும் கொடுத்தார். அக்கன்னா தலைமைச் சேனாதிபதியானார். இவர்களுடைய தம்பி வெங்கன்னா 'ருஸ்தும் ராவ்' என்ற பட்டத்துடன் அரண்மனையில் ஓர் அதிகாரியானான். இவர்களின் மருமகன் கோபன்னாவுக்குப் பத்திராசலத்தில் தாசில் வேலை கிடைத்ததும் இந்தச் சமயத்தில்தான். இந்தக் கோபன்னாதான் பின்னால் பக்த ராமதாசர் என்று பெயர் எடுத்தார். மாதன்னா அந்நியநாட்டு உறவில் மிகவும் கவனம் செலுத்தினார். கோல்கொண்டா சுல்தான்கள் அவுரங்கஜேபுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசர்களே. பீஜப்பூர் சுல்தான்களிடமும் இவர்கள் உறவு பாராட்டிக்கொண்டிருக்க நேர்ந்தது. தெற்கே சிவாஜி எதிர்ப்பார் இல்லாமல் கொள்ளை அடித்துக்கொண்டிருந்தார். அவுரங்கஜேபின் நட்போ பாம்போடு தவளை பழகுவது போல. என்றைக்குப் பாய்ந்து விழுங்கி விடுவாரோ என்ற திகில் இருந்து கொண்டே இருந்தது. சிவாஜியோ சமீபத்தில் உள்ள பகைவர். அதனால், சிவாஜி கோல்கொண்டாவுக்குச் சமயத்தில் துணை நிற்க வேண்டுமென்றும், தெற்கே கொள்ளையடித்த லாபத்தில் கோல்கொண்டாவுக்கும் பங்கு தரவேண்டும் என்றும், அதற்காகத் தானீ ஷா வருடபடியில் சிவாஜிக்குச் சில லட்ச ரூபாய்கள் வரி கொடுப்பதென்றும் மாதன்னா ஏற்பாடு செய்தார்.

ஒப்பந்த விஷயம் அவுரங்கஜேபுக்கு எட்டியது; நறநற வென்று பல்லைக் கடித்தார். கோல்கொண்டாவில் தம் விசேஷத் தூதனை நியமித்து, தானீ ஷாவைத் தம் கட்டளைக்கு அடங்கி இருக்கும் படி செய்தார்.

மாதன்னா, தம் சாணக்கியத் திறமையை உபயோகித்து, கோல்கொண்டா சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றிவந்தார். வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுத்தார்.

மாதன்னாவின் ஆட்சி, சில சுயநலக்காரர்களுக்கும் அரண்மனைக் கோஷாப் பெண்களுக்கும் பிடிக்கவில்லை; தானீ ஷாவிடம் மாதன்னாவைப்பற்றிப் புகார் செய்துகொண்டே இருந்தார்கள். ஆனால் கடைசிவரையில் மாதன்னாவையும் தானீ ஷாவையும் பிரிக்க முடியவில்லை. இந்தச் சமயத்தில்தான் கோபன்னா பத்திராசலத்தில் ராமர் கைங்கரியத்துக்காக அரசாங்கப்

பணத்தில் ஆறு லட்சம் எடுத்த செய்தி வந்தது. கோபன்னுவைக் கைது செய்தாலும் விடுவித்த பின், தானீ ஷாவே வருஷந்தோறும் கோயிலுக்குக் காணிக்கை அனுப்பி வந்தார்.

மாதன்னு சிவாஜியை நம்பியது வீணாயிற்று. இவர்கள் கொடுத்ததை வாங்கிக்கொண்டு சிவாஜி சும்மா இருந்துவிட்டார். அவர் உதவும் சந்தர்ப்பமே நேரவில்லை; கடைசியில், சிவாஜி இறந்துவிட்டார். மாதன்னு அக்கன்னு இருவரும் அதிகாரம் வகிப்பது பிறருக்கெல்லாம் கண்ணில் உறுத்தியது. அப்போது பீஜப்பூரின் மேல் அவுரங்கஜேப் படையெடுத்தார். "பீஜப்பூருக்கு ஏதாவது உதவி செய்தால் கோல்கொண்டா தொலைந்தது" என்று தானீ ஷாவுக்குச் செய்தி விடுத்தார். ஆனாலும் தானீ ஷா ரகசியமாகப் பீஜப்பூருக்கு உதவத்தான் வேண்டியிருந்தது.

அவுரங்கஜேப் கோல்கொண்டாவையும் பற்றிக்கொள்ள விரும்பினார். 'காபிர் சுல்தான்' என்றும், மதுவிலும் காமத்திலும் மயங்கிக் கிடக்கிறான் என்றும் தானீ ஷாவைப்பற்றித் துஷ்பிரசாரம் செய்தார். தானீ ஷாவைச் சண்டைக்கு இழுக்கும்படி தம் விசேஷத் தூதனுக்கு உத்தரவிட்டார்.

அந்தச் சமயத்தில் அத்தெமத்த ராவ் என்னும் தர்பார் உத்தியோகஸ்தனை அக்கன்னு பகைத்துக் கொண்டார். மாதன்னு சாதுரியமாக எவ்வளவோ முயன்றும் அத்தெமத்த ராவைச் சமாதானப் படுத்த முடியவில்லை. அன்றுமுதல் கோல்கொண்டா அரசாங்கத்துக்கு எதிராகச் சதிகாரர் தோன்றினார்கள்.

மொகலாயர் கோல்கொண்டாவின்மேல் படையெடுத்து விட்டார்கள். சேனைகளை அக்கன்னு, மாதன்னு இருவருக்கும் விரோதமாகத் தூண்டிவிட்டான் அத்தெமத்த ராவ்.

அவுரங்கஜேபின் மகன் ஷா ஆலம் கோல்கொண்டாவைத் தாக்கினான். தானீ ஷா கப்பம் கட்டித் தூது அனுப்பினார். அக்கன்னுவையும் மாதன்னுவையும் தர்பாரைவிட்டு நீக்கிவிட வேண்டும் என்று அவுரங்கஜேபு உத்தரவிட்டார். உத்தியோகத்தில் வெறுப்புற்றிருந்த அவர்களிருவரும் அதற்கு முன்னாலேயே தானீ ஷாவிடம் விடை பெற்றுக் கொண்டார்கள். ஒருநாள் தங்கப் பல்லக்கில் வெளியே வந்த அக்கன்னு - மாதன்னு சகோதரர்களை அத்தெமத்த ராவின் ஆட்கள் சூழ்ந்து தலைகளை வெட்டி இருவர் உடல்களையும் அவர்கள் உறவினர் இருந்த தெரு வழியாக இழுத்துக் கொண்டுபோனார்களாம். மாதன்னுவுக்குக் குழந்தைகள் இல்லை. அக்கன்னுவின் குழந்தை மல்லன்னுவை நன்றியுள்ள ஒரு முஸ்லிம் வேலையாள் மடியில் வைத்து மறைத்து வெளியே கொண்டுபோய் விட்டான்.

தம்மிடம் உடன்பிறந்தவர்போல் அன்புசெலுத்திய இந்தச் சகோதரர்கள் இறந்த செய்தியைக் கேட்ட தானீ ஷா வருந்தியது கொஞ்ச நஞ்சமல்ல.

கடைசியில் தானீ ஷா அவுரங்கஜேபைச் சரணாகதி அடைந்தார். கோல்கொண்டா மொகலாயர் கையில் சிக்குண்டது. தானீ ஷாவைத் தௌலதாபாது கோட்டையில் சிறை வைத்தார்கள். அங்கேயே 14 வருஷங்கள் காலந் தள்ளித் தானீ ஷா இறந்தார்.

உள்ளே நுழைந்தால் வெளியே வர வழி தெரியாத அதிசயக் கோட்டை இங்கே உண்டு.

குவாலியர் விந்தைகள்

த. நாகராஜா

பம்பாய் நகரிலிருந்து சுமார் 500 மைல் ஜி. ஐ. பி ரெயிலில் போனால், சரித்திரப் புகழ் பெற்ற போபால் நகரத்தைக் காணலாம். ஸர்தார் படேல் சுதேச சம்ஸ்தானங்களை இணைக்கும் வரையில் நவாபின் வம்சத்தவரே இதை ஆண்டு வந்தார்கள். நகரத்தில் எங்கே பார்த்தாலும் புழுதியும் அழுக்கும் நிறைந்திருக்கும். அங்கிருந்து புறப்பட்டுச் சுமார் 17 மணி நேரம் பிரயாணம் செய்தால் 250 மைல் தூரத்தில் உள்ள குவாலியர் வந்து சேருவோம். டில்லியிலிருந்து சென்னைக்குப் போகும் ரெயில், குவாலியர் மார்க்கமாகவே செல்லுகிறது. குவாலியர் சம்ஸ்தானத்தின் விஸ்தீர்ணம் 29,500 சதுரமைல். ஜனத்தொகை 4 கோடி. இதை 'ஸிந்தே' வம்ச அரசர்கள் ஆண்டு வந்தார்கள். ராணோஜி ஸிந்தே என்னும் ராஜபுத்திர அரசரே இதை ஸ்தாபித்தவர். இவருக்குப் பின் ஆண்டவர்களும் தர்மத்தில் பற்று, குடிகளிடம் அன்பு, வீரம், கொடை, தேசாபிமானம், தன்னம்



குவாலியர்—'மானமந்திரம்'

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்), ஹுப்ளி.

பிக்கை ஆகிய எல்லா நற்குணங்களும் படைத்தவர்கள்.

ஒரு காலத்தில் சம்ஸ்தானத்துக்குச் சொந்தமான தங்கசாலை இருந்தது. அதற்கு அடையாளமாக அந்தக் காலத்து நாணயம் இப்போதும் இங்கே செலாவணியில் இருக்கிறது. மக்கள் மராட்டியும் ஹிந்தியும் பேசுகிறார்கள்.

நல்ல பாலும் கத்தி போட்டு அறுக்கக் கூடிய கட்டித் தயிரும் கிடைக்கின்றன. இங்கே தித்திப்புப் பண்டங்கள்தான் விசேஷம். நம் ஊரில் மட்ட அரிசி சாதாரண மக்களுக்கு முக்கிய உணவாக இருப்பதுபோல் இங்கே பொதுவாக ஜிலேபியைக் கட்டித் தயிரோடு சேர்த்துச் சாப்பிடுவதும் டீ குடிப்பதும் வழக்கம். காபி குடிக்கும் வழக்கமே இல்லை. நமக்கு எந்தப் பட்சணம் வேண்டுமானாலும், கடைகளில் நம் எதிரிலேயே செய்து தருகிறார்கள்.

இந்தியாவுக்குள்ளே குவாலியர் கைத்தொழிலுக்குப் பேர் போனது. மண்ணாலும் காகிதத்தாலும் செய்த உடையாத பொம்மைகளை இங்கேதான் தயாரிக்கிறார்கள். இந்தப் பொம்மைகள் ஏராளமாக விலை போகின்றன.

குவாலியர் பழைய நகரம், புதிய நகரம் என்று இரண்டு பிரிவாக இருக்கிறது. புதிய நகரத்தை 'லஸ்கர்' என்கிறார்கள். ஒரு சமயத்தில், தௌலத் ராவ் ஸிந்தே என்பவன் இந்த நகரை வசப்படுத்திக் கொண்டபோது இங்கே படைகளை வைத்திருந்தானாம். அதனால்தான் இந்தப் பெயர் வந்தது. நகரத்தின் முக்கியமான காரியாலயங்கள் எல்லாம் லஸ்கரிலேயே இருக்கின்றன. இங்கே தெருக்களும் கட்டிடங்களும் அழகாக இருக்கின்றன. ஜய விலாஸ், மோதீ மகல் என்னும் பிரபல அரண்மனைகளும் மியூசியமும் அவசியம் பார்க்க வேண்டியவை.

குவாலியர் பழைய நகரம் கோட்டையின் மறுபாகத்தில் இருக்கிறது. இங்கேதான் ஜி. ஐ. பி ரெயில்வே ஸ்டேஷனும் அழகிய கோட்டை ஒன்றும் இருக்கின்றன. கோட்டையை ஒரு குன்றின்மேல் கட்டியிருக்கிறார்கள். கோட்டையின் சுவர்கள் சுமார் 4 அடி அகலமும் 20, 30 அடி உயரமும் உள்ளவை. கோட்டையைக் கட்டியிருக்கும் மாதிரியே அற்புதமாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கிறது. கோட்டை மேல் ஏறப் படிகள் இருக்கின்றன.

நகரத்தின் புதிய பாகத்திலிருந்து கோட்டைக்குப் போக ஒரு வழி இருக்கிறது; பழைய நகரத்துக்கும் வழி இருக்கிறது. புதிய நகரத்திலிருந்து டாங்கா வண்டி, கார் போக்குவரத்துக்கும் ரஸ்தா இருக்கிறது.

பழைய நகரத்திலிருந்து கோட்டைக்குப் போகும் வழியில் கோட்டையின் தலை வாசலுக்கருகில் ஜும்மா மசூதியும் முகம்மது என்பவனுடைய கோரியும் இருக்கின்றன. இவற்றின் அருகே அக்பரின் ஆஸ்தான ஸங்கீத வித்துவான் தான்ஸேனுடைய சமாதியும் இருக்கிறது.

கோட்டைக்குள் நுழைவதற்கு இரண்டணாச்சீட்டுப் பெறவேண்டும். தலை வாசலுக்கு அருகேயே இதை வாங்கிக்கொள்ளலாம். குன்றின் பாதி வழியிலேயே கோட்டைக்குள் நுழைய வேண்டுமானால் ஒவ்வொன்றாகச் சுமார் ஆறு பெரிய வாசல்களைத் தாண்ட வேண்டும். முதல் மூன்று வாசல்களும் முக்கோண வடிவில் கிட்டக்

கிட்டவே அமைந்திருக்கின்றன. மூன்றும் வாசல் மான்சிங்கின் ராணி கட்டிய அரண்மனைக்குப் போகும் வழியில் இருக்கிறது. இந்த அரண்மனை இப்போது மியூசியமாக மாறிவிட்டது. இந்தச் சம்ஸ்தானத்தின் சுற்றுப் புறத்தில் பல படையெடுப்புக்களில் அழிந்து புதைந்து உடைந்த சிற்பங்களும் சிலாசாசனங்களும் கிடைத்திருக்கின்றன. சுமார் மூவாயிரம், நாலாயிரம் வருஷங்களுக்கு முந்திய பழைய பொருள்களும் இங்கே இருக்கின்றன. ஒவ்வோர் இந்தியனும் பார்த்துப் பெருமை கொள்ளவேண்டிய இடம் இது. இங்கே இருக்கும் உடைந்த விக்கிரகங்கள்கூட இன்றும் பார்ப்பவர்களின் மனத்தைக் கவருகின்றன.

குவாலியர் கோட்டையில் 15 அடி உயரம் உள்ள வராகமூர்த்தியின் விக்கிரகம் ஒன்று இருக்கிறது. கோட்டையின் மேற்புறத்தின் முன் வந்தால் மான்சிங்கின் அரண்மனையைக் காண்போம். அதை 'மான மந்திரம்' என்கிறார்கள்; 'சித்திர மந்திரம்' என்று இதற்கு மற்றொரு பெயரும் உண்டு. இந்தக் கட்டிடம் நாலு மாடி உள்ளது. இரண்டு நில மட்டத்துக்கு மேலும், இரண்டு கீழும் இருக்கின்றன. சுவரின் வெளிப்புறத்தில் வர்ணப் பூச்சுக் கொடுத்து அழகாகத் தோன்றும்படி செய்திருக்கிறார்கள். இந்த அரண்மனை சுமார் 500 வருஷங்களுக்கு முன் கட்டியது. பல படையெடுப்புகளுக்கு ஈடு கொடுத்ததால் வண்ணப் பூச்சு அழிந்துவிட்டாலும் அரண்மனையின் அழகு குன்றவில்லை. அதைக் கண்டு பாபரே மெச்சினாராம்.

அரண்மனையின் உட்புறத்தையும் விசித்திரமாகவும் சமத்காரமாகவும் கட்டியிருக்கிறார்கள். பற்பல அறைகள்; அவை ஒரே மாதிரியாகக் காற்றும் வெளிச்சமும் தாராளமாக வரும்படி அமைந்திருக்கின்றன. நடுவில் முற்றமும் பசும்புல் தரையும் பூந்தொட்டிகளும் இருக்கின்றன. சலவைக்கல்லால் அழகிய சிற்பங்கள் அமைத்திருக்கிறார்கள். உள்ளே நுழைந்தவுடன் மனத்தில் ஒரு மகிழ்ச்சி ஏற்படும்.

இதில் உள்ள இன்னொரு விசேஷம்: உள்ளே போனவர்கள் வெளியே வர வழி தெரியாமல் திண்டாடுவார்கள். வழி தெரிந்த பிறர் உதவியாலேதான் வெளியில் வர முடியும். வழிக்கு அடுத்த அறையிலேயே நாம் இருந்தாலும் அதை உணர முடியாது. மணிக்கணக்காகச் சுற்றிக் கண்ணாமூச்சி யாடுவது வேடிக்கையாக இருக்கும்.

'மான மந்திர'த்திலிருந்து ஒரு வழியாக வெளிப்பட்டு நேராகக் குன்றின் மைதானத்துக்குப் போய் இடப்புற ரஸ்தாவில் திரும்பினால் இரண்டு கோயில்களைக் காணலாம். ஒன்று பெரிய கோயில்; மற்றொன்று சிறியது. கோயில் என்று நுழைந்தோமானால் அங்கே ஸ்வாமி லயமாய்விட்டாரென்று தெரிந்துகொள்வோம். இவை 'ஸாஸ்பாகு' தேவாலயங்கள் என்று புகழ் பெற்றவை. 800 வருஷங்களுக்கு முன்பு கட்டியவை. முகம்மதியரின் படையெடுப்பால் இவைகளின் அழகிய சிற்பங்களில் ஒவ்வோர் அங்குலமும் பின்னமாகிவிட்டது. புராதனக் கலை என்ற முறையிலும் சரித்திரக் கண்கொண்டும் பார்த்தால்தான் இவைகளின் பெருமை நமக்கு விளங்கும். 'ஸாஸ்பாகு'விலிருந்து மேற்கே போனால் 'சூரஜ்கொண்டா' என்னும் ஏரியைக் கண்டு மகிழலாம்.

பச்சைத் தேவதை

★

இது கட்டுக்கதை அல்ல, அசாத்திய ஜால வேடிக்கை பற்றிய வர்ணனையும் அல்ல; உண்மைச் சம்பவம். கான்ஸ்டன்ஸ் குக் என்பவரின் ஒரு கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது இந்த விவரம்.

பிரான்ஸ் தேசத்தில் மார்ஸேல்ஸ் நகர பாங்கி ஒன்றில் ஓர் அபூர்வக் கல்சிலை இருக்கிறது. இதன் வரலாற்றைக் கேட்டால் எவரும் திடுக்கிடுவார். இந்தச் சிலை பல பேரைக் கொன்றிருக்கிறது இது ஒரு பெண்சிலை; ஒரே ஓர் அடி உயரந்தான் இருக்கிறது; பச்சை நிறமாயிருக்கிறது. இதன் உடம்பு கொடிபோல் மெல்லியது. அலை படும் போர்வை ஒன்று இதன் உடப்பிலே போர்த்திருக்கிறது. தலையிலே விசித்திர மகுடம் ஒன்று வைத்திருக்கிறது.

இந்தச் சிலையை இப்போது பாங்கியில் 'டெப்பாஸிட்'டாக வைத்திருப்பவர் லெக்லெர்க் என்பவர். இவர் ஏற்கனவே பிரெஞ்சு ராணுவத்தில் ஒரு விமான அதிகாரியாக இருந்தவர். அபூர்வப் பொருள்களைச் சேகரிப்பதிலே இவருக்கு மிகவும் விருப்பம். 1946-ஆம் ௵ தொடக்கத்தில் இவரிடம் ஒரு கடைக்காரர் வந்தார்.

"என்னிடம் ரசமான வஸ்து ஒன்று இருக்கிறது. அது ஒரு சீனச்சிலை. என் தம்பிக்குத் தெரிந்த ஒரு ஸோல்ஜர் அதை என்னிடம் கொடுத்து விற்கச் சொன்னார். அது உங்களுக்கு வேண்டுமா?" என்று கேட்டார்.

"சரி" என்றார் லெக்லெர்க். சிலையை 9,000 பிராங்குக்கு வாங்கிக் கொண்டார். ஆனால், இது என்ன சிலை என்று அவருக்கு விளங்கவில்லை. பக்கத்திலே இருந்த கல்வெட்டு நிபுணர் ஒருவரிடம் போனார். நிபுணர் இந்தச் சிலையை மேலுங் கீழும் உற்று உற்றுப் பார்த்தார்.

"பேஷ்! அருமையான பேரம் செய்துவிட்டீர்கள். இது பழமையான சிலை. 11 அல்லது 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாயிருக்க வேண்டும். ஊறு அடையாமல் சுத்தமாயிருக்கிறது" என்றார் கல்வெட்டு நிபுணர்.

"ஆனால், இது என்ன சிலை? உயிருள்ளது போல் தத்ரூபமாயிருக்கிறது. யாருடையது என்றுதான் தெரியவில்லை" என்றார் உடைமைக்காரர்.

இந்தப் பச்சைச் சிலையைத் தடவிப் பார்த்தார் நிபுணர். "சந்தேகமில்லாமல் ஒரு தேவதையின் சிலைதான். ஆனால், என்ன தேவதை என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை. சீனர்கள் எத்தனையோ தெய்வங்களை அந்தக் காலத்தில் வணங்கியிருக்கிறார்கள். 'இன்பநிலக் கன்னி' என்று ஒரு தேவதையை எனக்கு ஞாபகம் வரு

கிறது. ஒருவேளை இந்தச் சிலை அதுவாயிருக்கலாமோ, என்னவோ...'' என்றார்.

இந்தப் பச்சைத் தேவதையிடம் லெக்லெர்க்குக்கு அளவற்ற கவர்ச்சி ஏற்பட்டது. ஓர் உயிருள்ள பெண்ணைப்பற்றிப் பேசுவது போல், ''அவள்'' என்றே இதைக் குறிப்பிடத் தொடங்கினார். இதன் உடம்பைப் பலமுறை தடவிப் பார்த்து மகிழலானார்.

இவருக்கு மட்டும் அல்ல; அந்தக் கல்வெட்டு நிபுணருக்கும் இதனிடம் மோகம் விழுந்துவிட்டது. சில வாரகாலம் வரைக்கும் அவரும் அடிக்கடி இவர் வீட்டுக்கு வருவார்; இதைத் தடவிக் கொஞ்சுவார். இதனால் அவரிடம் லெக்லெர்க்குக்குப் பொறாமைகூட உண்டாகிவிட்டது. அவரோடு சண்டை போட்டார். நிபுணரின் வருகை அதோடு நின்றுவிட்டது.

சிலநாள் சென்றது. கல்வெட்டு நிபுணரை ஏதோ நோய் பீடித்தது. அது என்ன நோய் என்றே உள்ளூர் டாக்டரால் கண்டுபிடிக்க முடியவில்லை. நிபுணர் மாண்டு விட்டார்.

அவருடைய சாவைக் கேட்டதும், லெக்லெர்க்கின் மனைவி தன் கணவருடன் சண்டையிடத் தொடங்கிவிட்டாள். ''நிபுணரைக் கொன்றது இந்தப் பொல்லாத சிலைதான்'' என்று அவள் சொன்னாள்.

''இதெல்லாம் வெறும் முட்டாள்தனம். அவரைக் கொன்றது இந்தச் சிலையே என்றால், இது என் நம்மை ஒன்றும் செய்யவில்லை? இது ஒவ்வோர் ஆளாக முறை போட்டு இம்சிக்கிறதோ?'' என்று கணவர் கேட்டார்.

கொஞ்ச காலத்தில், இந்த வாக்குப் பலித்துவிட்டது. வாட்டசாட்டமாய்க் குண்டுபோல் இருந்த லெக்லெர்க் நோயில் விழுந்தார். அது என்ன நோய் என்றே தெரியவில்லை. டாக்டர்களின் சிகிச்சை ஒன்றும் பலிக்கவில்லை. பிறகு, ஆவியுலக ஆராய்ச்சிக்காரர் ஒருவரை லெக்லெர்க்கின் மனைவி அழைத்துவந்தாள். சிலையிருந்த அறைக்கு அவரை அழைத்துச் சென்று காட்டினாள். அதன் கதையையெல்லாம் சொன்னாள்.

''உன் சந்தேகம் நியாயமானதுதான். இந்தச் சிலையிலிருந்து ஏதோ ஒரு கொடிய வாசனை வருகிறது. இதை இப்படியே உடைத்துப் பொடி செய்து அழித்து விட வேண்டும். இல்லாவிட்டால் இது இன்னும் பலபேரைக் கொன்றுவிடும்'' என்று அந்த ஆவியுலக ஆராய்ச்சிக்காரர் சொன்னார்.

லெக்லெர்க்கின் மனைவிக்கு இது சம்மதந்தான். ஆனால், சிலையை எப்படி அழிப்பது? தன் கணவர் அதை அடிக்கடி கேட்கிறாரே? கொஞ்சம் பொறுத்திருந்து பார்க்கலாம் என்று அவள் நினைத்தாள். சிலையை அழிக்கவில்லையே ஒழிய, அதைத் தன் கணவர் தொடக்கூடாதென்றுமட்டும் கண்டிப்பாகத் தடுத்துவிட்டாள். ''என் உயிர் போனாலும் சரி, இதை நீங்கள் தொட விட மாட்டேன்'' என்று கணவரிடம் சொல்லிவந்தாள்.

இதற்குள் இந்தச் சிலையைப் பற்றிய செய்தி ஊரெல்லாம் பரவி விட்டது. உள்ளூர்ப் பத்திரிகையிலும் இந்த விஷயம் வெளியாயிற்று. பத்திரிகை நிருபர்கள் பலர் வந்து, இவர்கள் வீட்டிலே கூடினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக இந்தச் சிலையின் பூர்வவரலாறு தெரியத் தொடங்கியது.

சீனாவில் 13-ஆம் நூற்றாண்டில் தயாரான சிலை இது. அங்கே

யிருந்து இது டான் பிலிப் என்ற ஒரு பாதிரியாரின் மூலமே பிரான்ஸுக்கு வந்து சேர்ந்தது. காண்டன் நகரில் பௌத்தர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஒரு சமயம் சச்சரவு ஏற்பட்டபோது, அவர்களுக்குள் சமரசம் ஏற்படுத்தி வைத்தவர் இந்தப் பாதிரியார். இவர் ஊருக்குத் திரும்பியபோது, அந்தப் பௌத்தர்கள் இந்தச் சிலையை இவருக்குப் பரிசளித்தார்கள். இதற்கு 'ஏழின்பத் தேவி' என்று பெயராம். இவர் இதைப் பாரிஸ் நகருக்குக் கொண்டுவந்தார். அதன்பின் சிலநாளில் இறந்துவிட்டார்.

இந்தப் பாதிரியாருக்குப் பிறகு, இது கைமாறி கிராவ்லெட் என்ற துறவியிடம் வந்து சேர்ந்தது. இதைப்பற்றி ஆராய்ந்ததில் இதன் கொடிய சக்தி துறவிக்குத் தெரியவந்தது. இதைப்பற்றிய பல ரகசியங்களையும் இவர் அறிந்துகொண்டார். இந்தச் சிலையிடம் தாம் வெகு ஜாக்கிரதையாக நடந்துகொண்டார். மேலும், இதனால் இனி யாரும் சாகாமல் பார்த்துக்கொள்வது என்று விரதமும் எடுத்துக்கொண்டார். ஆனால், இவருடைய விரதம் பலிக்கவில்லை. 1940-ஆம் வருஷம் ஜூன் மாதம் நாஜிகள் படையெடுத்துப் பாரிஸ் நகருக்குச் சமீபத்தில் வந்துவிட்டபோது, துறவி இந்தச் சிலையை அப்படியே போட்டுவிட்டுத் தப்பியோடினார். யுத்தம் முடிந்து திரும்பி வந்து பார்த்தார். தம் ஜாகையிலிருந்த பல பொருள்களோடு இந்தச் சிலையையும் ஜெர்மானியர் களவாடிச் சென்றிருக்கக் கண்டார். 'தொலையட்டும். அவர்கள் செய்த பாவத்துக்கு இது தெய்வ தண்டனைபோல் இருக்கிறது. அது பலிக்கட்டும்' என்று நினைத்துக் கொண்டார்.

ஜெர்மானியர் இந்தச் சிலையால் என்ன ஆனார்களோ, எப்படிப் போனார்களோ அது தெரியவில்லை. இதன் கொடுமைக்கு கிராவ்லெட்டே பலியாகிவிட்டார். அவர் எவ்வளவோ ஜாக்கிரதையாக இதனிடம் நடந்துகொண்டிருந்தும், சிறிது காலத்தில் மாண்டுவிட்டார்.

லெக்லெர்க்குக்கு இந்தச் சிலையை விற்ற கடைக்காரனிடம் இதை ஒரு ஜெர்மன் ஸோல்ஜர்தான் கொண்டுவந்து தந்தானும். அவனே இதைக் களவாடியவன் என்று தோன்றவில்லை. இடைநடுவில் இது எத்தனையோ பேரிடம் சுற்றியிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது.

டான் பிலிப், லெக்லெர்க், கல்வெட்டு நிபுணர் மூன்று பேரையும் நிதரிசனமாய்க் கொன்ற இந்த 'ஏழின்பத் தேவதை' யால் இப்போது லெக்லெர்க்கும் நோய்வாய்ப்பட்டிருக்கிறார். "இதை அழித்துவிடு" என்று நண்பர்களெல்லாம் எத்தனையோ சொல்லியும் லெக்லெர்க் கேட்கவில்லை. இதைப் பாங்கியில் ஒப்படைக்கக்கூடச் சுலபத்தில் இவர் சம்மதிக்கவில்லை. "ஐயோ! இந்தச் சிலையின்மீது ஒரு குற்றமும் இல்லையே!" என்றுதான் இவர் வாதாடுகிறார்.

இந்தச் சிலையின் சூட்சுமந்தான் என்ன? கொலை செய்யும் கொடிய சக்தி இதற்கு எப்படி வந்தது? அது ஒன்றும் பிரமாத மந்திரமும் இல்லை; மாயமும் இல்லை. இதன் உடம்பிலே பூசியிருப்பது கந்தகப் பாஷாணம் - அவ்வளவுதான் ரகசியம்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில்

சீனுமீது தார்த்தாரியர் படையெடுத்தபோது, சீன பிட்சுக்கள் சிலர் ரகசியச் சங்கம் ஒன்று அமைத்தார்கள். அவர்கள் தயாரித்த ஒரு ரகசிய ஆயுதமே இந்தச் சிலை. 'ஜயசீலர்களான தார்த்தாரியர் கொள்ளையடிக்கும்போது இதையும் எடுத்துக்கொண்டு போய்ச் சாகட்டும்' என்பது அவர்களின் எண்ணம். அவர்கள் எண்ணியபடியே இது எத்தனை தார்த்தாரியர்களைக் கொன்றதோ? இப்போது பாரிஸ் நகருக்கும் வந்து தன் திருவிளையாடலைத் தொடங்கிவிட்டது!

ஷா - பெஸண்ட் நட்பு

ஆரம்பத்தில் பெர்னார்ட் ஷா என்றாலே அன்னிபெஸண்டுக்குப் பிடிக்காது. ஒரு விவாத சபையில் ஸோஷலிஸம்பற்றி ஷா பிரசங்கம் செய்யப் போனார். அந்தப் பிரசங்கத்தை எதிர்த்து, ஷாவின் வாதத்தைச் சின்னபின்னம் செய்துவிடுவது என்று தீர்மானம் செய்திருந்தாள் பெஸண்ட். அவளோ வாக்கு வல்லமை நிறைந்த பிரசங்கி. தமக்கு நிச்சயம் தோல்விதான் என்று ஷா நடுங்கிக்கொண்டிருந்தார். அவர் தம்மால் முடிந்த மட்டும் திறமையாகப் பிரசங்கத்தைச் செய்து முடித்தார். அவர் உட்கார்ந்ததும், எதிர்வாதம் செய்ய பெஸண்ட் எழுந்திருக்கவேயில்லை. வேறு யாரோ எழுந்து எதிர்வாதம் செய்தார். பிறகு பெஸண்ட் எழுந்தாள். எழுந்து என்ன செய்தாள்? ஷாவின் வாதத்தைச் சின்னபின்னம் செய்வதற்குப் பதிலாக எதிர்வாதம் செய்தவர் பேச்சையே சின்னபின்னம் செய்துவிட்டாள். இதிலிருந்துதான் ஷாவுக்கும் பெஸண்டுக்கும் நட்பு ஏற்பட்டது.

—ஆரதி ஸேன்

படேலின் வருத்தம்

"யோக்கியமான மனிதரெல்லாம் மூடராயிருக்கிறார்கள்; கெட்டிக்காரரெல்லாம் அயோக்கியராக இருக்கிறார்கள். யோக்கியராயும் கெட்டிக்காரராயும் உள்ள மனிதர் எவரும் என்னோடு சேர்ந்து உழைக்க முன்வரமாட்டோம் என்கிறார்கள்" என்று ஒரு சமயம் சர்தார் படேல் சொன்னதாக எனக்கு ஞாபகம்.

—கே. என்., 'இந்தியா.'

காலேஜ் மாணவர் பெருமை

காலேஜில் தங்கள் பிள்ளைகளைப் படிக்க அனுப்பியிருக்கும் இரண்டு தகப்பனார்கள் பேசிக்கொண்டார்கள்.

ஒருவர்: என் மகனின் கடிதம் வந்தால், நான் உடனே அகராதியைத் தேடி ஓடவேண்டியிருக்கிறது.

மற்றவர்: உங்கள் பாடு தேவலை. என் மகனின் கடிதம் வந்தால, நான் பாங்கியை நாடி ஓடவேண்டியிருக்கிறது.

—'இந்தியா'

கொடிய விலங்குகளோடு பழகுவ தென்றால், சுலபமான காரியமா? உயிருக்கே துணியவேண்டும்.

சர்க்கஸ் நிபுணர் தாமு

★

சிங்கம், புலிகளைப் பழக்குவதில் மராட்டிய ஹிந்து ஒருவர்தான் இன்று அமெரிக்காவிலேயே தலை சிறந்த நிபுணராக விளங்குகிறார். அவரைப்பற்றிய இந்த விவரம், ரால்ப் எச். மேஜர் என்பவர் எழுதிய ஒரு கட்டுரையை ஆதாரமாகக் கொண்டது.

ஆறு அடி உயரமுள்ள ஒரு சர்க்கஸ் மேடை. அதில் ஒரு சிறுத்தை உட்கார்ந்திருந்தது. அதன் எதிரில் கோட்டும் சூட்டும் போட்டுக்கொண்டு கட்டுமஸ்தான ஓர் இந்திய வாலிபர் நின்றிருந்தார். அவருடைய கைகளில் ஒரு சிறு தடியும் சவுக்குந்தான் இருந்தன. திடீரென்று மின்னல் போல் அவர்மேல் பாய்ந்தது அந்தச் சிறுத்தை. இப்படி நேரும் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை. சிறுத்தையின் கூரிய நகம் அவருடைய கோட்டின் தோள்பட்டையில் பாய்ந்து விட்டது. வேடிக்கை பார்க்கக் கூடியிருந்த ஜனங்கள் எல்லாரும் பயந்து வீரிட்டார்கள்.

ஆனால் தாமு தோத்ரே என்ற அந்த வாலிபர் இந்த விஷயத்தில் நல்ல அநுபவமுள்ளவர். அவர் உடனே தம் காலைத் தூக்கி அந்தச் சிறுத்தையின் முன்னங் காலைப் பிடித்துக்கொண்டு அந்தரத்தில் தொங்கலானார். ஜனங்கள் திகைப்புடன் இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சட்டென்று ஏதோ கிழிகிற மாதிரி ஓசை கேட்டது. அந்த வாலிபரின் கோட்டு, தோள் பக்கம் கிழிந்து சிறுத்தையின் கையோடு வந்துவிட்டது; அவர் மட்டும் தொப்பென்று கீழே விழுந்தார்.

உடனே தம் கையில் இருந்த சவுக்கை எடுத்து வீசிக்கொண்டு, "துஷ்டப்பயலே, பழைய சிநேகிதன் என்பதைக் கூடவா மறந்துவிட்டாய்! ஜாக்கிரதை! இனிமேல் உன்னைச் சரியானபடி கவனித்துக் கொள்கிறேன், பார்" என்று அதை அதட்டினார்.

கூண்டை மூடிவிட்டு அவர் வெளியேறும்போது ஜனங்களின் உற்சாகத்தைச் சொல்லி முடியாது. கைதட்டிச் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். சற்று ஏமாந்திருந்தால் அவர் செத்திருக்க வேண்டும்! இந்த மாதிரி கொடிய மிருகங்கள் எப்போதும் ஒரு முன்னங்காலினால் இரையை அறைந்து விட்டுத்தான் இன்னொரு முன்னங்காலால் அதை இறுக்கிப் பிடிக்க வரும். அவைகளோடு பழகிப் பழகி இது தாமுவுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் சமாளித்துக் கொண்டார்.

மராட்டியரான தாமு தோத்ரே சிறுவயதில் இந்தியாவில் தம் சிற்றப்பாவின் சர்க்கஸில் பயிற்சி பெற்றவர். அவர் இரண்டாம் உலக மகாயுத்தத்துக்கு முன் அமெரிக்காவுக்கு வந்தார். இப்போது அங்கே உள்ள ரிங்கிலிங் ஸர்க்கஸ் கம்பெனியில் அவர் ஒரு முக்கியஸ்தர். கொடிய விலங்கு

களைப் பழக்குவதில் அமெரிக்காவி லேயே தலை சிறந்தவராக விளங்கு கிருர். இப்போது அவருக்கு வயது நாற்பத்தேழு ஆகிறது. அந்தச் சவுக்கையும் ரப்பர் பிடி போட்ட சிறுதடியையும் தவிர, எந்த ஆயுத மும் அவர் உபயோகிப்ப தில்லை.

திறந்திருக்கும் புலி சிங்கக் கூண்டுகளின் எதிரே அவர் நிர்ப் பயமாகச் சிரித்துக்கொண்டு நிற் பதைப் பார்க்கவேண்டுமே! இந்த விலங்குகளோடு அவர் ஹிந்துஸ்தானியிலாவது இங்கிலீஷி லாவது பேசுகிருர். "பேடா (குழந்தை)" என்று செல்வமாக அழைக்கிருர். "பைட்டோ" என்ற தும் அவை உட்காருகின்றன. "சலோ" என்றதும் ஜம்மென்று நடக்க ஆரம்பிக்கின்றன. அவர் சொல்கிறபடியெல்லாம் கேட் கின்றன. அவ்வளவு நன்ருகப் பழக்கியிருக்கிருர்.

ஒருசமயம் இந்தியாவில் அவர் ஒரு பெரிய கூடாரத்தில் இப்படிச் சர்க்கஸ் நடத்திக்கொண் டிருந் தார். அப்போது ஒரு நாள் பட் டென்று விளக்குகளெல்லாம் அணைந்து விட்டன. இருட்டு என்ருல் கொடிய விலங்குகளுக்குப் பழைய வாசனை கிளம்பிவிடும். அப்புறம் எல்லார்பாடும் ஆபத்துத் தான்! தாமுவுக்கு முதலில் குப் பென்று வேர்த்தது. பிறகு எப் படியோ சமாளித்துக்கொண்டு அங்கிருந்த ஒரு நாற்காலியை மெதுவாகத் தூக்கிக்கொண்டார். ஜனங்கள் இருக்கும் பக்கமாகச் சற்றே ஒதுங்கி, "சீக்கிரம், விளக்கு, விளக்கு! யாராவது எனக்கு ஒரு விளக்கேற்றிக் கொடுங்கள்" என்று கூவினர். அருகில் இருந்த ஒருவர் உடனே தீக் குச்சியை எடுத்துப் பற்றவைத்தார். இப்படியே ஒவ் வொருவராக அங்கே இருந்த எல்லாரும் பற்றவைக்கவே ஆயிரக் கணக்கான தீக்குச்சிகள் மின்மினி போல் ஒளிர்ந்தன. நல்லவேளை, விலங்குகள் இருந்த இடத்தை விட்டு அசையவேயில்லை; அப் படியே கம்பீரமாக உட்கார்ந்திருந் தன.

"நீங்கள்தான் அப்பா, உண்மை யான சிநேகிதர்கள். இருட்டில் என்னை அறையாமல் விட்டீர் களே!" என்று அவைகளைத் தட்டிக் கொடுத்தார் தாமு.

சுதந்தரம் என்ருல் என்ன?

சுதந்தரம் என்ருல் சமூகம், மனிதன், ஆண் பெண், பணக்காரன், ஏழை யாவருக்கும் சுதந்தரம். இது அரசியல் உலகில் சுய ஆட்சி பெறுவது மட்டுமன்று. சமமான அந்தஸ்து, வகுப்பு வேற்றுமையையும் சமூக ஊழல்களையும் போக்குதல், கட்சிகளின் குறுகிய நோக்கங்களையும் முரட்டுத்தனத்தையும் ஒழிப்பது இவைகளைத்தான் குறிக்கும். ஆய்ந்து பாராதவர்கள் இந்த லட்சியத்தில் அவநம்பிக்கை கொண்டு இது நடக்காத கதை என்பார்கள். ஆனல் இதுதான் தேசத்தில் இப்பொழுது மூண்டிருக்கும் தாகத்தைத் தணிக்கச் சக்தி வாய்ந்தது. முழுவதும் விடுதலையடைந்த பாரதபூமியின் கற்பனை வடிவமே என் நெஞ்சு நிரம்பியுள்ளது. வாழ்க்கையின் ஒரே லட்சியம் என்ன? எல்லாப் பிணைகளிலிருந்தும் விடுபடுவதுதான். சுதந்தரத்துக்காகப் பாடுபடும் ஓர் ஆர்வமே நம் வாழ்க்கையின் இன்னிசை. பாரத தேசத்தினல் உலகமே பயனடைய வேண்டி யிருக்கிறது. சுதந்தரமே நம் ஜீவனம். இதற்காக வாழ்வைப் பணயம் வைப்பதே அழியாத கீர்த்தி தரும்.

—நேதாஜி

வேடிக்கை

கே. ஏ. அப்பாஸ்

ஆங்கிலத்தில் அழகாகச் சிறுகதைகள் எழுதியும், அரசியல் விமர்சனங்கள் செய்தும் கீர்த்திபெற்ற இந்திய முற்போக்கு எழுத்தாளர்களில் ஒருவர் இந்த ஆசிரியர். நாட்டின் தற்கால நிகழ்ச்சிகளையே ஆதாரமாகக் கொண்ட பிரத்தியட்ச சித்திரங்கள் இவருடைய கதைகள்.

பெரும் பஞ்சம் வந்தபோது, காட்டுக் களாக்காய், சப்பாத்திக் கள்ளிப்பழம்-கிராமத்திலே மிஞ்சியிருந்த ஒன்றிரு மரங்களின் தழைகள் கூடத்தான்-இந்த எல்லாவற்றையும் ஒவ்வொன்றாய்த் தின்றாயிற்று. பட்டினியால் வாடிய கிராமவாசிகள் இதன்பிறகு, ஊரை விட்டே கிளம்ப வேண்டியதாயிற்று. கிராமத்திலிருந்து பட்டணத்துக்கு, பாபு நடந்தே போனான். நூற்றுக்கணக்கான பேர்-ஆண்களும் பெண்களும் பால் குடிக்கும் பச்சைப் பாலகரும் கூடத்தான்-வழியிலேயே ஆவி சோர்ந்து விழுந்து செத்ததை அவன் கண்டான். ஆனால், பாபு சாகவில்லை. தான் உயிரோடிருக்கும் இந்த அற்புதத்தைக் கண்டு அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவன் யாருமற்ற அநாதைதானே; அதனால்தான் சாகவில்லைபோல் இருக்கிறது! அம்மா, அப்பா, மனைவி, குழந்தை குட்டி, பந்துக்கள் எவராவது இருந்தால், அவர்களைக் காப்பாற்ற வேண்டுமே என்று அவன் கவலைப்பட வேண்டும். இப்படி யாருமில்லை அவனுக்கு. அவன் எங்கே வேண்டுமானாலும் போகலாம். அவனைத் தடுப்பவர் யார்? இன்னும் போது விடியவில்லை. ஊரெல்லாம் தூக்கத்தில் இருந்தது. இதற்குள்ளே பாபு அட்சயபாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு கிளம்பிவிட்டான்! குப்பைத் தொட்டிகளில் ஏதாவது தீனி கிடக்கிறதா என்று முதல்முதலில் ஆராய்பவன் அவன்தான். தர்மக் கஞ்சி ஊற்றும் சாவடியைத் திறந்தவுடனே, 'கியூ' வரிசையில் எல்லாருக்கும் முந்திப் போய் நின்று, சுடச் சுட ஆவி பறக்கும் கஞ்சியை முதலிலே வாங்கிக்கொள்பவனும் அவனேதான்.

பஞ்சத்தில் அடிபட்ட கிராமவாசிகளில் அவனைத் தெரிந்தவரெல்லாம் ஒன்று சொல்வது வழக்கம்: "பாபுவா! ஒரு மைலுக்கு அப்பால் சோற்றின் வாசனை அடித்தாலும் போதுமே; அவன் மோப்பம் பிடித்துவிடுவான்" என்பார்கள். பட்டணத்தின் எந்த மூலையிலேயாவது எவரோ தர்மப் பிரபுவின் வீட்டில் சோறு போடுகிறார்கள் என்றால், உடனே அங்கே பாபுவைக் கட்டாயம் பார்க்கலாம்! எந்த வீட்டு ஜன்னலிலிருந்தாவது எச்சிற்கலையை வெளியே எறிந்தால், அது தரையை வந்து தொடுவதற்கு முன்பே அவன் அதை எட்டிப் பிடித்து விடுவான்! அவனுடைய பஞ்சேந்திரியங்களும்

காப்பிரைட்: ஸவுண்டு (ஆங்கிலம்; அக்டோபர் '50), பம்பாய்.

ஒரே ஒரு பொருளில் ஒரு முனைப்பட்டு லயித்திருந்தன - அதுதான் உணவு! ஒரு மைலுக்கப்பால் எங்கேயோ யாரோ எதையோ சமைத்தால், உடனே அவனுடைய நாசித் துவாரங்கள், வேட்டை நாயின் மூக்கைப்போல், படபட வென்று துடிக்கும்! தரையிலே ஒரு தான்யமணி கன்னங் கறேல் என்ற நள்ளிருளில் கிடந்தால்கூட அவன் கண்டுகொள்வான். தூங்கும் போதெல்லாம் பாலாறு, சோற்று மலை, வானளாவிய ரசகுல்லாக் கோபுரம் இவைகளையே அவன் கனவில் காண்பான். விழித்திருக்கும்போதெல்லாம் அடுத்த வேளைச் சோற்றுக்கு என்ன வழி செய்வது என்பதைப்பற்றிய சிந்தனையிலேயே ஆழ்ந்திருப்பான். ஒரு கவளச் சோற்றுக்காகப் பாபு செய்யும் தந்திரங்களைவிட அதிகக் கடினமாகவும் சூட்சுமமாகவும் எந்தச் சேனாதிபதியும் தம் ராணுவ தந்திரங்களைக் கடைப்பிடிக்க முடியாது; உணவின்மீது பாபு கொள்ளும் சிந்தனையை விடத் தீர்க்கமாக எந்தக் காதலனும் தன் காதலியைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருக்க முடியாது. பசி அவனிடம் உள்ள மற்றப் புலன்களை யெல்லாம் கொன்றுவிட்டது; அவனுடைய இதர இயற்கை இச்சைகளை யெல்லாம் மரத்துப் போகச் செய்து விட்டது. வீதியிலே அழகான ஒரு பெண் நடந்தால், 'ஆகா! இவளுடைய கன்னம் புதிதாய்ச் சுட்ட ரொட்டிபோல் உப்பியிருக்கிறது; சிவந்த மேனி மாதுளம்பழம் போல் இருக்கிறது. இவள் மாத்திரம் ஒரு பெண்ணாக இராமல் கம் என்று மணக்கும் ஒரு கைச்சோறும் ஆப்பிளும் ரசகுல்லாவுமாக இருந்தால், எப்படித் தின்னலாம்!' என்றே அவன் நினைப்பான்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் 'பஞ்சம் தீர்ந்தது' என்று சர்க்கார் அறிக்கை பிறந்துவிட்டது. பஞ்சத்தில் அடிபட்டுப் பட்டணத்தில் வந்து மொய்த்த கிராமவாசிகளையெல்லாம் அங்கிருந்து விரட்டி விட்டார்கள். ஆனால், கண்ணில் விளக்கெண்ணெய் போட்டுக்கொண்டு கவனித்த போலீஸாரின் பார்வைக்கு அகப்படாமல், பாபு மட்டும் தப்பித்துக் கொண்டான். அதன் பின்பு பல வருஷமாகியும் பட்டணத்தி



லேயே அவன் தங்கியிருந்தான். கிராமத்துக் குடியானவர்களின் மண் குடிசைகளில் தொடங்கிய பஞ்சம், இருண்ட மேகம் போலப் பரவிப் பட்டணத்து நடுத்தர வகுப்பினர் வீடுகளையும் வந்து இப்போது கவிந்துகொண்டது. தர்மக் கஞ்சிச் சாவடிகளையோ மூடிவிட்டார்கள். பிச்சை போடுவாரோ யாருமில்லை. இலையில் மிஞ்சிய எச்சில் சோற்றைக்கூட எவரும் குப்பைத் தொட்டியில் போடவில்லை. பாபு இனி என்னத்தைத் தின்பது?

இதுவரைக்கும் சோற்றுக்காக வேறு வழிகள் பலவற்றையும் கடைப்பிடித்துப் பார்த்துவிட்டான். வெட்கம் மானத்தை விட்டுப் பிச்சை எடுத்தாயிற்று; சாக்கடைகளையும் குப்பை மேடுகளையும் கிளறிப் பார்த்தாயிற்று. ஆனால் திருட்டுத் தொழில் மாத்திரம் புரிந்ததில்லை. குற்றம் புரிய மட்டும் அவன் மனம் ஏன்ன காரணத்தாலோ உடன்படவில்லை. அது கடவுளிடம் கொண்ட பயமோ, அல்லது போலீஸாரிடம் கொண்ட பயந்தானோ? எங்கேயாவது உணவைத் திருட அவன் எண்ணிய போதெல்லாம், ஏதோ ஒன்று வந்து அவனைத் தடுத்தது!

எதற்கும் ஓர் எல்லை உண்டு - ஒரு மனிதனின் மிகப்பலமான தார்மிக உணர்ச்சிக்குங்கூடத்தான். மூன்று நாள் படு பட்டினியாய்க் கிடந்த பிறகு, பாபுவின் மனச்சாட்சி கரைந்து மறைந்து போயிற்று. பசி வயிற்றைக் கிள்ளியது. அவனால் நிற்கவோ நடக்கவோகூட முடியாமல் கால்கள் தள்ளாடின. அவன் கண்கள் சாவின் முன்னறிகுறிபோல் பஞ்சடைந்தன. அவன் எப்படி உணவு தேடுவது? பிச்சை கேட்க உதடுகளை அசைக்கக்கூட அவனால் முடியவில்லை. அவன் மனத்திலே சிந்தனை எழவில்லை; இருதயத்திலே உணர்ச்சி தோன்றவில்லை. உலகமே பிரம்மாண்டமான ஒரு தோசைபோல உருமாறி அவன் பிரக்ஞையை வந்து மறைத்தது.

நாலாவது நாள் அவன் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டான். முதல் முதலில் எங்கே சந்தர்ப்பம் கிடைக்கிறதோ அங்கே எதையாவது திருடித் தின்பது என்பதே அந்தத் தீர்மானம். ஆனால், எங்கே? எப்படி? தன்னிடம் மிஞ்சியிருந்த பலத்தையெல்லாம் திரட்டிக்கொண்டு, கால்கள் தள்ளாட எழுந்து நின்றான்.

பட்டணத்திலே என்னவோ ஒரே குதூகலமாக இருந்தது. வீடுகள் மீதும் மாடிகள்மீதும் வானவில்லைப் போல் பல வர்ணக் கொடிகள் பறந்தன. எங்கே பார்த்தாலும் சிரிப்பும் களிப்பும் பாட்டும் நிறைந்த முகங்கள்! அழகழகாய் உடுத்த பெண்களின் கூட்டம்! இதெல்லாம் எதனால் என்று பாபுவுக்குத் தெரியவில்லை; அதைத் தெரிந்துகொள்ள அவன் ஆசைப்படவும் இல்லை. இது ஏதோ விசேஷ நாள் என்றுமட்டும் அவனுக்குத் தெரியும். விசேஷ நாட்களுக்கும் தீனிக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு என்பது அவன் அறிந்த உண்மை.

'எங்கே போகிறோம்? ஏன் போகிறோம்?' என்று அறியாமலே தன் கால்கள் போன வழியிலே அவன் நடந்தான். ஆனால், அவனுடைய கூர்மையான மூக்கு, பக்கத்திலே தீனி இருக்கிறது என்று மோப்பம் பிடித்துவிட்டது! கனத்துக் கவிந்திருந்த கண்ணிமைகளைத் திறந்தான். தன் கனவெல்லாம் உண்மையாக இருக்கக் கண்டான். தனக்கு எதிரே சிறிது தூரத்தில்

திறந்து கிடந்த ஒரு கதவுக்குப் பின்னே சாப்பாட்டு ராமர்களின் சொர்க்கம் ஒன்று இருக்கக் கண்டான். எத்தனை வித லட்டுகள், மிட்டாய்கள், பழங்கள், கறிகாய்கள், பானங்கள்!

அது வேறொன்றும் அல்ல; கிராண்டு ஹோட்டலின் சமையல் அறை. பாபுவின் மனம்தான் பசியால் மரத்துக்கிடக்கிறதே; அதற்கு இது தெரியவில்லை. இதைப்பற்றி அது கவலைப்படவுமில்லை. ஒரு கணமும் தயங்காமல், அந்த அறைக்குள்ளே அவன் நுழைந்தான்; கையை நீட்டினான்; ஒரு லட்டை எடுக்க முயன்றான். இந்தச் சமயத்தில் ஒரு மேஜைமீது பிரம்மாண்டமான கத்தி ஒன்றின் பக்கத்தில் ஒரு ரொட்டித் துண்டு கிடப்பது அவன் கண்ணில் பட்டது. ரொட்டி! அவன் உள்ளம் ஆனந்த பரவசம் கொண்டு துள்ளியது. "அடேடே! ரொட்டி!" மற்ற லட்டு மிட்டாய்களையெல்லாம் தொடுவதற்கு முன், அந்த ரொட்டித் துண்டை அவன் கையில் எடுத்துக்கொண்டான். புளித்த மாவின் இனிய மணம் அவன் மூக்கைத் துளைத்தது. "ரொட்டி! பலே! இந்த உலகத்திலே ரொட்டிக்கு இணையான அருமைப் பொருளும் வேறு ஒன்று உண்டா?"

ரொட்டியைக் கடிக்க அவன் வாயைத் திறந்தான். ஆனால் வாய் திறவாமலே மூடியிருந்தது. திடீரென்று விசித்திரமான, குரூரமான பல குரல்கள் கேட்டன. உள் வாயிற்படி வழியாகப் பல சமையற்காரர்களும் சிப்பந்திகளும் பிரவேசித்தார்கள். அவனை அறைந்தார்கள்; உதைத்தார்கள்; வெளியே இழுத்துப் போட்டார்கள்; கடைசியில் போலீஸ்காரனிடம் ஒப்படைத்தார்கள். போலீஸ்காரனுடன் அவன் போய்க்கொண்டிருக்கும்போது, சமையல்காரரில் ஒருவன், "திருட்டுப் பயல்! சுதந்தர விழாவுக்கு விருந்து சாப்பிட வந்து விட்டான்!" என்று சொல்வது பாபுவின் காதில் விழுந்தது. உடனே மற்றவரெல்லாம் 'கலீர்' என்று சிரித்தார்கள். ஏன் சிரிக்கிறார்கள் என்று பாபுவுக்குப் புரியவில்லை. இதில் என்ன வேடிக்கை? 'விருந்து' என்ற வார்த்தையின் அர்த்தம் அவனுக்குத் தெரியும். உணவைக் குறிக்கும் ஒரு சொல்லை உலகத்தின் எந்தப் பாஷையில் சொன்னாலும் அவன் அறிந்து கொண்டு விடுவான். ஆனால், 'சுதந்தரம்' என்றார்களே, அது என்ன? போலீஸ் காவலில் இருந்தபோது பல மணி நேரம் இந்தப் புதுமையான விசித்திர வார்த்தையின் அர்த்தம் என்னவாயிருக்கும் என்பதைப்பற்றியே அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

சலசல என்று ஒரு சத்தம் கேட்டது. வட்டமான தோசைபோல விளக்கொளி ஒன்று, கல் பாவிய சிறை அறைக்குள் விழுந்தது. இரும்புத்தாலம் ஒன்றை உள்ளே தள்ளி, "இதை எடுத்துக்கொள்" என்று யாரோ உறுமினார்கள்.

பாபு கீழே பார்த்தான். திடீரென்று அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. இடியிடி என்று சிரித்தான்.

"என்னடா இது! என்ன வேடிக்கையைக் கண்டுவிட்டாய்? ஏன் சிரிக்கிறாய்?" என்று கடுகடுத்த குரலில் கேட்டான் போலீஸ்காரன்.

'என்ன வேடிக்கை? ஏன் சிரிக்கிறாய்?' – பாபுவால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கக்கட கடகட வென்று மேலும் சிரித்தான்.

நடுநடுவே மூச்சுவிடச் சற்று நிற்கும்போதெல்லாம், கீழே தரையைப் பார்ப்பான்; மீண்டும் மாளாத சிரிப்புத்தான்.

"ஓகோகோ! இது ஒரு பெரிய பைத்தியம்" என்று தீர்மானித்துக்கொண்டு நகர்ந்தான் போலீஸ்காரன்.

ஆனால், பாபு மேலும் மேலும் சிரித்து, போலீஸ் ஸ்டேஷனின் கல் சுவர்களையெல்லாம் குலுங்கச் செய்துவிட்டான். அவனால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. ஏனென்றால், கீழே இரும்புத்தாலம் ஒன்று கிடக்கிறது; அந்தத் தாலத்திலோ, காய்ந்து வறண்ட பாதி ரொட்டித் துண்டொன்று அல்லவா கிடக்கிறது!

குதிரையை விழுங்கினவன்!

ஒரு மனிதனுக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டது. அவனை மன நோய் வைத்தியர் ஒருவரிடம் அழைத்துச் சென்றார்கள்.

"அப்பா, என்ன தொல்லை உன் மனத்தை வாட்டுகிறது?" என்று அவர் கேட்டார்.

"நான் ஒரு குதிரையை விழுங்கிவிட்டேன். அது என்னடா என்றால் என் வயிற்றில் தொந்தரவு செய்துகொண்டேயிருக்கிறது" என்றான் நோயாளி.

வைத்தியர் எத்தனையோ தந்திரங்களைச் செய்தும், அவனுடைய மனப்பிரமையை மாற்ற முடியவில்லை.

"சரிதான். உன் வயிற்றை ஆப்பரேஷன் செய்து குதிரையை வெளியே எடுத்துவிடுகிறேன்" என்றார்.

பிறகு, அவனுக்கு மயக்க மருந்து கொடுத்தார். 'ஆப்பரேஷன்' செய்ததற்கு அடையாளமாக அவன் வயிற்றிலே கட்டுக் கட்டினார். ஒரு பெரிய குதிரையை அந்த அறையிலே கொண்டு வந்து நிறுத்தினார்.

நோயாளிக்கு மயக்கம் தெளிந்தது.

"இதோ பார், அப்பா. இதோ நிற்கிறது உன் வயிற்றிலிருந்த குதிரை. நான் எடுத்துவிட்டேன்" என்றார் வைத்தியர்.

நோயாளி அந்தக் குதிரையை ஒரு கணம் ஏற இறங்கப் பார்த்தான். பிறகு, தலையை ஆட்டியபடி, "ஊஹூம்; இது இல்லையே நான் விழுங்கிய குதிரை. இது வெள்ளையாக இருக்கிறதே! சிவப்புக் குதிரையை அல்லவா நான் விழுங்கினேன்" என்றான்.

—'லைப் டைஜெஸ்ட்'

ஞானத் தவிப்பு

ஒன்றை மாத்திரம் நினைவில் வை. உனக்கு ஞானம் வேண்டுமா? அப்படியானால், நீ தண்ணீருக்குள்ளே மூழ்கியிருக்கும்போது, காற்றுக்கு எவ்வளவு தவிப்பாயோ அவ்வளவு தவிப்புடன் ஞானத்துக்கு ஆசைப்படு. அப்போதுதான் அது உனக்குக் கிட்டும்.

—ஸாக்ரடீஸ்

மனத்தத்துவம்

ரெவரண்ட் சத்திய சாமுவேல்

★

மனிதர்களின் மனம் ஆழுங் காணமுடியாத கடலைப் போன்றது. மனத்தத்துவ ஆராய்ச்சியிலே எத்தனையோ நிபுணர்கள் எத்தனையோ முறைகளை அநுஷ்டித்திருக்கிறார்கள். நவீன ஆராய்ச்சி முடிவுகளின் சாரத்தை இந்த நூலிலே மிகவும் அழகாக ஆசிரியர் தந்திருக்கிறார்.

★

காப்பிரைட்: மனோதத்துவமும் குடும்ப வாழ்க்கையும் (தமிழ்ப் புத்தகம்). விலை ரூபாய் **1-12-0.** பிரசுரித்தவர்: ரெவரண்ட் சத்திய சாமுவேல், பிஷப் சார்ஜெண்ட் போதனா முறைப் பாடசாலை பிரின்ஸிபால், பாளையங்கோட்டை.

மனத்தத்துவம்

மனமும் அதன் மர்மமும்: மனம் என்பது என்ன? இது மிகப் பழமையான பிரச்னைகளில் ஒன்று. வருங்காலத்தில் ஒருவேளை இதற்குச் சரியான விடை கண்டுபிடிப்பார்களோ, என்னவோ; இப்போது அதைப் பற்றித் தெரிந்தது இவ்வளவுதான்: 'மனம், ஸ்தூலப் பொருள் அல்ல; சூட்சமப் பொருள். சூட்சும மனத்துக்கும் ஸ்தூல உடலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.'

உடலின் ஓர் அம்சமான மூளையின் மூலமாகத்தான் வெளி உலகத்தோடு மனம் சம்பந்தப்படுகிறது. இதனால் மனமும் மூளையும் ஒன்றுதானோ என்று சிலர் நினைக்கலாம். இது தவறு. வீணை வேறு; அதன் நரம்புகளைத் தன் மெல்லிய விரல்களால் தடவி இன்னிசையை எழுப்புகிற பெண் வேறு. இதே போலத்தான் மூளையும் மனமும்.

மூளை நசித்துப் போன பின்பு கூட மனம் இருக்கிறது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஓர் ஆச்சரிய சம்பவம் நிகழ்ந்தது. போர்வீரன் ஒருவனுக்கு விபத்து நேர்ந்தது. அவனுடைய மண்டை ஓடு கழன்று மூளை வெளியே விழுந்துவிட்டது. அதற்குப் பிறகும் சில விநாடி நேரம் அவன் பேசிக்கொண்டிருந்தான். ஆகவே, மூளை அழிந்த பின்னும் மனம் வேறு ஏதோ ஓர் ஆதாரத்தின் மூலம் வேலை செய்வதாகத் தெரிகிறது.

ஆனால், பொதுவாக, வெளியுலக விஷயங்களெல்லாம் நரம்புக் கொடிகளின் மூலமாகவே மூளைக்கு எட்டுகின்றன. கண், காது, மெய், நாக்கு, மூக்கு முதலிய உடம்பு உறுப்புக்கள் அனைத்தையும் அந்த நுண்மையான நரம்புக் கொடிகளே மூளையோடு இசைக்கின்றன. அவை இரண்டு வகைப்படும். வெளியுலகச் செய்திகளை மூளைக்குக் கொண்டு செல்லும் புலன் நரம்புகள் ஒரு வகை; உடலுறுப்புக்களுக்கு மூளை கொடுக்கும் விடையை எதிர்த் திசையில் கொண்டு செல்லும் கட்டளை நரம்புகள் மறுவகை. மூளை ஒரு தந்தியாபீஸைப்போல் இருக்கிறது. உலகத்தின் பெரிய தந்தியாபீஸ் எதையும் விட அதிகமாக அது வேலை செய்கிறது. ஆனால், தன் மூலமாகப் போய்வரும் செய்திகளுக்கெல்லாம் மூளைக்கு அர்த்தம் தெரியாது. அதைத் தெரிந்துகொள்வது மனமே.

நம் கையால் தொடக்கூடிய - மூக்கால் மோந்து பார்க்கக்கூடிய - ஸ்தூலமான வெளியுலக ரோஜாப் புஷ்பம், மனத்தில் ஒரு சூட்சும உருவமாக - மனப்படமாக - மாறுகிறது. உடல் உறுப்புக்களின் நரம்புச் சலனத்தை அர்த்தப்படுத்தி, 'இது ரோஜாப் புஷ்பம்' என்றும், 'இது நீலாம்பரி ராகம்' என்றும் ஒவ்வொன்றுக்கும் பெயர் கொடுத்து அறிகிற மர்ம சக்தியே மனம்.

நம்மைச் சூழ்ந்துள்ள வெளியுலக விஷயங்களை ஐம்புலன்களும் மூளையில் பதிக்கின்றன. இந்தப் பதிவுகளே மனத்துக்கு அடிப்படை ஆகின்றன. உலகம் கோடானுகோடி அணுக்களின்

சேர்க்கையே என்று அறிவோம். இதே போல, எண்ணிறந்த புலப் பதிவுகளின் தொகுதியே மனம். இந்தப் ப்திவுகளைக் கொண்டே, அறிவு, உணர்வு, செயல், பண்பு இவையெல்லாம் நம்மிடம் அமை கின்றன. மனத்துக்கு மூளை மூலப்பொருள்களைக் கொடுக்கிறது. அவைகளை வைத்துக்கொண்டு மனம் வேலை செய்கிறது.

மின்சாரத்தை நம் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால், அது சில திட்டங்களுக்கு உட்பட்டுத் தொழிற்படுவதைக் காண்கிறோம். அந்தத் திட்டங்களை ஆராய்ந்து அறிந்துகொண்டு மின்சாரத்தை ஏவல் கொள்கிறோம். மனம் இன்னது என்பதையும் இதேபோலத்தான் நம்மால் திட்டமாகச் சொல்ல முடியவில்லை. என்றாலும் அது சில முறைகளுக்கு உட்பட்டு வேலை செய்வதைக் காண்கிறோம்.

மனத்தின் இயல்பையும் அது வேலை செய்யும் விதத்தையும் அறிவதற்கு இரண்டு உபாயங்கள் உண்டு. ஒன்று, தன் மனத்தை ஆராய்வது; மற்றது, பிறர் மனத்தை ஆராய்வது. மனத்தத்துவ பரிபாஷையில் அவைகளுக்கு உள்நோக்கு முறை என்றும், புறநோக்கு முறை என்றும் பெயர்.

ஒரு மனத்தத்துவ சாஸ்திரி, மற்றவர்களின் மனத்தைச் சில பரீட்சைகளின் மூலம் ஆராய்ந்து முடிவு கட்டுகிறார். இருபது வருஷங்களுக்கு முன்பு, இந்த முறைகளில் ஒரு சிலருக்கு மட்டுமே நம்பிக்கை இருந்தது. இப்போதோ கல்வி, வைத்தியம், கைத்தொழில் முதலிய பல துறைகளிலும் இந்த முறையைப் பயன்படுத்துகிறார்கள். ஆயினும், இதில் பிழையே இராது என்று சொல்ல முடியாது.

தன் மனத்தை ஆராயும் மற்ற முறையில், ஒரு மனத்தத்துவ சாஸ்திரி தம் சொந்த விருப்பு வெறுப்புக்களைச் சலித்துப் புடைத்து ஆராய்ந்து அநுபவம் பெறுகிறார். இதிலும் கஷ்டம் இருக்கிறது. தன் மனத்தையே உற்றுப் பார்க்கும் மனத்தத்துவ சாஸ்திரி, அதைப் பற்றிச் சரியான தீர்ப்புக் கூற முடியாது. தவிர, மனத்தின் இயக்கம் கடல் அலைபோல் எழும்பி மடிகிறது. மனத்தின் ஒவ்வோர் எண்ணமும், முந்திய எண்ணங்கள் பலவற்றிலிருந்து தோன்றிப் பிந்திய எண்ணங்கள் பலவற்றோடு ஐக்கியம் ஆகி விடுகிறது. கடல் அலைகளில் ஒன்றைத் தனியாக எடுத்து ஆராய முடியாது; இப்படித்தான் மனத்தின் ஒரே ஓர் எண்ணத்தைத் தனிப்படப் பிரித்து ஆராய முடியாது. அலையை நாம் பார்த்துக்கொண் டிருக்கும்போதே அது மாறுவது போல, நம் எண்ணமும் மாறி விடும். ஆகவே, நாம் ஒரு காலும் கண்டுகொள்ள முடியாத 'இடங்கள்' நம் மனத்துக்குள் இருக்கவே இருக்கும்.

இங்கே மனத்தின் பகுதிகளைப் பார்க்கலாம். மன அமைப்பைப் பிரக்ஞை, உப பிரக்ஞை, நிர்ப் பிரக்ஞை என்று மூன்று அம்சங்களாக மனத்தத்துவ சாஸ்திரிகள் பிரிக்கிறார்கள். பிரக்ஞை மண்டலத்தின் கீழே உப பிரக்ஞை மண்டலம் இருக்கிறது. இதனிடமிருந்துதான் பழைய ஞாபகங்களைப் பிரக்ஞைக்குக் கொண்டு வருகிறோம். நேற்றைக்கு என்ன குழம்பு சாப்பிட்டோம் என்பதை இப்போது நாம் நினைத்துக்கொண் டிருக்கவில்லை. அந்த எண்ணம்

உப பிரக்ஞையில் இருக்கிறது. நம் நினைவுக்கு - பிரக்ஞைக்கு - அதைக் கொண்டு வருவது எளிதான காரியமே. உப பிரக்ஞைக்கும் கீழே நிர்ப் பிரக்ஞை மண்டலம் ஒன்று இருக்கிறது. இந்த மூன்று மண்டலங்களும் இடை வெளி பெற்றுத் தனித் தனியாகப் பிரிந்திருக்கவில்லை; ஒன்றோடொன்று கலந்தே இருக்கின்றன. நிர்ப் பிரக்ஞை மண்டலம் என்பது, மனத்தின் இருண்ட பிரதேசம். ஆதி மநுக் குலத்தின் இயற்கை ஊக்கங்களின் வழியாக மனச் சக்தி ஒன்று பெருக்கெடுத்து வருகிறது. அதுவே இன்றைய மனிதனின் மனப் பண்புக்கு அஸ்திவாரம். அநாதியான இந்த இயற்கை ஊக்கங்கள், நாம் மறந்து விட விரும்பும் நம் பழைய அநுபவங்கள், நம் குழந்தைப் பருவத்து அச்சங்கள் இவையெல்லாம் மேற் சொன்ன நிர்ப் பிரக்ஞை மண்டலத்தில் அலை மோதிக்கொண்டு கிடக்கின்றன. இவை நம் பிரக்ஞை அல்லது உப பிரக்ஞையின் ஆதீனத்துக்கு உட்பட்டவை அல்ல. மனத்தின் பிரக்ஞை - உப பிரக்ஞைப் பகுதிக்கும் நிர்ப்பிரக்ஞைப் பகுதிக்கும் குறுக்கே மறுப்பதிகாரம் ஒன்று இருக்கிறது. நிர்ப்பிரக்ஞையில் வாழும் பழைய எண்ணங்களும் உணர்ச்சிகளும் பிரக்ஞை - உப பிரக்ஞை மண்டலத்தில் தலை தூக்காதபடி தட்டி மடக்குவதே இந்த மறுப்பதிகாரத்தின் வேலை. நாட்டின் சமுதாயத் திட்டங்கள், சமயச் சட்டங்கள், சன்மார்க்க விதிகள், பொதுஜன அபிப்பிராயங்கள் இவைகளை அநுசரித்து நடப்பதே மனிதனுக்கு அழகு என்று நாம் கருதுகிற மனப்பான்மைதான் இந்த மறுப்பதிகாரம்.

நிர்ப்பிரக்ஞை மண்டலத்தில் ஆழ்ந்து கிடக்கும் விபரீதக் கருத்துக்களோடு பிரக்ஞை மண்டலம் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்புவதில்லை. ஆனால் அந்தக் கருத்துக்கள் தாமாகவே கிளம்பிப் பிரக்ஞைக்கு வந்து மனிதனை ஆட்கொள்ளத் துடிக்கும். அந்தச் சமயங்களில் மறுப்பதிகாரம் ஒரு போலீஸ் படைபோல் இருந்து, அந்தக் கட்டுக்கு அடங்காத சிந்தனைகளை அடக்க முயல்கிறது. நிர்ப்பிரக்ஞையில் குறும்புகள் அதிகமாகும் போது, அவைகளை அடக்கும் மறுப்பதிகாரப் படை வலுவும் அதிகமாக வேண்டும். அப்போது மனத்தின் சக்தி அதிகமாக விரயமாவதால், மனத்தின் சகஜமான வேலைகள் குறைவடைகின்றன. இதுதான் மூளைக் களைப்பு, நரம்புத் தளர்ச்சி முதலிய நோய்களுக்குக் காரணம். ஹிஸ்டீரியா, ஜன்னிப் புலப்பம், பைத்தியம் முதலிய சந்தர்ப்பங்களில் மறுப்பதிகாரத்தின் சக்தி தளர்ந்து விடுகிறது; நிர்ப்பிரக்ஞை மண்டலம் ஆழ அடங்கிக் கிடப்பதற்குப் பதிலாக மேலெழுந்து தானே ஆட்சி செய்ய ஆரம்பித்து விடுகிறது. இதை ஒரு வகை மனப் புரட்சி என்று சொல்லலாம்.

பொதுவாக, பெரும்பாலோருடைய மனத்தில் மறுப்பதிகாரம் சக்தியுடன் ஆட்சி செய்கிறது; அதனால் நிர்ப்பிரக்ஞை மண்டலத்தில் உள்ள உணர்ச்சிகள் தலையெடுப்பதில்லை என்றாலும், 'அவை அடியோடு ஒடுங்கிப் போய்விட்டன; மறுபடி ஒருபோதும் தலையெடுக்க மாட்டா' என்று சொல்ல முடியாது. சாதாரண மனிதன் ஒருவனுடைய அநுபவத்தில் அவை ஏதாவது ஓர் உபாயம் செய்து மேலெழும்புவதைக் காணலாம்.



A. Focus of Consciousness=பிரக்ஞை முகப்பு.

$A^1 - A^2$. Field of Conciousness=பிரக்ஞை மண்டலம்.

B. Strata of groups and association of ideas-Sub-consciousness = உபபிரக்ஞை மண்டலத்திலுள்ள எண்ணங்களின் தொகுதிகள்.

C. Mental energy welling up through the great primitive instincts=ஆதி மநுக்குலத்தின் இயற்கை ஊக்கங்களின் வழியே பெருக்கெடுக்கும் மனச்சக்தி.

D. Abode of undesired memories, feelings and desires repressed by censor - The mental under world = மறுப்பதிகாரத்தினால் அடக்கிவைக்கப்பட்ட வேண்டாத நினைவுகள், உணர்ச்சிகள், விருப்பங்களின் உறைவிடம் - மனத்தின் பாதலம்.

கதவையும் தாழிடாமல் காவலாளியும் தூங்கிவிட்டால், வீட்டுக்குள்ளே கள்ளன் புகுந்துவிடுவான் என்பது நமக்குத் தெரியாததல்ல. நாம் தூங்கும்போது மறுப்பதிகாரம் சில சமயம் இந்த மாதிரியே அசந்திருக்கும். அந்த வேளை பார்த்து, பழைய விபரீதக் கருத்து ஒன்று ஏதாவது ஒரு மாறு வேஷம் பூண்டு கனவாக நிர்ப்பிரக்ஞையிலிருந்து வெளியேறுகிறது. ஆகவே, நாம் காணும் ஒரு கனவின் அடிப்படையான உண்மையை மனத்தத்துவ நிபுணர் எளிதாக வியாக்கியானம் செய்துவிடுவார். நம்முடைய மனத்தின் ஆழத்தில் நமக்கு என்ன தொல்லை இருக்கிறது என்று அவருக்குத் தெரியும். வேறு ஒரு விதத்திலும் நம்முடைய பழைய எண்ணங்கள் தலை தூக்குவதுண்டு. நாற்காலி அல்லது கட்டிலில் சாய்ந்து நாம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தால், நிர்ப்பிரக்ஞை உணர்ச்சிகளின் போராட்டத்துக்கு இணங்கி மறுப்பதிகாரம் சில சமயம் சிறிது தாட்சிண்ணியம் காட்டுவதுண்டு. அப்போது விபரீதமான பகற் கனவு ஏற்படுகிறது. இன்னொரு விதமும் உண்டு. அணையிட்டு வெள்ளத்தைத் தடுக்கிறோம்; பெரு மழை பொழிந்து பெரு வெள்ளம் வந்தால், தண்ணீரெல்லாம் அணை கடந்து பாய்ந்து நாசம் செய்து விடுகிறது. நிர்ப்பிரக்ஞையில் புதைந்து கிடக்கும் எண்ணங்கள் சில சமயம் இதைப் போலவே திரண்டெழுந்து, மறுப்பதிகாரத்தை மிஞ்சி அட்டூழியம் செய்கின்றன. அப்போது நாம் அத்து மீறி நடக்கிறோம்; தகாத செயல்களைச் செய்துவிடுகிறோம். பிறகு அடங்கி அமர்ந்து விடுகிறோம். மறுப்பதிகாரம் தான் இழந்த அதிகாரத்தை இதன் பிறகே மீண்டும் கைப்பற்றி முன் போலச் சக்தியுடன் வேலை செய்யத் தொடங்குகிறது.

ஆகவே, ஒருவன் ஓர் ஒழுங்கீனம் செய்தால், நாம் அதன் மூல காரணத்தைக் கண்டு, அதற்கு ஏற்ற பரிகாரத்தைத் தேடவேண்டும். அவனுடைய நடத்தை, உடல் இயக்கம், கனவுகள் இவைகளைக் கவனித்தால், அவன் எப்படிப்பட்ட எண்ணங்களை அடக்கி வைத்திருக்கிறான் என்பதைக் கண்டுகொள்ளலாம்.

ஓர் உதாரணம்: தானும் தன் கணவனும் அத்தியந்த விசுவாசத்துடன் இருப்பதாக, ஒருத்தி பன்னிப் பன்னிப் பேசுகிறாள். இதை மற்றவர் உண்மையென நம்புகிறார்கள். ஆனால் மனத்தத்துவ நிபுணர் வித்தியாசமாக எண்ணுகிறார். இதற்கு அவர் நாலு காரணங்கள் சொல்லுகிறார்: (1) ஒரு வாரத்துக்கு முன் ஊருக்குப் போன கணவன் அன்று திரும்பி வருகிறான்; அப்போது இவள் அவனை எதிர்பார்த்து வாசலில் நின்று வரவேற்க மறந்துவிடுகிறாள். (2) அவனுக்கு ஏதோ விபத்து நேர்வதாகக் கனவு காண்கிறாள். (3) தன் நிச்சயதாம்பூலப் புடைவையைத் தங்கை உடுத்திக் கிழிக்கும்படி விடுகிறாள். (4) தன் கணவனிடம் மிக்க சிரத்தையுடன் தான் நடந்துகொள்வதாக அமிதமாக அளக்கிறாள். இந்த நிகழ்ச்சிகள் முறையே இவளுடைய அலட்சியம், உள் மனத்தில் புதைந்திருக்கும் விருப்பம், அலட்சியம், உண்மை உணர்ச்சியை மறைக்கும் முயற்சி இவைகளையே புலப்படுத்துகின்றன. சில காலம் செல்கிறது. இவள் இன்னொரு புருஷனிடம் காதல் கொண்டிருக்கும் விஷயம்

அம்பலமாகி விடுகிறது. ஆகவே, தன்னறிவோடு பேசும் பேச்சையும் செய்யும் செயலையும் விட, நிர்ப் பிரக்ஞையிலிருந்து வெளிப்படும் குறிப்புக்களே ஒருவருடைய உண் மையான இயல்பை உள்ளது உள்ள வாறு காட்டி விடுகின்றன.

தந்திரமாக மனிதனை ஏமாற்றி விடும் விசித்திர இயல்பு ஒன்று மனத்துக்கு உண்டு. நாம் ஒரு தப் புச் செய்துவிடுகிறோம். அதனால் நமக்கு மனவேதனை உண்டாகிறது. இந்த வேதனையிலிருந்து தப்பித் துக்கொள்வதற்காக, 'நாம் செய் தது சரிதான்' என்று ஒரு நியாயத்தைக் கற்பிதம் செய்து கொண்டு, மனத்தைச் சமாதானப் படுத்துகிறோம். சிலர் ஒரு தப்புச் செய்துவிட்டால், அதன் உண் மைக் காரணம் அவர்களுக்கே தெரிவதில்லை; போலிக் காரணங் களைச் சொல்லிக்கொண் டிருப்பார் கள். இதன் காரணம் மற்றவர் களை ஏமாற்றும் நோக்கம் அல்ல; தாங்களே அறியாததுதான்.

இங்கே இரண்டு உதாரணங் களைப் பார்க்கலாம். சிறுவர்களுக்கு வேதபாடம் கற்பித்துக்கொண் டிருந்தான் ஒரு வாலிபன். இவன் ஒருநாள் பாடசாலைத் தலைவரிடம் வந்தான். "நான் நாஸ்திகக் கொள்கையில் இறங்கிவிட்டேன். நெடுங்காலம் அமைதியாக ஆராய்ந்து பார்த்தேன். கடவுள் ஒருவர் இருக்க முடியாது என்று துணிந்து விட்டேன்" என்றான். தனது நுட்பமான ஆராய்ச்சியே இந்த முடிவுக்குக் காரணம் என்று தானும் உண்மையாகவே இவன் நம்பினான். ஆனால், மனத்தத்துவ நிபுணர் ஒருவர் இவனுடன் சில முறை சம்பாஷித்ததில், உண்மை வேறு என்று கண்டார். இவ னுக்கு ஒரு பெண்ணிடம் காதல். இருவருக்கும் மணம் முடிக்க நிச்சயமான பிறகு, அவள் வேறொரு பையனோடு ஓடிவிட்டாள். இவன் நாஸ்திகனாகிவிட்டதற்கு அதுவே உண்மைக் காரணம். ஆனால் அதைப் பற்றிச் சிந்திக்க இஷ்டமில்லாமல் தன்னையும் அறியாமலே வேறு சில தர்க்க நியாயங்களை இவன் கண்டு பிடித்துக்கொண்டான்.

தன் வீட்டுக்குக் காவி நிறம் அடிக்கக்கூடாது; அது தனக்குப் பிடிக்கவில்லை என்று ஒருவன் சொன்னான். அதன் உண்மைக் காரணத்தை மனத்தத்துவ சாஸ்திரி ஆராய்ந்தார். அவன் சிறுவயதில் படிக்கும் காலத்தில் தலைமை ஆசிரியருடைய அறைக்கு அடிக்கடி 'யாத்திரை' போவான். அங்கே தன் கைகள் சிவப்பேறும் படி அடிவாங்கும்போது கண்ட காவி நிறத்தை மறுபடியும் பார்க்க அவன் மனம் ஒப்பவில்லை!

நமக்கு வேதனை தரும் விஷயங் களிலிருந்து தப்பித்துக்கொள்ள மனம் மற்றொரு முறையையும் கை யாளுகிறது. அதுதான் ஞாபக மறதி. ஓர் ஆள் அல்லது ஊரின் பெயர் நமக்கு ஏன் மறந்து போக வேண்டும்? நாம் நாணும்படியாக ஓர் அவமானம் அவனால் அல்லது அங்கே நேர்ந்திருக்கும். இதுவே காரணம். நமக்குக் கிட்டாத ஆசைகளை எண்ணாமல் நிம்மதி யாக இருக்கவும் மனம் இந்த முறையைக் கையாளுகிறது. மனத் தின் பிரக்ஞை மண்டலத்திலிருந்து இந்த எண்ணங்களைத் துரத்திவிட முயல்கிறோம்; துரத்தியும் விடுகி றோம். ஆனால், இவை பின்னால் எக்காலத்திலும் தொழிற்படாமல் அழிந்து விடுவதில்லை. மறைமுக மாக வெளிப்படுகின்றன; கன

விலே இவைகளைக் காண்கிறோம். எல்லாக் கனவுகளும் இப்படிப் பட்டவைதான் என்று சொல்லிவிட முடியாது. ஆயினும் பல கனவுகள் இந்த மாதிரிதான்.

சொற்களின் உதவியால் மனிதனின் மனத்தை ஆராய்கிற முறை ஒன்றை மனத்தத்துவ நிபுணர்கள் கையாளுகிறார்கள். அதையும் இங்கே குறிப்பிடுவது பொருந்தும். ஒருவன் தன் மனம் என்ன விஷயத்தில் ஈடுபட்டிருக்கிறது என்பதை மறைக்க விரும்பினால் அதைக் கண்டு பிடித்துவிடலாம். நாம் சில சொற்களை ஒவ்வொன்றாக அவனிடம் சொல்லவேண்டும். இந்த ஒவ்வொரு சொல்லுக்கும் தொடர்புடைய மற்றொரு சொல்லை அவன் சொல்லும்படி கேட்க வேண்டும். நம் சொற்கள் 'தூண்டுதல் சொற்கள்.' அவன் பதில்கள் 'துலங்கல் சொற்கள்.' அவன் நமது தூண்டுதல் சொல்லைக் கேட்டதும், அவனுடைய மனத்தில் எப்படிப்பட்ட 'பிரதிக்ரியை' உண்டாகிறது என்பது இதனால் வெளிப்படும். நம் தூண்டுதல் சொல்லைக் கேட்டதும் தன் மனத்தில் இயல்பாக எழும் துலங்கல் சொல்லைச் சொல்லாமல் அவன் மறைத்தாலுங்கூட அப்போதும் அவனுடைய மனநிலையை நாம் அறிந்துகொள்ள முடியும். இப்படி மறைப்பவன் சட்டென்று பதில் சொல்லாமல் சிறிது திகைப்பான். உள்ளதை அவன் மறைக்கிறான் என்று நமக்குத் தெரிந்துவிடும். ஒரு மனிதனை இந்த முறையில் விசாரித்து ஆசிரியர் ஜங் என்பவர் உண்மையைக் கண்டு பிடித்தார். அந்த விசாரணையில் அவர் கையாண்ட சொற்களும் அவன் பதில்களும் இவை:

	தூண்டுதல் சொல்	துலங்கல் சொல்	நேரம் செக்கண்டு
1.	தலை	மயிர்	1.4
2.	பசுமை	புல்வெளி	1.6
3.	தண்ணீர்	ஆழம்	5.0
4.	கம்பு	கத்தி	1.6
5.	நீளம்	மேஜை	1.2
6.	கப்பல்	அமிழ்ந்தது	3.4
7	கேள்வி	விடை	1.6
8	நூல்	நெசவு	1 6
9	பகை	நட்பு	1.4
10.	ஏரி	தண்ணீர்	4.0
11.	நோய்	சுகம்	1.8
12	மை	கறுப்பு	1.2
13	நீந்து	நீந்தலாம்	3 8

அந்த மனிதன் மூழ்கி மடிந்து போக எண்ணியிருந்தான். ஆனால் அதை மறைக்க முயன்றான். என்றாலும் ஆசிரியர் ஜங் உண்மையைக் கண்டுகொண்டார்.

ஒரு குழந்தையின் பிரக்ஞைக்கு அப்பால் அந்தரங்கத்தில் என்ன அச்சங்களும் விருப்பங்களும் இருக்கின்றன என்று அறிய வேண்டுமானால், 'ஒரு ரூபாயின் வாழ்க்கை' என்பதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதச் சொல்லலாம். ரூபாயின் வாழ்க்கையில் உண்டாவதாகக் குழந்தை எழுதும் பயங்கள், சோகங்கள், வீரச் செயல்கள் இவையெல்லாம் அந்தக் குழந்தையின் உள்ளத்தில் உள்ள சொந்த உணர்ச்சிகள் என்று நாம் தீர்மானித்து விடலாம்.

ஒருவனுடைய மறதி, பேச்சில் உள்ள திக்கல், எழுத்தில் உள்ள அடித்தல் - திருத்தல் இவைகளிலிருந்துகூட, மனத்தத்துவ சாஸ்திரி அவனுடைய பிரக்ஞைக்கு அப்பால் உள்ள மர்மங்களைக் கண்டுபிடித்து விடுவார். நமக்கு வந்துள்ள பல கடிதங்களை நாம் தீயில் போடுவதாக வைத்துக் கொள்வோம். அப்போது நமக்குப் பிடிக்காதவர்களின் கடிதங்களை

உற்சாகத்துடன் போடுவோம்; பிடித்தவர்களின் கடிதங்களை மனமில்லாமலே போடுவோம். இதுதான் இயல்பு. ஒரு வேலைக்காரி தனக்கு அதிக வேலை கொடுக்கும் சாமானை எளிதாக உடைத்துவிடுவாள்; தன் வேலையைக் குறைக்கும் சாமானை உடைக்கமாட்டாள். "அம்மா, சட்டியை எடுத்தேன்; கையிலே இரண்டாய் வந்துட்டுது" என்று சொல்வாள். தன் எஜமானிமீது அவளுக்கு இருக்கிற எரிச்சல்தான் சட்டி உடைந்ததன் காரணம். இவைகளில் எல்லாம் மனிதர்கள் உண்மையை மறைத்துப் பொய் சொல்லுகிறார்கள் என்று எண்ண வேண்டாம். அவர்களுடைய மனம் அவர்களே அறியாதபடி பொய்க்காரணம் புனைகிறது.

மனம் மிக விசித்திரமான இயல்புடையது. ஆகவே, பெற்றோர், ஆசிரியர், குருமார் இவர்களெல்லாம் மனத்தின் முரண்பட்ட தன்மைகளை அறிந்துகொள்ள வேண்டும்; அவை தனி மனிதனுடைய வாழ்க்கையில் அவனுக்குச் சக்தியும் சுதந்திரமும் பூர்ண வாழ்வு வாழ்வதற்கு உரிய தகுதியும் அளிக்கும்படி அவைகளை உருவாக்க முயலவேண்டும்.

குழந்தை மனம்: குழந்தை மனத்தின் முக்கிய இயல்புகள் இவை: 1. சூழ்நிலை அதை எளிதில் தாக்கும். 2. இயற்கைத் தூண்டுதல்கள் அதை ஆளும். 3. கற்பனை சக்தி அதில் மிகுந்திருக்கும்.

முதலாவது, சூழ்நிலையைக் கவனிப்போம். குழந்தை பிறக்கு முன்பு தாயின் மனப்பான்மைகள் குழந்தையின் மனத்தைப் பாதிக்கும். கருவுற்றிருக்கும் தாய் தன் மனத்தில் சிடுசிடுப்பு, துயரம், கோபம் இவைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. ஒரு தாய் தன் குழந்தைக்குப் பால் கொடுப்பதற்கு முன், ஏதோ ஒரு விஷயமாக மகா கோபத்தோடு இருந்தாள். அவள் மனத்தில் ஏற்பட்ட கொதிப்பு, மார்பில் உள்ள பாலை விஷமாக்கிவிட்டது. அந்தப் பாலைக் குடித்த குழந்தை தூங்கி வழிவதுபோல் தாயின் மடியிலே செத்துச் சாய்ந்தது. இதை ஒரு வைத்திய நிபுணர் சொல்லியிருக்கிறார். புட்டிப் பாலைப் புகட்டுகிற தாதிகூடக் கோபம் முதலிய உணர்ச்சிகள் கொள்ளக்கூடாது. அதனாலும் குழந்தை பாதகமடையும்.

ஆபத்தில் சிக்கிக்கொள்ளாதபடி மனிதனைக் காப்பதற்கு அச்சம் பயன்படுகிறது. ஆயினும் அநாவசியமாகப் பயப்படும் கோழைத்தனத்தைக் குழந்தைகளுக்கு நாம் புகட்டக்கூடாது. தப்பான அபிப்பிராயம் ஒன்று குழந்தையின் மனத்தில் ஒரு முறை விழுந்துவிட்டால், பிறகு அதை மாற்றுவது கஷ்டம். மற்றவர்கள் தனக்கு அநீதி செய்தாலும், தன்னை ஏளனமாகப் பேசினாலும், தன்னை வியந்து பாராட்டினாலும் குழந்தையின் மனம் எளிதாகப் பாதிக்கப் பெறும். தன்னிடம் நமக்கு அநுதாபம் உண்டு என்று அது அறிந்துகொள்ளும் வகையில் நாம் நடந்துகொள்ளவேண்டும். தான் எந்தக் காரியத்தையும் சரியாகச் செய்ய முடியாது என்று குழந்தை எண்ணும்படி நாம் நடந்துகொள்ளலாகாது.

இரண்டாவது, இயற்கைத் தூண்டுதல்களைப் பார்க்கலாம். நமது பகுத்தறிவே நம் செயல்களுக்கு எல்லாம் காரணம் என்று

எண்ணி நாம் பெருமை அடையலாம். அது உண்மை அல்ல. நமது பகுத்தறிவுக்குப் பத்து அல்லது இருபது வயதே ஆகியிருக்கும்; ஆனால் நம் இயற்கைத் தூண்டுதல்களுக்கு ஆயிரக்கணக்கான வயது. மனித குலத்துக்குப் பரம்பரையாக உள்ள இயற்கைத் தூண்டுதல்களால்தான் நாம் செயல் செய்ய முற்படுகிறோமே தவிர, சொற்பகாலப் பயிற்சியின் பலனாக மனத்துக்குக் கிடைத்த புதிய கருத்துக்களால் அல்ல.

இயற்கைத் தூண்டுதல்கள் எத்தனை, இவைகளின் தன்மை என்ன என்பதைப்பற்றி மனத்தத்துவ சாஸ்திரிகள் இன்னமும் ஒரு முகமான முடிவுக்கு வரவில்லை. என்றாலும், இவைகளை விசாலமான மூன்று பிரிவுகளுக்குள் அடக்கலாம்: (1) 'நான்', 'எனது' என்ற தன்னுணர்ச்சி; (2) இன உற்பத்தி உணர்ச்சி; (3) சமுதாய உணர்ச்சி.

குழந்தை பிறக்கும்போது, இந்த இயற்கைத் தூண்டுதல்கள் எல்லாம் அதற்குள் அடங்கி மந்தமாகக் கிடக்கின்றன. உரிய பருவங்களைக் குழந்தை அடையும்போது, இவை ஒவ்வொன்றாகத் தலை காட்டுகின்றன. மனித ஜாதியின் பரிணாமத்தில் சில நெருக்கடிகளையும் தேவைகளையும் சமாளிக்கவே இந்தத் தூண்டுதல்கள் தோன்றின.

குழந்தை ஒரு பிராயத்தில் வேட்டையாட விரும்புகிறது; மற்றொரு பிராயத்தில் கிளி, மைனா முதலிய பிராணிகளை வைத்துக் கொண்டு விளையாட விரும்புகிறது. ஆதி மனிதர்கள் இடம் விட்டு இடம் போய் வேட்டையாடியதால் இந்தத் தூண்டுதல்கள் பிறந்தன. குழந்தை பல சாமான்களைச் சேகரித்துச் சொந்தமாக வைத்துக் கொள்கிறது. ஆதி மனிதர்கள் அலைந்து திரிவதை விட்டுப் பயிர்த் தொழிலில் இறங்கியது இந்தத் தூண்டுதலின் காரணம். சிறுவன் இளமையில் நண்பர்களிடம் பழகி அன்பு கொள்ளுகிறான். பிறகு ஒரு பருவத்தில் ஓர் இளம் பெண்ணை நிமிர்ந்து பார்க்க ஆசை கொள்கிறான். இந்த இயற்கைத் தூண்டுதல்கள் தனித் தனியே வெவ்வேறு பருவத்தில் பலமாக வெளிப்படுகின்றன. என்றாலும் குழந்தையின் விளையாட்டுப் பருவத்தில் எல்லாமே ஓரளவு வேலை செய்கின்றன.

இந்த ஒவ்வொரு தூண்டுதலும் உயிர் வாழ்க்கைக்கு அவசியம். **பயந்து ஓடுவது,** தன்னைப் பாதுகாத்துக் கொள்ள; **காமம்,** இன உற்பத்திக்காக; **தாய்மை ஆசை,** பிள்ளைகளைப் பேணிப் பாதுகாக்க; **எதையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற இச்சை,** தெரியாத விஷயங்களில் சிக்கி ஆபத்துக்குள்ளாகாமல் தப்பித்துக் கொள்ள.

ஆனால், மனிதனுக்கு உதவியான இந்த இயற்கைத் தூண்டுதல்கள் எல்லாமே அக்கிரம வழியில் திரும்பக் கூடியவை. மனித வாழ்க்கை ஓர் அழகிய நந்தவனம்; அதைப் பேணாமல் விட்டு வைத்தால் சோம்பல், பயம், அறியாமை, தந்திரம், முதலிய பல களைகள் மலிந்து அதைப் பாழாக்குகின்றன. இதற்காக அவைகளை அடக்கி வைப்பதும் தவறு. மனிதனுக்கு நல்ல லட்சியங்களைக் கொடுத்து அவனைப் பண்படையச் செய்யும்படி அவைகளை உயர் நெறியில் செலுத்த வேண்டும். அவைகளை அடியோடு ஒழிக்க முயன்றால் அவை மாறு

ரூபம் எடுத்து நிர்ப்பிரக்ஞை மண்டலத்தில் போய்ப் பதுங்கிக் கொள்ளும்; அவைகளின் இயல்பான வளர்ச்சி தடைப்பட்டபடியால், நமது பிற்கால வாழ்க்கையையே வேரறுத்து விடக் கூடிய விஷத்தை அவை ரகசியமாக விருத்தி செய்துவிடும். சண்டையிடுவது இயற்கைத் தூண்டுதல்; கட்சி சேர்ந்து விளையாடுவதிலும் பலவீனனை ஆதரிப்பதிலும் அதைத் திருப்பி விடலாம். பிறருடைய வாழ்க்கை விவரங்களை விசாரித்துப் புறம் சொல்லித் திரியும் இயல்பை, வான ஆராய்ச்சி முதலிய துறைகளில் திருப்பலாம்.

ஒரு சிறுவன் அழுக்குக் காலோடு மெத்தையின் மேல் ஏறி நின்று கொள்ளுகிறான்; கையில் ஒரு தடியைப் பிடித்துக்கொள்கிறான். பாட்டியம்மாளைப் பார்த்து, "ஏ பொக்கை வாய்ப் பாட்டி, நான் யார் தெரியுமா? நான்தான் ராஜா. என்னைக் கும்பிடு" என்கிறான். 'பயலுக்கு இவ்வளவு மண்டைக் கொழுப்பா!' என்று நாம் நினைப்பது பிசகு. பிற்காலத்தில் தலைவனாக விளங்கக் கூடிய சக்தி அவனிடம் இருக்கிறது. அதுவே இப்படிக் கட்டு மீறிப் பொங்குகிறது. ஏணியில் ஏறிய 'ராஜா'வைக் கீழே இறங்கச் சொல்ல வேண்டியது தான். ஆனால், அவனுடைய சக்திகளை நல்ல வழியில் திருப்ப வேண்டும்.

இன்னொரு பையன்: அளவுக்கு மிஞ்சிய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வளர்ந்தவன். யார் கேட்டாலும் தன் பொம்மைகளைக் கொடுத்து விடுவான். பிறர் சொல்வதற்கெல்லாம் 'ஆம்' போடுவான். பெற்றோருக்கும் உறவினருக்கும் நாய் போல் படிந்து கிடப்பான். இவனை 'நல்ல பிள்ளை' என்று நாம் நினைப்போம். ஆனால், இவன் குணம் போற்றத்தக்கதல்ல.

முடிவாக நாம் கவனத்தில் பதிக்க வேண்டியது இதுதான்: இயற்கைத் தூண்டுதல்களை அடக்கவும் கூடாது; கேவலம் உயிர் வாழ்வதற்கு மட்டுமே பயன்படுத்தவும் கூடாது. நாகரிக வாழ்வுக்கு உதவும்படி அவைகளை மாற்றி விட வேண்டும்.

இனி, மூன்றாவது விஷயம். குழந்தையின் மனம் மிகுந்த கற்பனா சக்தி உடையது. பழைய நாற்காலி ஒன்றை, அதிவேகமாக ஓடும் மோட்டார்-காராகக் கற்பனை செய்துகொள்ளும். மணல் வீடு கட்டி, அதைப் பெரிய பங்களாவாகப் பாவனை செய்யும். தேவதைகளைப்பற்றிய கதைகளைக் கேட்கும்போது, உற்சாகத்தால் குழந்தையின் கண்கள் மலர்ந்து ஒளி விடும். கதையில் வரும் பாத்திரங்களோ சம்பவங்களோ உண்மையாக இருக்குமா என்று அது கவலைப்படுவதில்லை. பகுத்தறிவு வளர வளர அதன் கற்பனா சக்தி குறைந்துவிடுகிறது.

ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் சில தகரப் பொம்மைச் சிப்பாய்களை வைத்துக்கொண்டு, பட்டாளம் நிர்வாகம் செய்துகொண்டிருந்தான். பக்கத்தில் துணி தைத்துக்கொண்டிருந்த தாய், "சின்னத் தம்பி, என் கத்தரிக்கோலை எடுத்து வாயேன்" என்றாள். "எடுத்து வருகிறேன், அம்மா. ஆனால் இனி என்னை என் சிப்பாய்களுக்கு முன்னே 'சின்னத் தம்பி' என்று கூப்பிடாதே" என்று அவன் கேட்டுக் கொண்டான். சேனாதிபதியின் அந்தஸ்துக்குப் பங்கம் வரலாமா!

பெற்றோருக்கு ஒரே பிள்ளையாக இருக்கும் குழந்தை, தம்பி தங்கைகள் இல்லாத தனிமையைச் சமாளிக்கச் சில குறும்புகள் செய்யும். முதியவரைப் போல் வார்த்தைகளைச் சிறுவர் நிறுத்துப் பேசமாட்டார்கள். பிறர் உடைமைபற்றிப் பெரியவர்களுக்கு இருக்கும் அறிவைச் சிறுவரிடம் எதிர்பார்க்க முடியாது. இதைக் குற்றமென்று எண்ணி அவர்களைத் தண்டிக்கக் கூடாது.

"அம்மா, அம்மா, நம் தோட்டத்திலே ஒரு யானை வந்து நிற்கிறது!" என்று கத்திக்கொண்டே ஓடிவந்தாள் ஒரு சிறுமி. தாய்க்குக் கோபம் வந்துவிட்டது. "முட்டாள் கழுதை! தோட்டத்துக்குள் நிற்பது யானையா? பழைய மரக்கட்டை என்று உனக்குத் தெரியும். பின்னே ஏன் பொய் சொன்னாய்? பொய் சொன்ன பாவம் போக, அறைக்குள்ளே போய் மண்டியிட்டு அரை மணி நேரம் கடவுளைப் பிரார்த்தனை செய்" என்றாள். சிறுமி அப்படியே அறைக்குள் போய் அரைமணி நேரம் கழித்துத் திரும்பி வந்தாள். "பிரார்த்தனை செய்தாயா?" என்று தாய் கேட்டாள். ஆம், அம்மா. பிரார்த்தனை செய்தேன். கடவுள், 'நானும் அதை யானை என்றுதான் நினைக்கிறேன்; ஆனால் இதை உன் அம்மாவிடம் சொல்லிவிடாதே' என்றார்" என்று பதில் அளித்தாள் சிறுமி. தேவதைகளையும் அமானுஷ்ய சம்பவங்களையும்பற்றிய கதைகளைக் கேட்டிருக்கும் சிறுமி, தன் கற்பனைத் திறத்தால் சொல்லும் சொல்லைப் 'பொய்' என்று கண்டிக்கலாமா?

குழந்தை வளர்ப்பில் முடிவாக ஒரு விஷயத்தை உணர்ந்திருக்க வேண்டும்: கடவுள் படைத்த படைப்புக்குள்ளேயே மிக மிருதுவாக - சூழ்நிலையால் மிக எளிதிலே பாதகம் அடையக்கூடியதாக - இருப்பது குழந்தையின் மனம்.

இன உற்பத்தித் தூண்டுதல்: ஆண்களுக்குப் பதினாலு முதல் இருபத்தைந்து வயது வரைக்கும், பெண்களுக்குப் பதின்மூன்று முதல் இருபத்தொரு வயது வரைக்கும் கௌமாரப் பருவம். இதை அடைந்ததும் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருவர்மீது ஒருவருடைய மனம் செல்கிறது. எதையும் அறிந்துகொள்ளும் ஆசை, சண்டையிடுவது, பயந்தோடுவது முதலிய இயற்கைத் தூண்டுதல்களைப் போலவே, இன உற்பத்தித் தூண்டுதலும் பிறப்பு முதலே அவர்களிடம் இருந்து வருகிறது. ஆனால் பாலியப் பருவத்தில் இது உணர்ச்சி வேகம் கொள்வதில்லை. எதையும் அறிந்துகொள்ளும் ஆசை, கூடிவாழ்வது முதலிய பிற தூண்டுதல்கள் இதை ஊக்கப்படுத்துகின்றன. இது புது வேகத்துடன் விழித்துக்கொண்டு, ஆணுக்கும் பெண்ணுக்கும் பரஸ்பர ஆர்வத்தை உண்டாக்குகிறது.

இன உற்பத்தித் தூண்டுதல், இயற்கையின் மிக அழகிய கருவி; அறிவின் தாய்; சன்மார்க்கத்தின் தந்தை. ஆனால், இதை 'மிகவும் கீழ்த்தரமானது, மிருகத்தனமானது' என்று பொதுவாக ஜனங்கள் கருதுகிறார்கள்; இதைப் பற்றி எண்ணவோ, பேசவோ, எழுதவோ கூடாதென்று அஞ்சுகிறார்கள். மனிதரால் - அதுவும் இளைஞரால் - அடக்கவே முடியாத கனவேகம் படைத்தது இந்த இயற்கைத் தூண்டுதல். ஆனால், குழந்தைப் பருவத்திலும் வாலிபப் பரு

வத்திலும் இது பிள்ளைகளிடம் தலை காட்ட ஆசிரியரும் பெற்றோரும் அநுமதிப்பதில்லை. இது சரி அல்ல.

குழந்தைப் பருவத்திலும் பாலயப் பருவத்திலும் ஒரு பிள்ளைக்கு அதன் உடலும் ஸ்பர்ச உணர்ச்சியுமே பிரதான அநுபவங்கள். அதற்கு நாணம் என்ற உணர்ச்சி இல்லை. தன் உடலில் மற்ற இடங்களைக் காட்டிலும் வாய், ஜனன உறுப்புக்கள், ஆசனம் இவைகளில் விரல் படும்போது அதிக இன்பம் உண்டாவதைக் குழந்தை கண்டுகொள்கிறது. அதனால் இவைகளை மீண்டும் மீண்டும் தொட அது விரும்புகிறது. இதைக் கண்டு பெற்றோர் திடுக்கிட்டுத் தடை செய்கிறார்கள். இப்படிக்கின்றி, இதைக் கவனியாமல் விடுவதே நல்லது. ஆனால், வேலையாள் யாராவது தன் இன்பத்துக்காகக் குழந்தையின் இந்த உறுப்புக்களைத் தொட்டு விளையாடினால், அந்த ஆளை உடனே விலக்கி விடவேண்டும். குழந்தையைக் குளிப்பாட்டும்போதோ அதற்கு வேறு சுசுரூஷைகள் செய்யும் போதோ, குழந்தையின் மற்ற உறுப்புக்களைப் போலவே இந்த உறுப்புக்களையும் பாவித்துக் கூச்சமின்றி நாம் நடந்துகொள்ள வேண்டும்.

காதல் வாழ்க்கை சம்பந்தமாகப் பிள்ளைகள் ஏதாவது சொன்னாலும், பிள்ளைப்பேறு சம்பந்தமாக என்னவாவது கேள்வி கேட்டாலும், ஆசிரியரும் பெற்றோரும் அவர்களை வாயடக்கி விடுவார்கள்; அல்லது அரை குறை உண்மையையோ முழுப் பொய்யையோ சொல்லி மழுப்புகிறார்கள். பிள்ளைகளின் கௌமாரப் பருவம் வரைக்கும் பெரியவர்கள் இதை மூடி மூடி வைக்கிறார்கள்; பயந்து சாகிறார்கள். உரிய வயது வரும்போது, இதுபற்றிய அறிவு பிள்ளைகளுக்குச் சிறிதும் இல்லாமற் போகிறது; அல்லது தவறான கருத்துக்கள் உண்டாகி விடுகின்றன. அதனால் பல விபரீதங்களும் துர்ப் பழக்கங்களும் நேருகின்றன.

போர்டிங் பாடசாலையில் படிக்கும் பையன் ஒருவனுக்கு இரவில் ஸ்கலிதமாயிற்று. அதைக் கண்ட அவன் தனக்கு ஏதோ கொடிய மேகரோகம் ஏற்பட்டு விட்டதென்று பயந்து, ஆறு வருஷ காலம் மன வேதனைப்பட்டுக்கொண்டிருந்தானும்! தொப்புள்குமிழ் வழியாகத்தான் குழந்தை பிறக்குமென்று ஒரு பெண்ணுக்கு யார் சொன்னார்களோ தெரியவில்லை; தனக்கு வயதாகியும் தன் தொப்புள் குமிழ் பருத்து வளராமல் சிறிதாகவே இருக்கக் கண்டு அவள் பயந்து நடுங்கிக்கொண்டிருந்தாளாம்! இன்னொரு பெண் பி. ஏ. படித்தவள்; ஒரு நாள் அவளை ஓர் இளைஞன் முத்தமிட்டு விட்டான். உடனே தன் வயிற்றில் குழந்தை வந்துவிடுமென்று பயந்து, இரவெல்லாம் தூக்கமில்லாமல் அவள் அவதிப்பட்டுக்கொண்டிருந்தாள். காலையில் படுக்கை யண்டையில் 'கிரீச்' என்ற ஒரு சப்தத்தைக் கேட்டு, தனக்குக் குழந்தை பிறந்தே விட்டதென்று நடுங்கினாள். ஏதோ ஒரு பாட்டில் சறுக்கி விழுந்த ஒலியே அது என்று கடைசியில் அறிந்த பிறகுதான், அவள் கலக்கம் தீர்ந்து மூச்சு விட்டாளாம்!

இவ்வித அறியாமையாலும், ஆசிரியர் பெற்றோர் இந்த விஷயத்

தில் விதித்த எண்ணிறந்த தடைகளாலும் பல தீமைகள் விளைகின்றன. பையன்களும் பெண்களும் ஒருவரிடம் ஒருவர் சகஜமாகப் பழகாமல் விகற்பமாக நடக்கிறார்கள். இவர்களுக்கு மணமான பிறகும் கெடுதி விளைகிறது. தம்பதிகளுக்குள் சண்டை, மகிழ்ச்சியற்ற இல் வாழ்க்கை, விவாக ரத்து இவையெல்லாங்கூட இதனால் விளைகின்றன. இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் கஷ்டம் அநுபவிக்கின்றன.

முதலாவது, இவ்விஷயத்தில் இதுவரையில் நாம் கைக்கொண்ட கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். இரண்டாவது, சிறு பிள்ளைகளுக்கும் சரி, பெரிய பிள்ளைகளுக்கும் சரி, ஆண் - பெண் சம்பந்தமான தகவல்களை ஆரோக்கியமான முறையில் கற்பிக்க வேண்டும். மூன்றாவது, ஆணுக்கும் பெண்ணுக்கும் கூட்டுக் கல்வி முறையை அநுஷ்டிக்க வேண்டும். நான்காவது, காம இச்சையையும் மகப் பற்று ஊக்கத்தையும் உயர் நெறியில் மடை மாற்றி விட வேண்டும்.

(1) ஆண், பெண் ஜனன உறுப்புக்களின் அமைப்பு; (2) கௌமாரப் பருவத்தில் இருவர் உடலிலும் ஏற்படும் மாறுதல்கள்; (3) ஆண் பெண் சேர்க்கை, கருத் தரிக்கும் விதம், கரு வளர்ச்சி, குழந்தை, அதன் பிறப்பு; (4) ஜனன உறுப்புக்களை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளும் மார்க்கம் - இந்த விஷயங்களையெல்லாம் அந்த அந்தப் பிள்ளையின் இயல்புக்கு ஏற்றபடி சிறிது சிறிதாகச் சொல்லித் தர வேண்டும்.

ஒன்று முதல் பதின்மூன்று வயது வரைக்கும் இந்த விஷயங்களைப் பெற்றோரே பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும். இவைபற்றிப் பிறரிடம் அறிந்துகொள்ளவோ, புத்தகங்களில் படிக்கவோ அவர்களுக்கு இடம் அளிக்கக் கூடாது. உணர்ச்சி வசப்படாமலும் பரபரப்பில்லாமலும் கூடுதல் குறைவின்றியும் தேவையான அளவு தகவலைப் பெற்றோர்தான் தெரிவிக்கவேண்டும். ஆண் குழந்தைக்குத் தந்தையும் பெண் குழந்தைக்குத் தாயும் போதிக்க வேண்டும்.

பதின்மூன்று தொடங்கிப் பதினாறு வயது வரையில் வீட்டிலே பெற்றோர் வழி காட்டவேண்டும். இந்தப் பருவத்தில் பாடசாலையின் பொறுப்பும் அதிகம். ஆசிரியர்களும் இப்போது போதிக்க வேண்டும். பிற பாடங்களைப் போல் கால அட்டவணை போட்டு இவ்விஷயத்தைச் சொல்லித் தரலாகாது. வகுப்பறைகளிலும் போர்டிங் விடுதிகளிலும் வெளி இடங்களிலும் இதுபற்றிப் பேசும் சந்தர்ப்பங்கள் எழும். பெண்கள் ஆசிரியையின் தலைமையிலும், ஆண்கள் ஆசிரியரின் தலைமையிலும் கூடிப் பேசலாம். ஆசிரியைகளும் ஆசிரியர்களும் சன்மார்க்கமுள்ளவராக இருப்பது அவசியம்.

இன உற்பத்தித் தூண்டுதலை உயர் நெறிகளில் திருப்பி விடுவது, ஆண் - பெண் சம்பந்தமான கல்வியில் ஓர் அம்சம். இந்தத் தூண்டுதலை ஒரு கால்வாய் வழியே ஓடும் பிரவாகம் என்று வைத்துக் கொள்ளலாம். பிரவாகத்தைத் தடுக்கக் கூடாது. தடுத்தால் அமைதியைக் குலைக்கும் சொப்பனங்கள், காம விகாரச் சிந்தனைகள், நரம்பு மெலிவு, தளர்ச்சி முதலிய பெருங் கேடுகள் விளையும். இதை விட்டு, எண்ணிறந்த உயர்ந்த வழிகளில்

அந்தப் பிரவாகத்துக்குப் போக்குக் காட்டலாம். இன உற்பத்தி வேகம் பொதுவாக ஆக்க வேலை செய்யும் இயல்புடையது. சித்திரம் தீட்டுவது, எழுதுவது, பின்னுவது, இசைக் கருவிகளை வாசிப்பது, தோட்டம் போடுவது, சமுதாய சேவை, சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம் இவையெல்லாம் ஆக்க வேலைகள். பிள்ளைகளை அவரவர் இயல்புக்கு ஏற்ற இந்தமாதிரி வேலை எதிலாவது புகுத்தலாம்.

சமயப் பற்றுக்கும் இன உற்பத்தித் தூண்டுதலுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதாகத் தற்கால மனத்தத்துவ சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆகவே, இந்தத் தூண்டுதலைத் தெய்வபக்தியாக மாற்றலாம். பின்னால் மனித சமூகத்திடமே காட்டும் அன்பாக இது விரிகிறது.

முடிவாக, இன உற்பத்தி ஊக்கம் கடவுள் அருளிய பெரிய வரம். அதை அசுத்தமானது என்று எண்ணி அடக்கி ஒடுக்க முயன்றால், அது தன்னையும் தன்னைச் சூழ்ந்த சமூகத்தையும் அழிக்கும் வெறியுடன் கிளம்பிவிடும். அதை நல்ல முறையில் பயிற்றுவித்துப் பண்படுத்தினால், அது தன்னையும் மனித சமூகத்தையும் சமாதான மார்க்கத்தில் செலுத்தி இன்ப வாழ்வு அளிக்கும்.

குண வளர்ச்சி: இயற்கைத் தூண்டுதல்களால் ஏவப் பெற்றுக் குழந்தை செயல் செய்கிறது. அழகாக வளர்ச்சி அடைந்த குணங்களை அதனிடம் எதிர்பார்க்க முடியாது. தான் செய்வது சரியா, தப்பா என்று அது கவனிப்பதில்லை. சன்மார்க்கம், துன்மார்க்கம் என்ற வேற்றுமையெல்லாம் குழந்தைக்கு இல்லை.

தான் செய்யும் சில செயல்களால் சில தீமைகள் விளைவதை முதலில் அது தெரிந்துகொள்கிறது. தரை கடினமாக இருப்பதையும், நெருப்புச் சுடுவதையும் அறிந்துகொள்கிறது; அதற்கு ஏற்றபடி தன் இயற்கைத் தூண்டுதல்களை அடக்கிக்கொள்கிறது. இதுவே குண வளர்ச்சியின் முதல் படி. இதை **விவேக நிலை** என்று சொல்லலாம்.

பொருள்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள வேறுபாடு அடுத்தபடியாக அதற்குத் தெரிகிறது. தான் செய்யும் சில காரியங்களைப் பெரியவர்கள் சரி என்று ஒப்புக்கொள்வதையும், வேறு சில காரியங்களைத் தப்பென்று தடுப்பதையும் உணர்கிறது. பெரியவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று, அது தன் இஷ்டத்தை அடக்கிச் செயல் புரியத் தொடங்குகிறது. இது **ஒப்பும் நிலை**.

வளரும் சிறுவனைச் சூழ்ந்திருப்பவர்களின் தொகை அதிகரிக்கிறது. தானும் அவர்களில் ஒருவன் என்று அவன் உணர்கிறான். அவர்களுடைய கருத்துக்கு முரண்பட்ட காரியங்களைச் செய்யக் கூடாதென்று தீர்மானிக்கிறான். இது **சமூக நிலை**.

நம்மில் சிலருடைய குணம் இந்தச் சமூக நிலை அளவுக்குத்தான் வளர்கிறது. தனக்குத் தீமை நேரக் கூடாது, தன் காரியங்களைப் பிறர் அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காகச் சொந்தத் தூண்டுதல்களை அடக்கிக்கொள்ளும் இந்த நிலை மேலானதல்ல. நாம் இதையும் விட உயர வேண்டும். சமூகம் என்ன சொல்லும், சட்டம் எப்படி இருக்கிறது என்றெல்லாம் அஞ்சாமல், தனக்கு ஒரு லட்சியத்தை வகுத்துக்கொண்டு, அதை அடையும்

நெறியில் நடப்பதே சிறந்த குணம். இதைச் சுய நிலை என்று குறிப்பிடலாம்.

பிள்ளைகளுக்குப் படிப்படியாகக் கல்வி போதிப்பதைப் போலவே, ஒவ்வொரு நிலையாகக் குணத்திலும் அவர்கள் வளரும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். பிள்ளைகள் கையால் செய்யும் வேலை அழகாய் இல்லாவிட்டாலும் பாராட்டுகிறோம்; அறிவில் நமக்குச் சமமாக அவர்கள் இருக்க முடியாதென்று அறிந்து அவர்களிடம் அநுதாபம் காட்டுகிறோம். குண விஷயத்தில் மட்டும் அவர்களைக் குறை சொல்கிறோம்; கண்டித்துத் திருத்த முயல்கிறோம். இப்படி அதிசீக்கிரம் குணவளர்ச்சி அடைய அவர்களை நாம் துரிதப்படுத்துவதால், நமது அதிகாரத்தையே அவர்கள்மீது சுமத்துகிறோம். ஆகவே, பிள்ளைகள் தாமாக அடங்கி ஒழுக்கத்துடன் நடக்கும் உயர்நிலைக்கு வருவதில்லை. பயத்தால் கட்டுப்பட்டு நடக்கும் கீழ்நிலையிலேயே நின்றுவிடுகிறார்கள்; குன்றிவிடுகிறார்கள்.

வாழ்க்கையைப்பற்றிய பொதுவான கருத்துக்கள் இளம் வயதிலேயே ஒருவனுக்கு ஏற்பட்டுவிடுகின்றன. அவன் வளர வளரப் புதிய புதிய அநுபவங்களும் கருத்துக்களும் உண்டாகின்றன. என்றாலும், இளமையில் அவன் கொண்ட கருத்துக்களே அவனுடைய பிற்கால வாழ்வு முழுவதற்கும் மேனி கொடுக்கின்றன. ஆகவே, நற்குண வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலையும் சந்தர்ப்பங்களும் வீட்டிலே அமைந்திருக்க வேண்டும். சிறு பிள்ளைகள் நல்ல முறையில் வளர்ந்து வர இது மிகவும் அவசியம்.

சந்தோஷமற்ற இல்வாழ்க்கையின் காரணங்கள்: ஆயிரக்கணக்கான தம்பதிகளை ஆராய்ந்த ஒரு பிரபல டாக்டர், மண வாழ்க்கை இன்பமற்றுச் சோக முடிவு அடைவதற்கு, இந்த நாலு காரணங்களையும் வரிசைக்கிரமமாகக் குறித்திருக்கிறார். (1) புருஷனுக்கும் மனைவிக்கும் கலவி உணர்ச்சிபற்றிய வேறுபாடு; (2) ஓய்வு நேரத்தை எப்படிக் கழிப்பது என்பதில் அவர்களுக்குள் ஏற்படும் அபிப்பிராய பேதம்; (3) பணக் கஷ்டம்; (4) புருஷன் அல்லது மனைவியின் அசாதாரணமான உடற் கூறு, உள்ளப் பான்மை, மன எழுச்சி.

காம நுகர்ச்சிபற்றிச் சரியான அறிவு இல்லாததாலேயே, பல தம்பதிகளின் வாழ்க்கை நாசமாகிறது. இந்த அறியாமையை ஒழிப்பது அவசியம். சாஸ்திரீயமாகத் தெளிந்த அறிவோடு கண்ணியமாக இதுபற்றி எழுதப்பெற்ற புத்தகங்களைப் படிக்க வேண்டும். ஆபாசமான நூல்கள் எத்தனையோ கிளம்பி இருக்கின்றன. அவைகளைத் தீண்டவும் கூடாது.

சில பெண்கள் மணமான புதிதில் பிறந்தகமே சொந்தமென்றும் புக்ககம் அந்நியமென்றும் எண்ணி நடக்கிறார்கள். இதனால் பல தொல்லைகள் விளைகின்றன.

மணமான பெண் புக்ககமே தன் வீடென்றும் புருஷனின் பந்துக்களே தன் பந்துக்களென்றும் மதித்து நடக்கவேண்டும். பெண்ணின் பெற்றோரும் அவளை இனி வேறு குடும்பத்துக்குச் சொந்தமானவள் என்று கருத வேண்டும். அடிக்கடி பிறந்தகத்துக்கு அவள் ஓடி வர இடம் கொடுக்கக் கூடாது. ஓடி வந்தாலும் புக்ககத்துக்கு

உடனே திருப்பி அனுப்பி விட வேண்டும்.

நம் குடும்பங்களிலே மாமி - மருமகள் சண்டை பிரசித்தம். மாமி தன் மகனை மருமகள் தன்னிடமிருந்து பிரித்துவிடுகிறாள் என்று பொறாமைப்படுவதாலேயே இந்தச் சிக்கல் பெரும்பாலும் எழுகிறது. குடும்பத்திலுள்ள மதனிமார், நாத்திமார் முதலிய மற்றவர்களையும் இந்தப் பொறாமை பீடிக்கிறது. அவர்கள் கையில் இந்தப் புதுப் பெண் படும் பாடு சகிக்க முடியாதது. தான் புது மருமகளாக இருந்த காலத்தில் தனக்கு இருந்த ஆசைகளையும் எண்ணங்களையும் மாமி நினைத்துப் பார்க்க வேண்டும். இளந் தம்பதிகள் தனித்துக் களித்திருக்க அவர்களுக்கென்று ஓர் அறையை ஒழித்துக் கொடுக்க வேண்டும். அவர்கள் இன்பத்தோடு வாழ்வதற்கு மற்றவர்கள் இடையூறு செய்யக்கூடாது. ஜப்பான் தேசத்தில் பெண்கள் பாடசாலையில் 'மாமி - மருமகள்' என்ற விஷயத்தைப் பாடத் திட்டத்தில் சேர்த்துப் போதித்து இதுபற்றிப் பரீட்சையும் வைக்கிறார்கள். நம் பெண் பாடசாலை, சமயஸ்தாபனம், சமூகச் சீர்திருத்த சபை, பத்திரிகை முதலியவையும் இதைப் பின்பற்ற வேண்டும்; மாமி - மருமகளுடைய உரிமைகளையும் கடமைகளையும் பெண்களுக்குப் போதிக்க வேண்டும்.

இந்த மாதிரி காரணங்களால் யாருடைய இல்வாழ்க்கையாவது மகிழ்ச்சியற்றிருக்குமானால், அவர் அதைரியப்பட வேண்டியதில்லை. காவியங்களில் கற்பனை செய்யப் பெற்றிருப்பதைப் போல் பழுதற்ற மனைவியோ, கணவரோ தமக்குக் கிடைப்பார் என்று எவரும் எதிர்பார்க்கக் கூடாது. நம்முடைய அன்பும் அநுதாபமும் சகிப்புத் தன்மையுந்தான் மற்றவர்களுடைய குறைவைப் பாராட்டாமல் நாம் திருப்தி அடையச் செய்யும். இந்த இயல்புகளைப் பெறக் கணவனும் மனைவியும் முயன்றால், அவர்களுடைய வாழ்க்கை களிப்புள்ளதாகும்.

சந்தோஷமுள்ள இல்வாழ்க்கைக்கு வழி: இது முந்திய பகுதியின் தொடர்ச்சியே.

(1) 'உன் மண வாழ்க்கையில் பெரியவனாக இரு; குழந்தையாக இராதே.' பல குடும்பங்களில் சிக்கலுக்குக் காரணம், புருஷனோ மனைவியோ துஷ்டத்தனம் வாய்ந்திருப்பதல்ல; அவர்கள் வயதுக்குத் தக்க உடல் வளர்ச்சி பெற்றிருந்தாலும், மன வளர்ச்சி அடையாமல் சிறுவராக இருக்கிறார்கள். பெற்றோரையும் பெரியவர்களையும் சார்ந்து வாழ்வது குழந்தையின் இயல்பு. மற்றவரைச் சார்ந்து வாழும் இந்த இயல்பு மாறாததால், மனைவி கீழ்ப்படிய வேண்டுமென்று புருஷனும், புருஷன் தனக்கு இணங்கி நடக்கவேண்டுமென்று மனைவியும் எதிர்பார்க்கிறார்கள். இந்த இயல்பை விட்டு, புருஷனும் மனைவியும் மனவளர்ச்சி பெற்ற பெரியவர்களாக நடந்து கொள்ளவேண்டும்.

(2) 'ஒருவரை ஒருவர் குற்றம் சொல்லாதீர்கள்.' குற்றம் சொல்வதால் குடும்பத்தில் சந்தோஷம் குறைகிறது. புருஷனும் மனைவியும் தம் வீட்டுக்கு வெளியே யாரிடமும் சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசக் கூடாது. பந்துக்கள் அல்லது சிநேகிதர்களின் முன்பு கணவனும் மனைவியும் பரஸ்பரம் தூறு சொல்லக்கூடாது. இதனை

லெல்லாம் சதிபதிகளுக்குள் அன்பு கெடும்.

(3) 'பாராட்ட வேண்டியதைப் பாராட்டிப் புகழவேண்டும்.' ஜார் அரசன் ஆளும் காலத்தில், ருஷியப் பிரபுக்கள் விருந்து சாப்பிட்டு முடிந்ததும், சமையல்காரனைத் தங்கள் மத்தியில் வரவழைத்துப் பாராட்டுவார்களாம். இப்படி யிருக்க, நாம் நம் மனைவிமாரைப் பாராட்டத் தடை என்ன? நல்ல சாம்பார், கூட்டு, கறி வகைகள் கிடைக்கும் போது புல்லைத் தின்பது போல உணர்ச்சியற்றுச் சாப்பிட்டு எழுந்து போவது தகாது.

(4) 'பரஸ்பரம் மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும். ஒரு யந்திரம் சிக்காமல் வேலை செய்வதற்கு எண்ணெய் உதவுவது போல, வாழ்க்கை அழகாக நடைபெற உதவுவது மரியாதை. தமது கடையில் சாமான் வாங்க வரும் ஒருவரிடமோ, தம்முடைய பங்காளியிடமோ சினந்து பேசத் துணிவில்லாத பலர், வீட்டிலே மனைவிமாரைக் கடித்து விடுவது போல் சீறி விழுகிறார்கள். கடையைக் காட்டிலும் வீடும், மற்றவரைக் காட்டிலும் மனைவியும் தமது வாழ்க்கையின் சந்தோஷத்துக்கு முக்கியம் என்பதை அவர்கள் உணரவேண்டும். இளம் மனைவிகள், அந்நியருக்கு மரியாதை காட்டுவது போல் தங்கள் புருஷருக்கும் காட்டினால் எவ்வளவு நலமாயிருக்கும்! கடுகடுவென்று பேசும் வாயாடிப் பெண்களைப் புருஷர்கள் விரும்ப மாட்டார்கள். மரியாதையற்ற முரட்டுக் குணம் அன்பை வேரறுத்துவிடும்.

(5) 'பொறுமை வேண்டும்.' புருஷனும் மனைவியும் வெவ்வேறு வீடுகளில் வெவ்வேறு பழக்க வழக்கங்களுடன் வளர்ந்தவர்கள். இப்போது அவர்கள் ஒன்று கூடி வாழத் தொடங்கும் போது சில சிக்கல்கள் எழுவது இயற்கை. இவைகளைச் சமாளிக்க, ஒருவரிடம் ஒருவர் பொறுமை காட்ட வேண்டும். என்ன நேர்ந்தாலும் பரஸ்பரம் மன்னித்து விட வேண்டும்.

(6) 'மன ரம்மியமாக வாழத் தெரிந்து கொள்ளுங்கள்.' மணம் முடிந்த பிறகு, அது புனிதமானதென்றும் கடவுளுடைய திட்டமென்றும் எண்ணிக் கொள்ள வேண்டும். ஏழாம் எட்வர்டு மன்னர் இளவரசராக இருந்தபோது, ஜெர்மன் அரசருடைய மாளிகையில் ஒரு சமயம் விருந்துண்டார். விருந்தில் கலந்துகொண்ட மற்ற இளவரசர்களும் பிரபுக்களும், 'இன்று உலகத்திலுள்ள பெண்களில் யார் மிக அழகி?' என்பது பற்றிப் பேசிக்கொண்டார்கள். ஒருவர் ஒரு பாரிஸ் பெண்ணையும் மற்றொருவர் ஒரு யூதப் பெண்ணையும் வேறொருவர் ஒரு கிரேக்கப் பெண்ணையும் இன்னொருவர் ஓர் இந்தியப் பெண்ணையும் குறிப்பிட்டார்கள். எட்வர்டு இளவரசரின் முறை வந்தது. அவர், "என் மனைவி" என்றார். அப்போது பிற இளவரசர்களும் பிரபுக்களும் வெட்கமுற்றுத் தலை குனிந்தார்கள். ஒவ்வொரு பெண்ணிடமும் ஆணிடமும் பிறர் கண்டு பிரீதி கொள்ளக்கூடிய ஏதாவது அம்சம் இல்லாமற் போகாது. இந்த அம்சத்தைக் கணவனிடம் மனைவியும் மனைவியிடம் கணவனும் கண்டு, நித்தமும் தங்கள் காதலைப் புதுமையுடன் காத்துக்கொள்ளலாம்.

வாழ்க்கையின் இறுதிக் காலம்: முதியவர்களில் இரண்டு வகை.

ஒரு வகையினர் தங்களுடைய பழைய பலம் குன்றிப் போய் விட்டதை எண்ணுவதில்லை. ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பல பெரிய காரியங்களை இழுத்துப் போட்டுக்கொள்வார்கள். இதனால் அநாவசியமாகப் பல மன நோய்களுக்கும் உடல் நோய்களுக்கும் ஆளாவார்கள். அவர்களுக்கு எளிதிலே கோபம் வரும். தலைவலியோடும் தூக்கம் இல்லாமலும் அவர்கள் அவதிப்படுவார்கள். கடைசியில் நரம்புத் தளர்ச்சியும் அடைவார்கள். மற்றொரு வகையினர், தங்கள் ஆற்றலில் பெரும் பகுதி ஏற்கனவே செலவாகிப் போனாலும் இன்னும் ஓரளவு மிஞ்சியிருப்பதை உணர்வதில்லை. தம் இறுதி நாட்களைப் பயனற்ற ஓய்விலும் சென்ற நாட்களை நினைத்து வருந்துவதிலும் போக்குவார்கள்.

லௌகிக வாழ்க்கைக்கு அப்பாற் செல்லும் ஞான திருஷ்டி இல்லாதவர்களுடைய முதுமை அவர்களுக்குப் பாரமாக இருக்கும். மரணத்தோடு எல்லாம் முடிந்து போகிறது என்று எண்ணும் நாஸ்திகன் ஒருவன், நம்பிக்கையும் நன்மையின் நிச்சயமும் இல்லாதவனாய், மரணத்துக்குப் பின் மகிமையும் புதுமையுமான பெருவாழ்வு உண்டென்று நம்பிப் பிறருடன் இனிதாகப் பழகி இன்ப வாழ்வு வாழ முடியாது.

நம் இந்திய அறிஞர்கள் ஒரு மனிதனின் வாழ்க்கை முறையை நான்காகப் பகுத்திருக்கிறார்கள்; (1) பிரம்மசரியம்; இது ஓர் ஆசிரியனிடம் அமர்ந்து கல்வியும் நல்லொழுக்கமும் பயிலும் இளமைக் கால நியதி. (2) கிருகஸ்தம்: இல்வாழ்க்கை நியதி. (3) வானப்பிரஸ்தம்; லௌகிக விவகாரங்களிலிருந்து விலகி, ஒதுங்கி வாழும் முன் முதுமைக் காலம். (4) சந்நியாசம்: சகல பற்றுக்களையும் துறந்து, தானும் ஆன்ம நாட்டம் உடையவனாய்ப் பிறரையும் ஆன்ம வாழ்வுக்குப் பக்குவப்படுத்தும் பின் முதுமைக் கால நியதி. இந்த நான்காவதே இறுதி நாட்களில் அழகாக வாழும் சிறந்த முறை.

குடிகாரத் தோழன் உபதேசம்

இரண்டு குடிகாரர்கள் குடித்துக்கொண்டிருந்தார்கள். பல புட்டிகள காலியாகிவிட்டன.

அப்போது ஒருவன் குடித்துக்கொண்டே மற்றவனுக்கு உபதேசிக்கத் தொடங்கினான்:

“அண்ணே, ரொம்பக் குடிச்சிட்டே. போதும்; இனிமேக் குடிக்காதே. உன் முகமெல்லாம் ஒரேயடியாப் பூச்சி பறக்குது” என்றான்.

—ஆங்கிலத்திலிருந்து.

கல்விச் சாதனம்!

‘டெலிவிஷன்’ காட்சி என் விஷயத்தில் பெரிய கல்விச் சாதனமாக இருக்கிறது. என் வீட்டில் யாராவது ‘டெலிவிஷன்’ கருவியைத் திருகிக் காட்சி பார்க்கத் தொடங்கும் போதெல்லாம் நான் அடுத்த அறைக்குப் போய் ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு ‘ஜம்’ என்று படிக்கத் தொடங்கிவிடுகிறேன்.

—கிரௌச்சோ மார்க்ஸ்

குடை பிடித்தவர் பட்ட பாடு

குடை பிடித்துக் கொள்ளும் வழக்கம் நம் நாட்டிலும் பிற கீழ் நாடுகளிலும் மிகப் பழங்காலத்திலிருந்தே இருந்து வருகிறது. வால்மீகி ராமாயணத்தில்கூடக் குடையைப்பற்றிய குறிப்பு இருக்கிறது. கிறிஸ்து பிறப்பதற்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பே அஸிரியா நாட்டில் குடை இருந்ததாகத் தெரிகிறது.

ஆனால் இங்கிலாந்தில் பதினெட்டாம் நூற்றாண்டில்தான் குடை தோன்றியது. முதல் முதலில் 1750-ஆம் வருஷம் ஜோனஸ் ஹான்வே என்பவரே இங்கிலாந்தில் முதல் முதலாகக் குடை பிடித்த புருஷர். அதற்கு முன்பு அங்கே எவரோ சில பெண்கள் மட்டும் குடை பிடித்துக் கொள்வதுண்டாம். ருஷியாவிலும் பாரசிகத்திலும் பிரயாணம் செய்தவர் ஹான்வே. அங்கெல்லாம் ஜனங்கள் குடை பிடித்துக்கொள்வதைக் கண்டபின்தான் அவர் லண்டனுக்கு வந்து தாமும் குடை பிடித்துக்கொள்ளத் தொடங்கினார். இதைக் கண்டு எல்லாரும் ஹான்வேயைக் கேலி செய்தார்கள். சிறுவர்கள் அழுகிய பழங்களையும் முட்டைகளையும் வீசி அவரைத் தொல்லை செய்தார்கள். "கடவுள் எதற்காக மழையைப் பெய்கிறார்? மனிதனை நனைப்பதற்காகவே. அதைத் தடுக்க உதவும் குடை கடவுளுக்கே விரோதமானது" என்றுகூடப் பலர் சொன்னார்கள். ஆனால் இதையெல்லாம் ஹான்வே சிறிதும் பொருட்படுத்தவில்லை. "இன்னும் சில வருஷங்கள் கழித்து எல்லாரும் குடைபிடித்துக் கொள்ளப் போகிறார்கள்" என்று அவர் சொல்லி வந்தார்.

ஹான்வே எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. குடை பிடித்துக்கொள்ளும் பழக்கம் நாட்டில் சகஜமாகப் பரவ வெகுநாள் பிடித்தது. ஹான்வே இறந்து 30 வருஷங்களுக்குப் பிறகு கேம்பிரிட்ஜில் ஒரே ஒரு குடையை வைத்துக்கொண்டு வாடகைக்கு விட்டு வந்தார்கள். பிறகு சில ஹோட்டல்காரர்களும் வண்டிகளை வாடகைக்கு விடுவதுபோல் குடைகளை வாடகைக்கு விட்டுவரத் தொடங்கினார்கள்.

இன்னும் கொஞ்சகாலத்துக்கெல்லாம் எங்கும் குடை பரவியது. பலபேர் குடை பிடித்துக்கொள்ளத் தொடங்கினார்கள். அப்போது ஜனங்களிலே மூன்று வகுப்பார் இருப்பதாகப் பேசிக்கொள்வார்கள்: வண்டி வைத்துக்கொள்ளக்கூடிய சீமான்கள் முதல் வகுப்பினர்; குடை வைத்துக்கொள்ளக் கூடிய கனவான்கள் நடுத்தர வகுப்பினர்; இரண்டும் வைத்துக்கொள்ள முடியாத ஏழை மக்கள் கடைசி வகுப்பினர்!



EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.